
Registered No. M. 1514

பிரமோதூத ஞூ தை, மாசிமீ




*The Progressive Printers.* *17, Coral Merchant Street, Madras*

# செங்குந்த குல மக்களுக்கு ஓர் வேண்டுகோள்

தறி நெய்வதற்கான புதிய முறையில் தயாரித்துள்ள நூல் அண்டு பட்டு பாவுகள் யாவும் ஓடும் ஆலைகளும் நூல் இழைக்கும் பருவட்டம் இராட்டினங்களும் தார் சுத்தும் ராட்டினங்களும் நாங்கள் சுமார் மூன்று தலை முறையாக தயாரித்து வருவதால் வேண்டியவர்கள் நேரிலும் தபால் மூலமாயும் பெற்றுக்கொள்ளலாம். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்றுள்ளது. விலை விபரங்களுக்குக் கீழ்கண்ட விலாசத்துக்கு எழுதி தெரிந்துக் கொள்ளலாம்.

தளவா. முருகப்ப முதலியார்

,, மா. கன்னியப்ப முதலியார்

ஆலை வியாபாரம்

குருவராயப்பேட்டை

(அரக்கோணம் மார்க்கம்.)




## உள்ளடக்கம்


| | |
|---|---|
| பாமாலைப் பகுதி | 2 |
| பத்திரிகாசிரியர் முன்னுரை | 3 |
| குலாபிமானப் பகுதி :—செங்குந்தரும் சிதம்பர சபாநாயகர் திருவநந்தல் காலை சந்திக் கட்டளையும் | 5 |
| அறிவியல் பகுதி:—II நெருப்புக்கற்கள் | 8 |
| செங்குந்தர் இரண்டாவது மகாநாடு கூடவிருக்கும் காஞ்சீபுரத்தின் தலமான்மியம் | 10 |
| நாவல் பகுதி:—மீனாட்சி சுந்தரம் (அல்லது) விவேகமுள்ள சுந்தரம் | 14 |
| செங்குந்த யாத்திரைவாசி | 18 |
| புது உலகமும் பழைய உலகமும்:—உலக நிலக்கட்டலை வர்த்தகம் | 23 |
| நம்மவர் கைத்தொழில் வியாபாரங்களின் தற்கால நிலையும் அவைகளை வளர்க்கும் முறைகளும் | 25 |
| தலைச்சங்கம்:—பிரதி நிதிகள் சுற்றுப் பிரயாணம் | 30 |
| தென்னிந்திய செங்குந்தர் இரண்டாவது மகாநாடு | 31 |
| நிரூபங்கள்:—நமது இரண்டாவது மகாநாடு | 31 |
| ஒரு விசனிக்கத்தக்க சம்பவம் | 32 |
| சுகாதாரப் பகுதி:—தேக சுகம் | 34 |
| வர்த்தமானம் | 36 |
| மாதர் பகுதி:—மாத ரொழுக்கக் கும்மி | 39 |
| அருட் குழவி | 40 |
| விகடத் துணுக்குகள் | 41 |
| ஆன்றோர் அமுத மொழிகள் | 42 |
| தொழில் பகுதி:—நாடா நெய்தல் | 43 |
| செங்குந்தர் கல்வி நிதி:—காப்பாளர் சபையின் முதல் கூட்டம் | 46 |
| தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் | 46 |
| செங்குந்தர் கிளர்ச்சி | 48 |

# பாமாலைப் பகுதி

## வீரவாகுதேவர் திருப்புகழ்

தந்த தந்த தந்தனந்த—தனதான

கந்த மஞ்சள் குங்கு மங்கள்
சிந்தூரந்து லங்கு மங்கை
கண்க ளம்பை வென்ற இந்து முகமாலால்.

கம்ப கும்ப செந்தனங்கள்
நன்றி தென்று வொன்றி வம்பு
கண்டு சிந்தை வெம்பி நின்று திரியாதே.

சந்த மிஞ்சவும் பதங்கள்
கொண்டு தொண்டினங் கலந்து
தண்டை கொஞ்சு பொன் பதங்கள்
தொழுமாறே.

சண்டன் வந்து மண்டு முன்பு
மங்கை குந்த மொன்ற வின்று
சந்ததம் பதம்புயங்கள் தருவாயே.

வந்தி முன்பு சென்று செங்கை
கொண்டு மண் சுமந்தும் சந்தி
மங்கை இந்து வொன்று நம்பன் மகிழ் பாலா.

மந்திகொண்டிலங்கை வென்ற
விண்டுவும் புகழ்ந்த கந்தன்
மண்டு வண்டர் சண்டை வென்ற அதிவீரா.

இந்திரன் பயந்த கந்த
நந்தனர் தனந்துலங்க மிஞ்சு
மின்புடன் சலங் கொணர்ந்த கரிசேசா.

என்று மெங்கள் நெஞ்சில் வந்து
நின்று சந்து வென்றி தந்து
இன்று மன்பர் குந்தர் சொந்த பெருமானே.

நா. குமரகுரு முதலியார்,
தமிழ்ப் புலவர்.

---

## வளையற் காப்பு நன்கொடைகள்.

### மாயவரம் தாலூக்கா. கீழையூர் அ. சோக்கலிங்க முதலியார் வசூல்

(1) பிரமோதூத ஞூ தை மீ 12உ மாயவரம் தாலுக்கா மேலப் பெரும் பள்ளம் திரு. ஓ கோவிந்தசாமி முதலியார். மனைவி ஸ்ரீமதி. இராஜம்மாளுக்கு நடைப் பெற்ற வளையற் காப்பு முகூர்த்தத்தில் நமது தலைச் சங்கத்திற்கு நன்கொடை — அணா 0—8—0

(2) ஷை ஞூ ஷை மீ ஷை தேதி ஷை ஊர் திரு. மு. துரைசாமி முதலியார் குமாரத்தி. ஸ்ரீமதி இரத்தினம்மாளின் வளையற் காப்பு முகூர்த்தத்தில் நமது தலைச்சங்கத்திற்கு நன் கொடையாக அளிக்கப்பெற்றது. — அணா 0—4—0

(3) பிரமோதூத ஞூ தை மீ 19உ ஞாயிறன்று மாயவரம் தாலுக்கா, செம்பொனர் கோவில் மேலக் கட்டளை கீழத் தெருவு. திரு. சு. கணபதி முதலியார் குமாரத்தி ஸ்ரீமதி காயாம்பூ அம்மாளின் வளையற் காப்பு முகூர்த்தத்தில் நமது தலைச் சங்கத்திற்கு நன் கொடையாக வழங்கியது ரூ. 1—0—0 ரூபாய் ஒன்று.

(4) வது ஷை ஞூ ஷை மாதம் ஷை தேதி மேலக் கட்டளை மேலத் தெருவில், திரு. துரைசாமி முதலியார் குமாரத்தி ஸ்ரீமதி இராஜம்மாளுக்கு நடந்தேரிய வளையற் காப்பு முகூர்த்தத்தில் நமது தலைச் சங்கத்திற்கு நன்கொடை யளித்தது. — அணா 0—௨—0

(5) ஷை ஞூ. ஷை மாதம் ஷை தேதியில் மாயவரம் தாலுக்கா - புஞ்சை. திரு. முத்துக்குமர முதலியாரவர்களின் குமாரத்தி ஸ்ரீமதி. விசாலாக்ஷி அம்மாளின் வளையற் காப்பு முகூர்த்தத்தில் நன்கொடை யளித்தது. — அணா 0—4—0

ஆகமொத்தம் வசூல் ரூ. 2—8—0

---

## காஞ்சிபுரம் இரண்டாவது மகாநாட்டு வரவேற்புச் சபைக்கூட்டம்

**7—3—31**-சனிக்கிழமை மாலை 4-மணிக்குப் பிள்ளையார் பாளையம் மண்டபத் தெரு செங்குந்தர் இரவு பாடசாலைக் கட்டிடத்தில் நடை பெறும் அவ்வமயம் தலைவர் தேர்தல், மகாநாட்டைக் கூட்டும் நாள் முதலியவைகளைத் தீர்மானிக்கப்படும். அதுபோது அனைவரும் வரும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இங்ஙனம்
ம. முருகேச முதலியார்
காரியதரிசி

---

# செங்குந்தமித்திரன்

5 - AUG 1931

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

ஆசிரியர் :—ம சண்முகசுந்தர முதலியார், எம். ஏ., எல். டி.

தொகுதி—ரு] பிரமோதூத வருஷம் தை, மாசி மாதங்கள் [பகுதி—க, உ

## பத்திரிகாசிரியர் முன்னுரை

### மகா நாடு

தலைச் சங்கத்தாரின் முயற்சியால் மகாநாட்டு வேலை வெகு மும்முரமாக நடந்து கொண்டிருக்கிறது. தலைச் சங்கத்தின் சார்பாகத் திருவாளர்கள் பி. செ. மாணிக்க வாசக முதலியார் அவர்களும் மா. அ. கனக சபை முதலியார் அவர்களும் ஊர் ஊராகச் சென்று சிரமம் பாராது செய்து வரும் முயற்சிகளுக்கு உதவியும் உற்சாகமும் இன்பமும் அளிக்குமாறு திருவாளர்கள் தி. நா. சபாபதி முதலியார் அவர்களும், வீ. இரத்தின முதலியார் பி ஏ. பி. எல். அவர்களும், தி. அ. சண்முக முதலியார் அவர்களும் காஞ்சிக்குச் சென்றிருக்கின்றனர். இன்னும் செய்யக் கிடக்கும் வேலைகளின் அபாரமான தன்மையை நோக்கும்போது இவர்களைப் போன்று ஐந்தத்தனை பேர்கள் முனைந்து உழைப்பதாயினும் அத்தனை பேர்களின் முயற்சியும் இப் பெரிய காரியத்துக்கு அவசியமே என்பதில் சிறிதும் ஐயமில்லை, ஆகவே, இந் நிலையில், காஞ்சி வாசிகளுள் செல்வமும் செல்வாக்கும் நிறைந்தவர்கள் சிலரும், அதற்கடுத்த கிராமங்களிலுள்ள பிரமுகர்கள் சிலரும், சென்னைக்கடுத்துள்ள சைதாப்பேட்டை திருநாகேசுவரம் முதலிய இடங்களிலுள்ள தனவந்தர்கள் சிலரும் முன் வந்து சிறிது தியாக சிந்தையோடு உழைத்து இம் மகா நாட்டைத் தங்கள் கௌரவத்துக்குத் தக்க மாதிரி நடத்தி வைக்க முயல வேண்டியது மிகவும் அவசியம் என்பது உண்மைக் குலாபிமானம் படைத்த எவரும் உணர வேண்டியதே. கட்சிச் சண்டைகளுக்காகக் கணக்கிட முடியாத பணத்தை இப் பஞ்சகாலத்திலும் கோர்ட்டுகளுக்கும் வக்கீல்களுக்கும் கொட்டிக் கொடுக்க வல்ல ஆற்றலுடைய செங்குந்த கனவான்களுக்கு இம் மகா நாட்டை விமரிசையாக நடத்தி வைப்பது இயலாத காரிய மல்ல வென்பதை அவர்களுக்கு ஞாபக மூட்ட விரும்புகிறோம். அவர்கள் மனம் மட்டும் இதில் செல்ல வேண்டும். மன முண்டேல் வழியுண்டு.

---

### பத்திரிகை

நமது செங்குந்த மித்திரனின் ஐந்தாம் ஆண்டின் முதல் மலர் நாள் பொறுத்து வந்ததற்கு அன்பர்களை மன்னிக்குமாறு வேண்டிக் கொள்ளுகிறோம். அதற்குப் பல காரணங்களுள. சந்தா நேயர்கள் பாக்கிச் சந்தாத் தொகைகளைச் செலுத்தாததினால் சென்ற வருஷ முடிவிலேயே பணமுட்டு ஏற்பட்டுக் கடன் வாங்கிப் பத்திரிகையை வெளியிட வேண்டியதாயிற்று. இவ்வாண்டு முதலிலும் அந்நிலை எவ்விதத்திலும் மாறுதலடைந்திலது. பிரசாரகர்களை வசூலுக்கு அனுப்பலாமென்றாலோ, அவர்கள் மகா நாடு சம்பந்தமான பல அலுவல்களில் ஒத்தாசை புரிய வேண்டியவர்களாக இருக்கின்றனர். ஒவ்வொரு ஆண்டின் தொடக்கத்திலும், தலைச்

சங்கத்தினர் ஏதாவது ஒரு பார அலுவலில் ஈடுபடவேண்டியதாயிருப்பதை அன்பர்கள் அறிவார்கள். மூன்றாம் ஆண்டின் தொடக்கத்தில் முதல் மகா நாட்டு வேலைகளும், சென்ற ஆண்டின் தொடக்கத்தில் கல்வி நிதிச் சீட்டின் வேலைகளும், இவ் வாண்டின் தொடக்கத்தில் இரண்டாவது மகா நாட்டின் வேலைகளும் அவர்கள் ஊக்கத்தையும் உழைப்பையும் நாடி யிருப்பதன் பயனாகவே, இவ் வருஷங்களில் ஒவ்வொரு ஆண்டில் முதலி லும் நமது மித்திரன் நாள் பொறுத்து வர வேண்டியதாயிற்று. மகா நாட்டு முயற்சி சம்பந்தமாக மேல் குறிப்பிட்டுள்ளதிலிருந்து, மித்திரன் காரியாலயத்துச் சிப்பந்திகள் முதல் தலைச் சங்கத்தின் நிருவாக சபை அங்கத்தினர் ஈறாக உண்மைக் குலத் தொண்டர்கள் அனைவரும் அதில் ஈடுபட்டிருப்பது அன்பர்களுக்கு விளங்கும். இதர பிரமுகர்களிடமிருந்து இன்னும் சிறிது ஒத்தாசை கிடைப்பதாயிருந்தால், மேற் குறிப்பிட்டுள்ளாவர்களுள் சிலரை மித்திரன் வேலையைத் துரிதமாக நடத்தச் செய்திருக்கலாம். இந் நெருக்க சந்தர்ப்பத்தில், எமக்கும் பத்திரிகைகளின் அலுவல்களைத் தனிமையாகக் கவனிக்க உடல் நலன் குறைந்தமையாலும், பல மாதங்களாகத் தள்ளி வைத்திருந்த பல சொந்த அலுவல்களைக் கவனிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டபடியாலும் எம் மாலும் ஒத்தாசையின்றி எக்காரியத்தையும் கவனிக்க முடியவில்லை. இந்நிலையில் எமது பாரங்களைக் குறைத்து உதவிபுரிய முன்வந்து 'நமது 'மித்திரன்' அச்சுவேலை அனைத்தையும் கவனித்துக் கொள்வதாக எமது நண்பர் திருவாளர் வீ. இரத்தினமுதலியார் பி. ஏ. பி. எல். அவர்கள் இசையாதிருந்தால், 'மித்திரன்' இப்பொழுதும் வெளிவருவதற்கு இல்லாமற் போயிருக்கும். தக்க சமயத்தில் கைகொடுத்துதவிவரும் திரு. வீ. இரத்தின முதலியார் அவர்களுக்கு எமது நன்றி என்றும் உரியதாகுக.

எமது சொந்த அலுவல்களைக் கவனிக்க வேண்டியும் உடல் நலனைப் பாதுகாக்க வேண்டியும் யாம் சிறிது காலம் தலைச் சங்கத்தின் அமைச்சர் பதவியின் பொறுப்புக்களை விட்டு ஒய்வெடுத்துக்கொள்ள அவசியம் ஏற்பட்டிருப்பதால், அப்பதவியினின்றும் யாம் தற்போது விலகிக்கொண்டுள்ளோம். இதனால் அன்பர்கள் எமக்குக் குலமுன்னேற்ற விஷயத்தில் ஊக்கங் குறைந்து விட்டதென்று நினைத்துக் கொள்ளக் கூடாது. குல முன்னேற்ற சம்பந்தமான அடிப்படையான வேலைகளை யெல்லாம் யாம் நான்கு வருஷங்களாகச் செய்து முடித்து வைத்து நமது சங்க விஷயங்களை ஓர் ஒழுங்காக்கிவிட்டோமாதலின், இனியும் எமது இடைவிடா உழைப்பு நமது சங்கத்துக்கும் பத்திரிகைக்கும் அவ்வளவு அவசியமில்லை யென்பதை அன்பர்கள் ஒப்புக் கொள்ள வேண்டியதே. மேலும், வாழ்க்கைப் போராட்டத்தின் முன்னணியில் நின்று கொண்டு தன்னந்தனியனாய் அமர்புரிந்து தன்னலனையும் தன் குடும்பநலனையும் தன் உழைப்பினாலேயே தேடிக் கொள்ள வேண்டிய நிலையிலிருக்கும் ஒரு முப்பத்து நான்கு வயது இளைஞனை அந்நிலையை மறந்து குல நலனுக்காக ஒய்வொழிவின்றி என்றும் உழைத்துத் தனக்கும் தன் குடும்பத்தாருக்கும் தான் இயற்ற வேண்டிய கடமைகளில் தவற வேண்டுமென எவரும் வற்புறுத்த மாட்டார்கள் என்றே நம்புகின்றோம். தலைச் சங்கத்தின் அமைச்சர் பதவியை வகிக்க வேண்டியவர் வயது முதிர்ந்தவராகவும், குடும்பக் கவலைகளின்றியும் உத்தியோக நிர்ப்பந்தங்களின்றியும் இதர பொறுப்புக்களின் பாரமின்றியும் பொது நலனுக்கு உழைக்க வல்ல ஒய்வும் ஊக்கமும் வசதிகளும் உள்ளவராகவும் இருத்தல் வேண்டுமென்பதை அன்பர்கள் உணராமலிரார். ஆகவே, இது வரை எமக்கு ஊக்கமும் உற்சாகமும் ஊட்டிப் பலவித ஒத்தாசைகளும் புரிந்து தலைச்சங்க அமைச்சரின் பொறுப்புக்களை எமது ஆற்றலுக்கும் சந்தர்ப்ப அனுகூலங்களுக்கும் தக்கவாறு ஏற்று நிர்வகிக்கத் துணையாயிருந்தவர்களனைவருக்கும் இச் சந்தர்ப்பத்தில் எமது நன்றியைச் செலுத்திவிட்டு, இனியும் குலமுன்னேற்ற விஷயமாக ஊக்கமும் அபிமானமுங் குறையாது நமது தலைச் சங்கத்துக்கும் மித்திரனுக்கும் கல்வி நிதிக்கும் ஆன ஒத்தாசைகளை எம்மால் இயன்றவரை யாதொரு மனத்தளர்வுமின்றிச் செய்து வருவோம் என்பதை அன்பர்களுக்கு ஊர்ச்சிதப்படுத்துகின்றோம்.

ம. ச.

158895

# குலாபிமானப் பகுதி

## செங்குந்தரும் சிதம்பரம் சபாநாயகர் திருவநந்தல் காலைசந்திக் கட்டளையும்

[திருவாளர் வை. ச. இராமலிங்க முதலியார் அவர்கள், கண்டாச்சிபுரம்]

*நம்புலிக்காலர் பதஞ்சலிபோற்ற நடித்தருளும்*
*அம்புலிச்செஞ் சடையார்க்கடியா ரடையார்க [ளுக்கோர்*
*வெம்புலிக்கொல் லெனவந்துதித்தோ ரிந்தமே [தினியிற்*
*செம்புலித்தண்டை விருதுபெற்றோர்களிச் செங் [குந்தரே*

*(செங்குந்தர்மாலை)*

"வடவேங்கடம் தென்குமரியாயிடைத்
தமிழ்கூறும் நல்லுலகம்"—

எனப் பொதிகையில் வதியும் குடமுனியின் சீடரான ஒல்காப்பெரும்புகழ்த் தொல்காப்பியனாரால் வரையறுத்துக் கூறப்பட்ட நம் செந்தமிழ் நாட்டினில் காவிரி நதி பாயுஞ் சோழ வளநாடே மிக்க சிறந்தது. காவிரி நதியின் பெருமையோ கணிக்கலாந்தகைமைத் தன்று. சாத்தனார் மணிமேகலையுள்

"கோணிலை திரிந்துகோடை நீடினுந்
தானிலை திரியாத் தண்டமிழ்ப்பாவை"

என வியந்து கூறியுள்ளார். இத்தகைய வளம் பொலியு மந்நதி பாய்வதால், அந்நாடு மிகவுஞ் செழித்தோங்கி, நீர்வளம், நிலவளம், குடிவளமாதியவை பெருகி, முப்போகமும் விளைந்து, எப்போதும் நல்வளம் பெற்றிருக்குஞ் சீர்மையையுடையது. அதனாலன்றோ நமது செந்தமிழ்ச் செல்வியாகிய ஒளவைப் பிராட்டியார் "சோழ வளநாடு சோறுடைத்து" என மிகவும் பெருமைபடுத்திப் பாராட்டிக் கூறியுள்ளார்.

இவ்வாறு எல்லா நலனுமினிது பொருந்தி விளங்குஞ் சோழ வளநாட்டிலே, விராட் புருடனுக்கு இருதய கமல ஸ்தானமாய் விளங்குவதும், வேதாகம புராண இதிகாசங்களிலும், தசிசேப கிடதம் முதலிய மகா வுபநிடதங்களாலும், மிகவும் புகழ்ந்து கூறப்படுவதும், பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்னும் பஞ்ச பூதஸ்தலங்களில் ஒன்றாய்ச் சிறந்து விளங்கப் பெறுவதும், திருச்சிற்றம்பலமென்னும் ஞான மகா சபையைத் தன்னுள்ளே செறியப் பெற்று விளங்குவதும், ஆன்மகோடிகளுய்யும் பொருட்டு சிவபெருமான் பஞ்சகிருத்திய திருமேனிகொண்டு ஆனந்த தாண்டவஞ் செய்தருளப்பட்டதுமான திவ்யத் தலம் ஸ்ரீசிதம்பரம் எனப்படும். சிதம்பரம் என்பதற்கு (சித் + அம்பரம்) சித்தாகிய வெளியை (சிதாகாச வெளி)க் குறிக்கும் இருதய கமலஸ்தானம் என்பது பொருள். "தில்லை மூதூராடிய திருவடி" என்று மணிவாசகப் பெருந்தகையால் சிறப்பித்துக் கூறப்படுவது மித்தலமே யாமென்க. இதற்குப் பெரும்பற்றப் புலியூர், புண்டரீகபுரம், தில்லை நகர், எனப் பல திருநாமங்கள் வழங்குகின்றன. இத்தகைய பெருமை வாய்ந்த சிதம்பரத்திலே நமது பண்டைப் பெரியோர்களாய செங்குந்தகுலத் தலைவர்களால் ஸ்ரீ ஆனந்த தாண்டவ திரு நடங்குயிற்றும் அழகிய திருச்சிற்றம்பலமுடையாராகிய ஸ்ரீமந் நடராஜ மூர்த்திக்கும், சிவகாமசுந்தரியம்பாளுக்கும், தேவ சபையாகிய பேரம்பலம் தில்லை நாயகருக்கும் சிவானந்த நாயகி அம்மையாருக்கும், ஸ்ரீ மூலநாதஸ்வாமிகளுக்கும் உமைய பார்வதியம்மையாருக்கும், நிருத்த ஸபை நிருத்த தாண்டேசுர மூர்த்திக்கும், வள்ளி தெய்வயானை சமேத குமாரஸ்வாமியாருக்கும், ஆகிய இத்தியாதி சந்நிதானங்களுக்கெல்லாம் நித்தியமும், திருவநந்தல் பால் நிவேதனமும், ஸ்தல புண்ணியா வசனமும், அபிஷேகமும், நைவேத்தியமும், சோடச வுபசார தீபாராதனையும், உச்சி காலத்தில் சத்திரமும், சாயங்காலம் நெய்விளக்கும், அர்த்த சாமத்தில் வில்வார்ச்சனையும், ஆனி உத்திரத்திலும், மார்கழி திருவாதிரையிலும், சிதாகாச வெளியாகிய இரகசியத்துக்குப் பட்டுத் திரையும், புனுகு காப்பும் ஆகிய வைபவங்களோடு என்றும் நடைபெறும்படியாய் ஏற்படுத்தப்பட்ட நமது திருவநந்தல் காலை சந்திக் கட்டளை தர்மமொன்று நிலவி வருவது நம்மனோர் யாவருக்குந் தெரிந்த விஷயமே. இத் தருமகைங்கர்யமானது நம் தென்னிந்தியாவிலுள்ள ; செங்குந்தர்களின் பேராதரவினால், பூர்வம் நம் முன்னோர்கள் நியமித்தபடி நமது 72-நாடுகளிலும், திசை நாடுகளிலும், மகா நாட்டிலுமுள்ள நம்மவர்களின் றொழில் விருத்தியாகிய தறி 1-க்கு வருஷம் 1-க்கு ரூபா 0-2-6 வீதம் வரி வசூலித்து வருஷப் பிரதி வருஷம் வரும் அவ்வரும்படியின் நிதியைக் கொண்டு நமது செங்குந்த குலத் தலைவரான உயர்திரு ஸைவத் திருவாளர் சிதம்பரம் வெல்லப் பிறந்தான் முதலியார் குடும்பத்தினரால் பரம்பரை பாத்தியமாக இன்றும் செவ்வனே நடந்தேறி வருகின்றது. செங்குந்தர்கள் வதியும் ஒவ்வொரு கிராமத்திற்கும் ஷை கட்டளை வசூலுக்காக வருஷப் பிரதி வருஷத்திலும் மேல்கண்ட நமது முதலியார் குடும்பத்தினரின் ஏஜண்டுகள் வந்து, ஆங்காங்குள்ள கிராம பெரிய தனக்காரர் நாட்டாண்மைக்காரர் முதலியவர்க

ளின் உதவியால் வரிவசூலித்துக்கொண்டுபோவார்கள். சில நாடுகளில் தறி 1-க்கு ரூபா 0-3-0 மூன்றணா வீதமும், இன்னுஞ் சில நாடுகளில் தறி 1-க்கு ரூபா 0-4-0 நாலணா வீதமும் வரி இருப்பதாகத் தெரிகிறது. பல கிராமத்தார்கள் தாங்களே வரியை வசூல்செய்து சேருகிற பணத்தை நேரே மணியார்டர் மூலமாகவாவது அல்லது ஆட்களின் மூலமாகவாவது அனுப்பி வருகிறார்கள். இது நல்ல உத்தமமான முறை யென்பதை இங்கு அன்பர்களுக்கு ஞாபகமூட்டுகிறோம். சந்திராதித்தர் உள்ளவரைக்கும் நம் செங்குந்த வுலகம் பூராவும் இவ்வாறே இத் தரும கைங்கர்யத்துக்காகத் தறிகளின் பேரில் வரி வீதம் போட்டுப் பொருளுதவி புரிவதாகக் கட்டுப்பட்டு நமது மூதாதையர்கள் சிலாஸாஸனம் செப்புப் பட்டயம் செய்து கொடுத்திருக்கிறார்கள். காஞ்சீபுரம் மகா நாட்டாரும் திசை நாட்டாரும் மற்றேனைய பல நாட்டார்களும் செய்து கொடுத்த பல செப்புப் பட்டயங்கள் இன்றும் நமது வெல்லப் பிறந்தான் முதலியார் குடும்பத்தினர் வசம் இருந்துகொண்டிருக்கிறது. அவைகளை ஷை முதலியாரின் பிற்கால வழித்தோன்றலாகிய திரு. வெ. சிதம்பரநாத முதலியாரின் மாதுலர் திருவாளர். தீ. தா. இராஜமாணிக்க முதலியார் அவர்கள் நம்மிடம் நேரில் காட்ட பார்த்து வாசித்துமுள்ளேன். ஸ்ரீமந் நடராஜப் பெருமானுக்கு நடைபெறும் பல தர்ம கைங்கரியங்களைக் காட்டிலும், அதிகாலையில் திருப்பள்ளியெழுச்சி செய்வித்து, பெருமானுக்குப் பற்கொம் புதவுதல், பால் நிவேதனம் நிவேதித்தல், பஞ்சாங்கம் கூறுதல், ஸ்தபன புண்ணியாவசன, அபிஷேக ஆராதனை, அன்ன நைவேத்தியம், நெய் விளக்கு, வில்வார்ச்சனை முதலிய வைபவங்களோடு நடைபெறும் இக்கால சந்திக் கட்டளையானது மிகவும் சிரேட்டமானது என்பதை இங்கு நாம் எடுத்துக் கூறவேண்டிய அவசியமில்லை. ஏனெனில் இக்கட்டளையை விட்டுவிடின் செய்வதற்குப் பல பிரபுக்களும் தன வைசியர்களும் நாட்டுக் கோட்டைச் செட்டிமார்களும் இன்னும் பல இராஜாக்களுங்கூட நீ நானென்று போட்டியாக வருவதே போதியசான்றாகும். பெறுதற்கரிய பெரும்பாலான புண்ணியத்தைப் பயக்கும் இக்கட்டளை நம்மவர்களுக்குக்கிடைத்தது நம் முன்னோர்கள் செய்த புண்ணியத்தின் பயனேயென்று சொல்லலாம். சுமார் அநபாயச் சோழமகாராஜாவின் காலத்திற்குச் சற்றுமுன் பின்னாகவே பன்னூற்றாண்டுகளாக இக்கட்டளை நம்மவர்கள் வசமாகவே இருந்துகொண்டு வருவதாகத் தெரிகின்றது. பூருவத்தில் இச்சிதம்பரத்தம் தில்லைவனமாக விருந்ததாகவும், இரண்ணியவர்மனென்னும் அரசர் பெருமானால் திருநகரங்காணப்பட்டு, பஞ்ச சபையோடுகூடிய நடராஜ மூர்த்தியின் திருவாலயம் கோபுரம், திருமதில், சிவகங்கை, முதலிய திருப்பணிகள் செய்யப்பட்டு, திருஸகஸ்ர முனீஸ்வரர்களாகிய தில்லை மூவாயிரவரைக்குடியேற்றி அவர்களுக்குச் சகல வுரிமைகளையும் நல்கிச் சொந்தப்படுத்தி, நித்திய நைவேத்திய பூஜை, தேர் திருவிழாவாதி சகல வுற்சவங்களையுங் குறைவற நடத்திவரப் பணித்து அரசன் விண்ணுல கடைந்ததாகவும், கொஞ்சகாலத்துக்குப் பிறகு கொற்றவன் மீனவன், நக்கர்வந்தன், என்று மூன்று சிற்றரசர்களும், தில்லை வனத்தை அக்கிரமமாகக் கைப்பற்றி, என்னுடையது உன்னுடையது எனவாது தொடுத்து ஒருவர்க்கொருவர் போர் புரிந்தார்களென்றும், இதனால் நடராஜ மூர்த்தியின் நித்திய நைவேத்திய பூசை தேர் திருவிழாவாதி சகலமும் தடைபட்டு நின்று விட்டதென்றும், அக்காலத்தில் தில்லையில் நமது செங்குந்த குலத்தினர் தில்லை மூவாயிரவர்களைப் போலவே (3000 தலைக்கட்டுள்ள குடியினர்களாய்) விருத்தியடைந்து மிக்க செல்வாக்குடன் வீரம்பொலிந்து சிறந்து விளங்கி யிருந்தார்களென்றும், இவர்களுக்கெல்லாம் தலைமைபூண்டு குருலிங்க சங்கம பக்தியிற் சிறந்தவராய், சத்தியம் பொறுமை அடக்கம் ஆசார சீலம் வாய்ந்தவராய் வீரலக்ஷ்மி விளையாடும் பராக்கிரமசாலியாய் விளங்கி மேன்மைபூண்ட சிவசிதம்பர முதலியாரென்பவர் ஒருவர் இருந்தாரென்றும், மன்றன் வல்ல நடராஜன் அவரது சொப்பனத்தில் தோன்றி "அன்பனே! நீ நமது குலத்தவர்களாய கைக்கோளப்படையைத் திரட்டிச்சென்று நமது பூஜா கிரமங்களுக்கு விக்கினந்தேடிய கொற்றவன் மீனவன் நக்கர்வந்தனென்னும் அம்மூன்றரசர்களையும் வென்று முறியடித்து, இத்தலவுரிமையைப் பண்டுபோல் தில்லை மூவாயிரவர்களுக்கே ஈந்தருள்வாயாக! வென்றுக் ஞாபித்தனரென்றும், அவ்வாறே நமது பெரியார் தமது கைக்கோளப் படைபூராவையுந் திரட்டிச்சென்று, அவர்களைப் போரில் புறங்கண்டு பண்டுபோல் நடராஜப் பெருமானுக்குரிய ஆறுகாலபூஜை நித்திய நைவேத்தியம் தேர் திருவிழாவாதி சகல வைபவங்களும் நடக்குமாறு செய்வித்து, தில்லைவாழந்தணர்களும், தமது செங்குந்தப்படைகளும் புடைசூழச் சிற்றம்பலத்தில் திருநடங்குயிற்றுஞ் சேவடியை வணங்கித் துதித்து நின்றனரென்றும், அப்பொழுது நடராஜப் பெருமான் அசரீரியாக, "அன்பனே! நீ பராக்கிரமசாலிகளாகிய மூன்றரசர்களையும் வென்று புறங்கண்டதனால் இனிமேல் நினது பெயர் "வெல்லப்பிறந்தவன்" என்று வழங்குவதாக! சிறிது காலமாகத் தடைபட்டு நின்று விட்டிருந்த நமது நித்தியநைவேத்திய ஆறுகால பூஜையைப் பழையபடி வழக்கம்போல் நடைபெறச் செய்தமையால், இவ்வாறு காலபூஜையினுஞ் சிறந்ததாகிய "திருவனந்தல் காலை சந்திக்கட்டளை பூஜையை" இன்று முதல் நுங்குலத்தவர்களின் பொருளுதவியைக்கொண்டு நீயே முன்னின்று நடத்திவருவாயாக:' என்று திருவாய் மலர்ந்தருளினரென்றும், அக்காலத்திலிருந்து இக்கட்டளையானது நம்மவர்களின் கைங்கர்யமாகவே நடந்துவருகின்றதென்றும் பற்பல இடங்களில் குடியேறி விட்டதனால் வரும்படி குறைய, நமது முதலியார் குடும்பத்தினர் நம்மவர்



கள் வசிக்கும் 72 நாடுகளிலும் சென்று தலைவர்களைக்கண்டு இச்சபாநாயகர் காலை சந்திக்கட்டளைக்குப் பொருளுதவி புரியுமாறு கேட்டுக்கொண்டதின் பேரில், அக்காலத்திருந்த நமது மூதாதையர்கள் இக்கட்டளைக்காக நமது 72 நாடுகளிலும் தறி 1-க்கு வருஷம் 1-க்கு வரி ரூ. 0-2-6 இரண்டரையணா வீதம் வசூலித்து என்றும் கொடுத்து வருவதாக உடன் பட்டு சிலாஸாஸனம் செப்புப் பட்டயம் செய்து கொடுத்தார்களென்றும், நமது சிதம்பரம் வெல்லப் பிறந்தான் முதலியார் குடும்பத்தினர் கர்ண பரம்பரச் செய்தியாகச் சொல்லி வருகின்றனர். தவிர ஆனிமாதத்திலும் மார்கழி மாதத்திலும் நடைபெறும் நடராஜப் பெருமானின் உற்சவங்களில் முதல்தினம் கொடியேற்றுச் சிறப்பு விழாவானது நம் செங்குந்தர்களாலே நடைபெற்றுவருகின்றது. ஆதியில் இவ்விழா கிரியம்பகச் சோழனொருவனால் நடைபெற்று வந்ததாகவும், பின் னொருகால் செங்குந்தர்களாவிடப்பட்ட பாவடிக்காடிக் கூழருந்திய மறை ஞான சம்பந்தரின், கைவாயொழுகிய அக்கஞ்சியை உமாபதி சிவம் குருப்பிரசாதமென்று அருந்தினமையால் சூத்திரபானஞ் செய்தனரென்று அவரைத் தில்லை வாழ்ந்தணர்கள் ஜாதிப்பிரஷ்டஞ்செய்ய, அவர் தில்லையைவிட்டு நீங்கி கொற்றவன் குடியில் மடமேற்படுத்தி அதில் வசித்திருந்தனரென்றும், அக்கால் நடராஜப்பெருமான் உற்சவம்வர, அதில் நமது உமாபதி சிவத்துக்கு முறைவர, அவரை நீக்கி வேறொருவரைக்கொண்டு கொடியேற்றஞ் செய்விக்கக் கொடியேறாமல் அற்று, அற்று, விழ, அது கண்டு யாவரும் திகைப்பெய்த, பெருமான் அசரீரியாக "நாம் உமாபதி சிவத்தின் பூஜைப் பெட்டகத்திலிருக்கிறோம். அவன் வந்தாலொழிய இக்கொடியேறாது என்று புகல, மூவாயிரவரும் அஞ்சி உமாபதி சிவத்தை யணுகி வணங்கி இறைவன் கட்டளையைத் தெரிவித்து அழைத்து வந்தனரென்றும், அவர் தமக்கும் தமது ஞானசாரியனுக்கும் அன்புடன் கூழமுதருத்தி உபசரித்த நமது செங்குந்த குலத்தவர்களை யழைத்து ரிஷபக்கொடியை நல்ல மேளவாத்திய விருதுகளுடன் வீதிப் பிரதக்ஷிணம் செய்வித்து அவர்களைக் கொண்டு கொடியேற்றினரென்றும், அவர் காலத்தில் இவ்விழா நம்மவர்களுக்கே உரிமையாகச் சொல்லப்பட்டதென்றும், அதுமுதற்கொண்டு நாளது வரையில் நம்மவர்களே அதனை நடத்தி வருகிறார்கள் என்றும் கூறப்படுகிறது. தில்லை சபாநாயகர் கோயிலில் மேளவாத்திய விருதுகளுடனே செல்ல நம்மவர்களுக்குப் பூரண அதிகாரம் உண்டு. மற்றெத்தகையினரும் அவ்விதம் கோயிலுட்செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள். ஆகையால் அக்கோயில் சம்மந்தப் பட்டவரையில் நம்மவர்களுக்கிருக்கும் அதிகாரமும் பெருமையும் செல்வாக்கும் சொல்லலாந் தகமைத்தன்று, நிற்க, இத்தகைய பெருமையினை வாய்ந்தும், நடராஜப் பெருமானாலேயே நம்மவர்களுக்கு உரிமையாய் வழங்கப்பட்டதும், நம் முன்னோர்களால் பன்னெடு நாளாய் செய்து வரப்பட்டதுமான இக்கால சந்திக் கட்டளைக்கு நமது நாடுகளில் விதிக்கப்பட்ட தறிவரியை (இரண்டரையணா) சிலர் மெல்லக் கை நழுவ விடுகிறார்கள். சிலர் இவ்வருஷம் முடியாது வருகிற வருஷம் பார்ப்போம் என்கின்றனர். சிலர் சாமியேது! பூதமேது!! சாமி பணங்கேட்கிறதா? இதெல்லாம் வயிற்று ஜீவனத்திற் கோர்வழி, ஏதோ தெரியாமல் முன்னோர்கள் கொடுத்து வந்தார்கள். இனிமேல் நாங்கள் கொடுக்கமாட்டோம் என்று கண்டிப்பாய் சொல்கின்றனர். சில இடங்களில் கட்சிப்பிளவுகள் ஏற்பட்டு, அவர்கள் கொடுத்தால்தான் நாங்கள் கொடுப்போம் என்று இரண்டு கக்ஷியினரும் போட்டிபோட்டுக்கொண்டு முடிவில் இருவருமே வரிகொடா தொழிகின்றனர். சிலர் தீக்ஷிதர்கள் பிழைக்க நாம் வரிகொடுப்பானேன்! நடராஜாவா அவ்வளவு பணத்தையும் சாப்பிடுகிறார் என்று சொல்லுகின்றனர். இன்னும் சிலர் வித்தியா தருமத்துக்குப் பொருள் கொடுத்தாலும் புண்ணியம் இது வெறும் விருதா என்கின்றனர். இதுகளெல்லாம் கலியின் கொடுமைபோலும்! நற்காரியங்களுக்கு அநேக விக்கினங்கள் வருவது வழக்கம். நம்மவர்களுக்குப் போதிய கல்வியும் நூலாராய்ச்சியு மில்லாக் கொடுமையினாலேதான் இவ்வித கெடுதல்களும், கட்சிப் பிளவுகளும், தீய எண்ணங்களும் உண்டாகின்றன. "தருமம் தலை காக்கும்" என்னும் முதுமொழி இவர்களிடம் தலை காட்டாதொழிந்தனவோ அறியேம்! "பழங் காலைத் தூர்க்காதே" என்னும் பழமொழி வாசகத்தையாவது இவர்கள் பகுத்தறிந்தார்களா? அறிவில்லாமலா நமது முன்னோர்கள் இதனை நடத்தி வந்தார்கள் என்பதையாவது சிந்தித்தறிய வேண்டாமா? ஒருவன் செய்த தர்மத்தை யழித்தவர்கள் இரௌரவாதி நரகம் புகுவார்கள் என்று ஸ்மிருதிகளெல்லாம் முறையிடுகின்றனவே. தெய்வகைங்கர்யமாக நம் முன்னோர்கள் ஏற்படுத்தியதை நாம் நிறுத்திவிடுவது நலமா? அவ்விதஞ் செய்யின் நாம் தெய்வ அபராதியாக மாட்டோமா? "தெய்வஞ் சீறிற் கைதவமாளும்" என்பது ஔவை வாக்கன்றோ? ஆகையின் செங்குந்த குலச்சிரியர்களே! சிதம்பரம் சபாநாயகர் திருவநந்தல் காலை சந்திக் கட்டளைக்காக, நமது முன்னோர்கள் வகுத்த தறிவரி. இரண்டரையணாவை ஒவ்வொரு குடும்பத்தினரும் தடைசொல்லாமல் கொடுத்துவர எல்லாம் வல்ல நடராஜப் பெருமானின் திருவருளுக்குப் பாத்திராவீரர்களாக. குஞ்சித பாதம் எல்லாக் குற்றமும் களைவதாக?

சுபம்! சுபம்!! சுபம்!!!

# அறிவியல் பகுதி

## II. நெருப்புக் கற்கள்

[திரு மு. த. வேலாயுதம், வின்லங் சைகோன்]

[தொகுதி-ச, பகுதி-கூ 315-ம் பக்கத்தொடர்ச்சி]

முதலாவது வெண்ணிறமான அழுத்தக் கல் Quartz —

இக்கல் ஆறு புறமுள்ள கோபுர வடிவமாயும் சரியொத்த இருபாத வடிவமாயுங் காணப்படும். மூன்று புறமுள்ள கோபுர வடிவமாய்க் காணப்படுவதுமுண்டு. ஆனால் அம்மூன்று புறங்களும் ஒரே அளவாய்க் காணப்படா. மடக்குகளில் இலேசான குழவுகள் தோன்றும். இக்கல்லில் முகத்தைப் பார்க்கலாம். சிலவிசை அதைப் பளிங்குக் கல்லென்றும் சொல்லலாம். மிகவும் அழுத்தமானது. ரசாயன முறையில் பரிசோதிக்கும்பொழுது இவ்வெண்ணிறக் கல்லில் நெறுப்புக்கல் (Silica) சேர்ந்திருப்பதைக் காணலாம். கண்ணுடியைப் போன்ற கல் (hyalin quartz) பற்பல பொருட்கள் சேர்ந்த பச்சைக்கல் சாம்பல் நிறமுள்ள கல்லை இவ்வினத்தில் அநேகவிதம் உண்டு. இக்கற்களைக்கொண்டு மூக்குக் கண்ணுடி செய்கின்றனர். இவ்வினத்தில் சிகப்புநிறக் கற்களும் உண்டு. அவைகளைச் செவ்வந்திக் கல் (hyalinth) எனக் கூறுவர். இன்னும் அழகிய ஊதா நிறங்கொண்ட கற்கள் (amethyst) உண்டு. இவை மிகவும் அழகாய்க் காணப்படும். நகைகள் செய்வதற்கு உபயோகப் படுத்துகின்றனர். இரத்தினம் வைடூரியம் போன்ற போலி (Imitation) கற்களும் கிடைக்கின்றன. இவ்வினத்தில் வைடூரியக்கல் மிகவும் அழகாய்க் காணப்படும். அழகிய பளபளப்புள்ளது. நகைகள் செய்வதற்கு முற்றிலும் ராயட் (Royat) நாட்டிலுள்ள கல்லை மிகவும் உபயோகப் படுத்துகின்றனர்.

இக்கற்களின் மேற்புறத்தில் பால் ஏடுபோன்ற பளிங்குப் பொருள்கள் இருக்கின்றன. ஆகையால் தான் கண்ணுடிபோன்ற கற்கள் மூக்குக்கண்ணுடி முகம் பார்க்கும் கண்ணுடி முதலியன செய்வதற்கு உபயோகப் படுகின்றன எனவும், பல வர்ணங்கள் கொண்ட கற்கள் நகைகள் செய்வதற்கு உபயோகமாகின்றன எனவுங் கண்டறிதல் வேண்டும். இரசாயன சாஸ்திரிகளுக்கு உபயோகமாவதற்காக புளிப்பினுல் கெட்டுப்போகாததற்காகவும், நெருப்பினுல் உடைந்து பழுதாராததற்காகவும் ஏற்ற பாத்திரங்கள் செய்யவும் இக்கற்கள் உபயோகப்படுகின்றன.

இரண்டாவது நெருப்புக் கல் (Selex)—இது மிகவுங் கெட்டியானது; இக் கல்லைக்கொண்டு நெருப்பு உண்டாக்கலாம்; இந்த இருப்புத் துண்டொன்றில் தட்டினுல் நெருப்புப்பொறிகள் எழும். இக்கல்லை "சக்கிமுக்கிக்கல்" எனக் கூறுவர். இவ்வினக் கற்கள் பழுப்பு நிறமாயும், சாம்பல் நிறமாயும் கறுப்பு நிறமாயும் காணப்படும். நெருப்புக் கல் சான்னல் (Chennel) என்னுங் கடற்கரையோரத்தில் மிகுதியாகக் காணப்படுகின்றனவாம்.

பண்டைக் காலத்தில் நம்முன்னேர்கள் இக்கற்களைக்கொண்டு ஆயுதங்கள் செய்து வைத்திருந்தனர். வெகு புராதீன காலத்தில் அதாவது செம்பு இரும்பு முதலிய உலோகங்களைக் கண்டுபிடிக்காத முன்னர் மனிதர்கள் கற்களினுல் செய்யப்பட்ட ஆயுதங்களையே கைக்கொண்டு வந்தனர். ஈட்டி கோடாலி, கெதை, பிச்சுவா முதலியவைகளெல்லாந் தும் கற்களே. அவர்கள் பண்டு உபயோகித்து வந்த கற்களினுலாய ஆயுதங்கள் இன்னும் ஆட்சியில் நம்மகத்தே அரிகுறியாக நிலவுகின்றன. அவைகள்: அம்மி, குழவி மாவு அரைக்கும் இயந்திரம், பாட்டிகள் வைத்திருக்கும் வெத்திலைபாக்கு நொறுக்கும் கல் முதலிய இன்ன பிறவுமாம். "மற்றொன்று விரித்தல்" என்னுங் குற்றத்தில் எம்மை ஆளாக்கினுலும், இத்தகைய கற்களை ஆயுதமாகக்கொண்ட அந்தக் காலத்திய மனிதர்களின் பலத்தை ஈண்டுக்குறிப்பிட்டுப் பேசாமலிருக்க முடியவில்லை. இன்று நாம் கையாளும் தீக்குச்சு செய்யும் வகை கண்டறியாத காலத்தில், இச்சக்கி முக்கிக் கல்லைக்கொண்டே நெறுப்பு உண்டாக்கி வந்தனர். அந்தக்காலத்தில், துப்பாக்கி, வெடிகுண்டுக்குப் பதிலாக இக்கல்லின் மாவை உபயோகித்து வந்தனர். இப்பொழுது வலுவான கந்தகத்திற்கும், உயர்ந்த சுண்ணும்பு கூட்டுவதற்கும் உபயோகப் படுத்துகின்றனர்.

இயந்திரக்கல் (mill-stone) இக்கல்லில் ஒரு சிறுபாகம் சுண்ணும்புக்கல்லும் சேர்ந்திருக்கிறது. மிகவுங் கடினமானது. கட்டடங் கட்டுவதற்கு இன்றியமையாதது; பாலம், வாராவதி முதலியவைகள் அமைப்பதற்குச் சிரேஷ்டமானது. இக்கல் அதிகக் கெட்டியாய் இருக்கின்றமையால் தான் தானியங்கள் அரைக்கும் இயந்திரம் அம்மி, குழவி, உரல் முதலியவைகள் செய்து உபயோகிக்கின்றனர். அங்ஙனம் மிகவும் உரமாய் இல்லாதிருப்பின், தானியம் அரைக்கும்பொழுது, கற்களின் அணுக்



கள் சிதரிமாவுடன் சேரும் என்பது திண்ணம். (Vide original) பெர்டே-கு மூவிர் (Ferte-sons gonarre) எப்பிர்ஞன் (Epirnon) முதலிய தேயத்திலிருந்து எடுக்குங் குழவிக் கற்களையே ஐரோப்பாக்கண்ட முழுமையும் உபயோகிக்கின்றனர். சென்னை இராஜதானியில், பெருமுக்கல், அழகிய பாக்கம், திருவக்கரை முதலிய ஊர்களிலிருந்து வரும் இயந்திரக் கற்கள் மிகவும் பிரசித்தி பெற்றனவாகும்.

சுண்ணும்புக் கல்லும், நெருப்புக் கல்லும் தண்ணீரின் சம்பந்தத்தால் ஒன்று சேர்ந்ததே இயந்திரக் கல் (Mill Stone). ஆகையால் இக்கல்லில் சுண்ணும்பு பொருள்களும் கலந்திருக்கின்றதெனக் கவனித்தல் வேண்டும். இயந்திரத்தைப் பொளியும்பொழுது இவ்விஷயத்தை அறிந்து கொள்ளலாம்.

மூன்றுவது-மணல். இது அசித் திரள்கள் கூடிய கல்லினத்தைச் சேர்ந்த ஒரு பொருள். இதன் நிறம் அவ்வவ்விடங்களுக் கேற்றவாறு வெண்மையாயும், கறுப்பாயும், சிகப்பாயும், பச்சையாயுங் காணப்படும். மழையினுல் மலையினின்று அணுக்கள் சிதறி அநேககாலம் உருண்டுவந்த ஒரு பொருள் சில மணலில் பொற் சன்னங்களும், சுண்ணும்புத் திரள்களும் சிறிது பாகம் களிமண்ணும் சேர்ந்திருக்கும். ஆற்றோரங்களில் காணப்படும் மணல் சுண்ணும்பு கூட்டுவதற்கு ஏற்றதாகின்றது. இன்னும் தண்டவாளம், செம்பு முதலிய சாமான்கள் ஊற்றுவதற்கும் அச்சுகள் செய்வதற்கும் உபயோகமாகின்றது.

நுண்ணிய மணற்கல்—இக்கல் பச்சையாயும் மஞ்சளாயும், சிகப்பாயும் காணப்படும். இஃது மிகவும் உறமுள்ளது. கல் உறமாய் இருப்பதையும் அஃதில்லா திருப்பதையும் ஒரு சுத்தியினுல் தட்டி, அதன் ஓசையைக்கொண்டு கண்டுபிடிக்கின்றனர். சில கற்கள் சலசலப்பாய் இருக்கும். இத்தகைய கற்கள் நெருப்புக் கற்களைச் சேர்ந்த திரள்களினுல் ஆக்கப்பட்டன. சிறு மணற்களாகும் திரள்கள் ஒன்றோடொன்று சேர்ந்து சிமிட்டியினுல் இறுகுகின்றன. எப்படியெனில்: மழைத் தண்ணீர் மண்ணில் விழுந்ததும் அவைகள் கீழே ஊறிச் செல்கின்றன. இப்படிப் போகும்பொழுது பூமியின்மேல் காணப்படும் நெருப்புக்கல்லின் இனத்தைச் சேர்ந்த மணலின் வழியாய்ச் செல்ல நேரிட்டால், மேற்படி நெருப்புக்கல்லின் சத்தைக் கிரகிக்கின்றது. பின்னர் அதிக ஆழத்தில் மணலினேடும், நெருப்புக் கல்லினேடும் சேர்ந்த தண்ணீர் தேங்குகின்றது. அப்பொழுதுதான் நெருப்புக் கல்லின் சத்தினுலாய சிமிட்டியாகி உறம்பெறுகின்றது. அதனுல்தான் மணலில் சிறு சிறு பருக்கைக் கற்கள்சேர்ந்து கெட்டிப் பிடித்துக்கொண்டு காணப்படுகின்றன. பூமியின் மட்டத்தில் எத்தகைய பொருளில் மழைஜலம் விழுகின்றதோ அப்பொருளின் குணமே, பூமிக்குள் மணலினுல் ரூபமடையும் இந் நுண்ணிய கல் கிரகிக்கும். ஆனுல் இப்படி இறுகிக் கெட்டியாகும் இக்கல் மிகவும் அழுத்தமானது. உறுதியாயும், மழமழப்பாயும் இருப்பதினுல் இயந்திரங்கள் செய்ய உபயோகிக்கின்றனர். இக்கல்லின் மாவை சமையல் பாத்திரங்கள் துலக்க உபயோகப் படுத்துகின்றனர். பாண்டெயின்ப்ளியூ (Fontaineblew) என்னும் நாட்டில் கிடைக்கும் கல், தெருக்களுக்குக் கற்கள் போடுவதற்கு மிகவும் உபயோகப்படுகின்றன. இக்கற்களைக்கொண்டு கட்டடங் கட்டினுல் மிகவும் உறமாய் இருக்கும் என்பதை அக்கற்களில் சேர்ந்துள்ள பொருட்களே நமக்கு நன்கு விளங்க வைக்கின்றன. "ஸ்டராஸ்பர்க்" (Starsbourg) என்னும் ஊரில் உள்ள மாதாக்கோயில் இவ்வினக் கற்களால் கட்டப்பட்டதாம்.

ஐந்தாவது கூழாங்கற்களினுலாய கல்: இவ்வினக்கல், முன் சொன்ன கல்லைப்போலவே மணல், தண்ணீர், சுண்ணும்பு முதலியவைகள் கலந்து இறுகுகின்றன. இது எப்படி உருவமடைகின்றதெனின், தண்ணீரினுல் கூழாங்கற்கள் உருண்டு ஒரு விடத்தில் தங்குகின்றன. பின்னர் நாள் செல்லச்செல்ல தண்ணீர் தங்கி நிற்கும் இடத்தின் மணல் சம்பந்தத்தினுல் அவைகள் கெட்டியாகின்றன. இவைகள் பெரும்பாலும் பெரிய ஆறுகள் ஓரத்திலும், நதிகள் ஓரத்திலும் காணப்படும். இங்ஙனம் இத்தகைய கற்கள் கரையின் ஓரத்தில் காணப்படுமேயாயின், அக்கரை பழங்காலத்தது எனக் கண்டறிதல் வேண்டும். ஆற்றோரங்களில் இருக்கும் சில கிராமங்களில் இன்றைக்கும் அத்தகைய கற்களை நாம் குறிப்பாகப் பார்க்கலாம்.

த்ரேக்கஸ் (Bricher) என்னும் ஒருவிதக் கல் உண்டு. இக்கல் கோண வடிவங்களாகவே காணப்படும். கோட்டையின் மதில்கள் பீரங்கிக் குண்டினுல் சிதரப்பட்டு கீழே விழுந்தக் கற்களும் சரி இன்னும் எரிமலையினுல் குபீரென்று பறக்கும் அக்கினிக் கற்களும் சரி, இவைகள் அக்கோணவடிவை ஏற்கும்.

த்ரிபோலி (Tripoli) என்னுங் கல்: இக்கல் நெறுப்புக் கல்லின் சத்துள்ள பலவிதப் பொருள்களும் கடற் பாசியின் நுண்ணிய அணுக்களும் சேர்ந்து உருவமடைகிறது இது மிகவும் அழுத்தமாயும், மழமழப்பாயும் காணப்படும். இம்மாவை கண்ணுடி, உலோகங்கள் முதலியவைகளை விளக்குதற்கு உபயோகப்படுத்துகின்றனர்.

(தொடரும்)

# செங்குந்தர் இரண்டாவது மகாநாடு கூடவிருக்கும் காஞ்சிபுரத்தின் தல்மான்மியம்

திரு. வீ. திருஞானசம்பந்த முதலியார், தமிழாசிரியர், பச்சையப்பன் ஐஸ்கூல், காஞ்சிபுரம்.

## காஞ்சி மான்மியச் சுருக்கம்

### தொண்டைநாடு

பூமிதேவிக்குச் சிரமாய் விளங்குவது நம் பாரத நாடு. இப்பாரத நாட்டிலே தொண்டை நாடானது முகமாக அமைந்துள்ளது. இத் தொண்டை நாடானது, தீயனவற்றைக் கனவிலுஞ் செய்ய நினைக்காத மனத்தோடு சிறந்த சான்றோர்களை யுடையதாயும், தெளிந்த நீராற் சூழ்ந்த கழனிகளைப் பக்கங்களிலே கொண்டதாயும், கரிகாற் சோழனுக்குட்பட்ட தொண்டைமானால் ஆளப் பெற்றதனால் தொண்டை நாடெனப் பெயர்க்காரண முடையதாயும் விளங்குவதாகும். "தெண்ணீர் வயற் றொண்டை நன்னாடு சான்றோருடைத்து" என்னும் ஔவை மொழியை யாரு மறிவர். இந்நாட்டிக்குப் பெயர் வந்த காரணத்தைச் சிலர் வேறு வகையாகவும் கூறுவர்.

காஞ்சிப் புராண ஆசிரியர் ஸ்ரீ சிவஞான யோகிகளே, இந்நாட்டுச் சிறப்பைக் கூறுதற்குக் குன்றைநகர்க் குலக் கவியாகிய ஸ்ரீ சேக்கிழார் சுவாமிகளால் தான் முடியும் என்று கூறி யிருத்தலால் ஈண்டு விரித்துரைக்க முடியாதென இத்துடன் விடுக்கலாயிற்று.

இந்நாட்டுச் சிறப்பைப் பெரிய புராணத்துத் திருக் குறிப்புத் தொண்ட நாயனார் புராணத்தானும், கந்த புராணம், காஞ்சிப் புராணங்களின் நாட்டுப் படலங்களானும் பரக்கக் காணலாம்.

### காஞ்சிமா நகரம்

பூமா தேவியின் தொண்டை நாடாகிய முகத்துக்குத் திலகம்போல் விளங்குவது காஞ்சிமாநகரமே யாகும்.

இது பொன்மயமானதும், தன்னடியை விட்டுப் பிரியாத நிழலை யுடையதுமான காஞ்சி மரத்தைத் தன்னிடத்துக் கொண்டு விளங்குவதால் காஞ்சிபுரம் எனக் காரணப் பெயர்க் கொண்டு விளங்குவது. இதற்குக் காஞ்சிபுரம், மும்புவனசாரம், காமபீடம், தபோமயம், மும்மூர்த்தி வாசம், தண்டகபுரம், இலயசித்து, பிரமபுரம், விண்டுபுரம், சிவபுரம், சகல சித்திகரம், கன்னி காப்பு என்னும் பன்னிரு திருப் பெயர்களும் உள்ளன.

மேற்கூறிய காஞ்சிமரம் இக்காலத்து வெளிப்படையாகப் புலப்படவில்லை. திருக் குறிப்புத் தொண்டர் புராணத்துக் கூறப்படும் பலவகை அற்புதங்களுள் இக்காலத்து வெளிப்படையாகக் காண முடியாதனவற்றுள் இதுவு மொன்று.

கரிகாற் சோழன் காஞ்சி யென்னும் மரங்கள் அடர்ந்த காட்டை வெட்டி நகராக்கியதால் காஞ்சிபுரம் என்றும், கா=பிரமனால், அஞ்சி=வழி படப் பெற்றது ஆகவே பிரமனால் பூசிக்கப் பெற்றது காஞ்சிபுரம் என்றும் பெயரமைந்ததென இந்நகர்க்குக் காரணங் கூறுவாரு முளர்.

இமசேதுக்களை எல்லையாகக் கொண்ட இந்தியாவிலே உள்ள முத்தித் தலங்கள் (காஞ்சி, மதுரை, மாயை, காசி, அவந்திகை, அயோத்தி, துவாரகை) ஏழினுள் முதன்மையானதும் இந்நகரமே யாகும். இதனையே "முத்திதரும் நகரேழுள் முக்கியமாம் முதற் காஞ்சி" என வலியுறுத்துகின்றது. இது பற்றியே வடநாட்டு மகா கவியாகிய காளிதாசரும் நகரேஷு காஞ்சி" என வியந்து கூறினர். "உச்சிக் கோத்த வேளையுமில்லை கச்சிக் கோத்த பதியுமில்லை" என உலகத்துப் பழமொழியும் வழங்குகின்றது. தமிழ் நாட்டிலே சைவர்களாற் கொண்டாடப் பெறும் பஞ்சபூத க்ஷேத்திரங்களுள் பிருதிவி க்ஷேத்திரமாக விளங்குவது மிந்நகரே.

பண்டைக் காலந் தொட்டுச் சைவம், வைணவம், பௌத்தம், ஜைனம் முதல் எல்லாச் சமயத்தார்களுக்கும் உரிய முக்கிய வித்தியாபீடங்கள், தேவாலயங்கள், மடாலயங்கள், குருபீடங்கள் முதலியன நிறைந்தும், உலகத்திலேயுள்ள எல்லாச் சாதியாருக்கும் முதன்மையான இடமாகவும் விளங்குவது இந்நகரமே யாகும்.

உலகப் பிரசித்தி பெற்ற இந்நகரைப்பற்றி விரிவாகத் தெரிய வேண்டுவோர் புராணங்களானும், ஆராய்ச்சி நூல்களானும் அறிந்து கொள்ளலாம்.

## காஞ்சிபுரத்திலுள்ள பாடல் பெற்ற சிவ ஸ்தலங்கள்

### 1. திருக்கச்சி யேகம்பம்.

இது ஏகாம்பர நாதர் கோவில் என வழங்குகிறது. முன்னொரு காலத்தில் காமாட்சி யம்மையார் உயிர்களைப் பிழைப்பிக்கும் பொருட்டுத் திருக்கயிலாயத்திலே சிவபெருமானிடத்தில் இருநாழி நெற்கொண்டு காஞ்சிபுரம் வந்து கம்பாநதியில் மணலி லிங்கம் கொண்டு பூசிக்கச் சிவபெருமான் திருவிளையாட்டாக ஏவிய நதிப் பெருக்கால் மணலி லிங்கத்தைக் காக்கும் பொருட்டுக் கட்டித் தழுவச் சிவபெருமான் மகிழ்ந்து திருவுருக் குழைந்து காட்சி கொடுக்கத் தெரிசித்து, விரும்பிய வரங்களையும் பெற்றுக் கொண்டு சோதி உருவாகிய மாமரத்தடியில் ஏகாம்பர நாதரை என்றும் ஏத்தி வழிபடப் பெற்றுவரும் பெருமையை யுடையதும் இத்தலமே யாகும்.

இவ்வாலயத்தில், பிரம்மா, விஷ்ணு, உருத்திரர் ஆகிய மூவரும் பூசித்த வெள்ளைக் கம்பம், கள்ளக் கம்பம், நல்ல கம்பம் என்னும் மூன்று இலிங்க மூர்த்திகளும், விகடச் சக்கர விநாயகர், மாவடிக் கந்தர், ஒரே லிங்கத்தில் நூற்றெட்டு, ஆயிரத்தெட்டு இலிங்கங்க ளமைந்த இலிங்க மூர்த்திகளும், பிரளயங் காத்த சத்தியும், கச்சி நிலாத்துண்டப் பெருமாள் சந்நிதியும், கம்பா நதி, சிவகங்கை முதலிய தீர்த்தங்களும், இந்தியாவிலே எங்கும் காண முடியாத பழமையான சித்திர வேலைகளமைந்த நாற்கால் மண்டபம், பதினாறுகால் மண்டபம், நூற்றுக்கால் மண்டபம், ஆயிரக்கால் மண்டபம், பச்சையப்ப முதலியார் கல்யாண மண்டபம், வாகனாலங்கார மண்டபங்களும், இராஜ கோபுரம், பல்லவ கோபுரங்களும், முக்கியமாகப் பார்க்கத்தக்கதாக அமைந்துள்ளன. இவ்வாலயத்தின் விஸ்தீரணம் 27 காணிப் பூமி பரப்புடையது.

சுவாமி பெயர்: ஸ்ரீ ஏகாம்பர நாதர்.
அம்மன் பெயர்: ஸ்ரீ காமாட்சி யம்மை.

இத்தலம் காஞ்சிபுரம் ரயில்வே ஸ்டேஷனுக்கு வடமேற்கே ஒரு மைல் தூரத்திலுள்ளது.

### 2. திருக்கச்சி மேற்றளி

இது காஞ்சிபுரத்தின் மேற்பாகத்தில் அமைந்த கோயில் எனப் பொருள்படும். திருமேற்றளி என இப்போது வழங்குகிறது. செங்குந்தர்கள் வசிக்கும் பிள்ளையார் பாளையத்திலிருக்கிறது. திருமேற்றளித் தெருச் செங்குந்தர்களுடைய சொந்த தேவஸ்தானம்.

விஷ்ணு மூர்த்தி சிவசாரூப்பியத்தின் பொருட்டுத் தவஞ்செய்து திருஞான சம்பந்த சுவாமிகள் எழுந்தருளிப் பாடியபோது அதனை யெய்தினர் என்பது தலமான்மியம். விஷ்ணு தேவாரப் பதிகத்தைக் கேட்டு "ஓத உருகீசர்" என்னும் பெயரோடு கிழக்குமுகமாக எழுந்தருளி யிருக்கிறார். இது ஒரு சந்நதி, மேற்கு முகமாக எழுந்தருளி யிருப்பவர் தலமூர்த்தி இதுவே விசேட சந்நதி. இவ்வாலயத்துக்கு நேர்கிழக்கே சம்பந்தசுவாமிகள் ஆலயம் தனியாக இருக்கிறது. இவ்வூரில் இப்பாகத்துக்குச் சம்பந்த சுவாமிகள் சம்பந்தத்தினாலேயே "பிள்ளையார் பாளையம்" என்று பெயர் வழங்குகின்றது. ஆளுடையப் பிள்ளையார் சம்பந்த சுவாமிகள்.

சுவாமி: திருமேற்றளி நாதர்.
அம்மன்: ஸ்ரீ காமாட்சி யம்மை.

இத்தலம் பிள்ளையார் பாளையம் திருமேற்றளித் தெருவிலிருக்கிறது.

### 3. திருவோண காந்தன் தளி

இது ஓணன், காந்தன் என்னும் இரண்டசுரர்கள் பூசித்த காரணத்தால் இப்பெயரெய்தியது. இரண்டு சந்நதிகள் ஒரே ஆலயத்தில் உள்ளன. சுந்தரமூர்த்தி சுவாமிகள் பாடிப் பொன்பெற்ற தலம்.

சுவாமிகள்: ஓணேசுரர், காந்தேசுரர்.
அம்மன்: ஸ்ரீ காமாட்சி யம்மை.

இத்தலம் ஸ்ரீ ஏகாம்பரநாதர் ஆலயத்துக்கு மேற்கே கால் மைல் தூரத்திலுள்ளது.

### 4. திருக்கச்சி யனேகதங் காவதம்

இது காஞ்சிபுரத்திலுள்ள விநாயகர் பூசித்த தலம். குபேரன் முதலியோரும் பூசித்த இடம்.

சுவாமி: அநேகதங் காவதேசுவரர்.
அம்மன்: ஸ்ரீ காமாட்சி யம்மை.

இத்தலம் ஸ்ரீ ஏகாம்பரநாத ராலயத்துக்குத் தென்மேற்கே புத்தேரித் தெருவுக்கு மேற்கே வயல் மத்தியில் அரை மைல் தூரத்திலுள்ளது.

### 5. திருக்கச்சி நெறிக் காரைக்காடு

இது காஞ்சிபுரத்தில் காரைக்காட்டி லிருத்தலால் இப்பெயரெய்தியது. இப்போது திருக்காலிமேடு என வழங்குகிறது. இந்திரன், புதன், சிபி முதலியோர் பூசித்தது. வேப்பங் குளம் என்னும் இந்திர தீர்த்தம் இங்குள்ளது. சுவாமி சந்நதி மேற்குப் பார்த்தது.

சுவாமி: காரைவனேசுரர்.
அம்மன்: ஸ்ரீ காமாட்சியம்மை.

இத்தலம் காஞ்சிபுரம் ஆடிசன் பேட்டைக் கடைத்தெருவிலிருந்து வட கிழக்கில் அரை மைல் தூரத்திலுள்ளது.

## முக்கியமான வேறு சில கோயில்கள்

### 1. ஸ்ரீ கச்சபேசுவரர் கோயில்:

இது விஷ்ணுமூர்த்தி கச்சப (ஆமை) உருவாய்ப் பூசித்த பிரபல தலம். பிரம்மா, சரசுவதி ஐயனார், முதலியோரும் பூசித்தது. இந்நகரில் உள்ள (66000) அறுபத்தாறாயிரம் சிவஸ்தலங்களுக்குள் மிகமிக முக்கியமான மூன்று தலங்கள் உள்ளன. அவை திருவேகம்பம், திருக்கச்சாலயம், திருக்காயாரோகணம் என்பன. இவை முறையே உமாதேவியார், சரசுவதி, இலக்குமி முதலியவர்களாற் பூசிக்கப்பட்டன. இவைகளில் முறையே மாமரம், முருக்கமரம், வில்வ மரங்கள் தலவிருட்சங்களாக உள்ளன. இம்மூன்று தலங்களுள் இதுவுமொன்று.

இதுபொதுவாகச் செங்குந்தரனைவருக்கும் சிறப்பாகப் பிள்ளையார்பாளையச் செங்குந்தர்களுக்கும் சொந்த தேவஸ்தானம்.

சுவாமி: ஸ்ரீ கச்சபேசுவரர்.
அம்மன்: ஸ்ரீ காமாட்சியம்மை (சுந்தராம்பாள்)

இத்தலம் காஞ்சிபுரத்தில் பிரபல வீதியாகிய இராஜவீதியின் முதன்மையிலுள்ளது.

### 2. திருக்காயாரோகணேஸ்வரர் கோயில்:

இது வியாழன், இலக்குமி முதலியோர் பூசித்தது. வேகவதியாற்றின் வடகரையி லமைந்துள்

ளது. தென்கரையில் பிரசித்தி பெற்ற காயாரோகணேசர் குளம் அல்லது தாயார் குளம் என வழங்கும் தீர்த்தமிருக்கின்றது. பிள்ளையார் பாளையம் மண்டபத் தெருச் செங்குந்தர்கள் சொந்த தேவஸ்தானம்.

சுவாமி: திருக்காயாரோகணேசுவர்
அம்மன்: ஸ்ரீகாமாட்சியம்மை (கமலாம்பாள்)

இத்தலம் மண்டபத் தெருவிற்குத் தெற்கே கால் மைலிலுள்ளது.

### 4. ஸ்ரீ காமாட்சியம்மன் கோயில்:

இது பிரசித்திபெற்ற அம்மையார் கோயில். அம்மையார் உட்கார்ந்த கோலம். அம்மையார் சந்நிதி இன்னதிக்கு முகமாக இருக்கிறதென்று யாவராலும் எப்படியும் கண்டறியமுடியாத தன்மையில் அமைந்திருக்கின்றது. இங்கு உலகாணி என்னும் தீர்த்தமும் இத்தீர்த்தத்தின் மத்தியில் பூதவுருவங்களிரண்டும், ஆதி சங்கரர் சந்நதியும் உள்ளன. இக் காமாட்சியம்மையார் ஆலயத்தையே இந்நகரில் பிரமோற்சவ காலங்களில் புறப்பாடாகி வரும் எல்லாச் சிவாலய விஷ்ணுவாலய சுவாமிகளும், பிரதக்ஷணமாக வலம் வரும் முறைமையில் மாடவீதிகளமைந்திருக்கின்றன.

இந்நகரிலுள்ள எல்லாச் சிவாலயங்களுக்கும் இது ஒன்றே அம்மன் கோயில். ஆதலால் எல்லாச் சிவாலயங்களிலும் அம்மன் கோயில் மூலஸ்தானமாக வேறு இராது.

அம்மன் பெயர்: ஸ்ரீ காமாட்சி யம்மையார்

இத்தலம் இராஜ வீதியில் ஸ்ரீகச்சபேசுவரர் கோயிலுக்குச் சிறிது வடக் கிழக்கில் அமைந்துள்ளது.

### 5. கைலாசநாதர் கோயில்:

இது விஷ்ணுவும், நாரதரும் திரிபுரதகனம் பொருட்டுக் கொண்ட புத்த உருவம் நீங்கப் பூசிக்கப் பெற்றது. பார்க்கப் பார்க்க ஆச்சரியத்தையும், ஆனந்தத்தையும் உண்டாக்கக்கூடிய பழைய சித்திர வேலைப்பாடுகளோடு பல்லவர் காலத்து ஏற்பட்ட ஒரு புராதனக் கோயில், பிண்டிக் கற்களால் திருப்பணி செய்யப்பட்டது. பல தேசத்து வெள்ளைக்காரர்களும் இங்கு வந்து புகைப் படம் எடுத்துச் செல்லும் வழக்கம் இன்றும் இக்கோயிலுக்குண்டு. யாவரும் அவசியம் பார்க்கத்தக்க ஆலயமும் இதுவே.

இத்தலம் புத்தேரித் தெருவுக்கு மேற்கே கால் மைல் தூரத்திலுள்ளது.

### 6. குமரகோட்டம்:

இது பிரசித்திபெற்ற முருகர் கோயில். பிரமனைச் சிறையிலடைத்த காலத்தில் அவன் தொழிலைத் தான் செய்துகொண்டிருந்த அவதாரம். இது இராஜவீதியினடுவில் சிறிது கிழக்கே வடமேற்கு முகமாக அமைந்திருக்கிறது.

## காஞ்சிபுரத்திலுள்ள முக்கியமான சில விஷ்ணு கோயில்கள்.

### 1. வரதராஜப்பெருமாள் கோயில்:

இது பிரசித்திபெற்ற பெருமாள் கோயில். இவர் பிரமதேவன் யாகத்தில் உற்பத்தியானவர். பிரபல கருடசேர்வை உற்சவம் நடப்பதும் இவருக்கே அத்திமலையிலிருப்பதால் அத்திவரதர் என்று நாமமுண்டு.

இவ்வாலயத்தில் ஸ்ரீ வலம்புரி விநாயகராலயம் தென்மேற்கு மூலையில் உட்பிரகாரத்திலிருக்கிறது. இவரை இக்காலத்துச் சில வைணவர்கள் தும்பிக்கையாழ்வார் எனக் கூறுகின்றனர்.

இது ஆடிசன்பேட்டைக் கடைத்தெருவிலிருந்து நேர் கிழக்கில் $1\frac{1}{2}$-மைல் தூரத்திலிருக்கிறது.

### 2 வைகுண்டப் பெருமாள் கோயில்

இது புராதனமாகப் பிண்டிக் கல்லால் கட்டிய கோயில். கைலாச நாதர்கோயில் போலவே இதுவும் பார்க்கத் தக்கதே.

இது காஞ்சிபுரம் கீழண்டை இராஜவீதியிலுள்ள வைகுண்டப் பெருமாள் கோயில் வீதியின் கிழக்குக் கோடியிலுள்ளது.

இன்னும் இந்நகரில் அநேக ஆலயங்கள் உள்ளன. சுருங்கக் கூறுமிடத்து ஆலயங்களால் அமைந்ததே காஞ்சிபுரம் என்று சொல்லலாம். இந்நகருக்கு வந்து நேரிற் பார்க்கத் தக்கனவற்றை எழுத்து மூலமாகத் தெரிவிப்பது முடியாததொன்று.

### சித்திர குப்தர் கோயில்:

சித்திர குப்தருக்கு இந்நகரிலன்றி வேறு எந்த இடத்திலும் கோயில் இருப்பதாகத் தெரியவில்லை. இப்பிம்பம் ஒரு கையில் எழுத்தாணியும், மற்றொன்றில் ஓலையும் தாங்கி இருக்கிறது. இக்கோயில் தென்னண்டை இராஜவீதி நெல்லிக்காரத் தெருவில் இரட்டை மண்டபத்தின் பக்கத்திலிருக்கிறது.

### ஜைனக் கோயில்:

திருப்பருத்திக் குன்றத்தில் ஸ்ரீ மகாவீர வர்த்தமான சுவாமியின் கோயில் ஒன்றிருக்கின்றது. இது மிகவும் பழமையான கோவில். ஆதியில் பல்லவ அரசர்களிற் சிலர் ஜைனர்களாக இருந்த போது கட்டப்பட்ட கோயில்.

இது இந்நகர்க்கு மேற்கே வேகவதி யாற்றின் தென்கரையில் உள்ளது. (வாட்டர் ஹவுஸுக்குச் சமீபம்)

### தீர்த்தங்கள் :

இந்நகரில் பிரசித்தி பெற்ற தீர்த்தங்கள் சருவ



தீர்த்தம், தாயார் குளம், வேப்பங் குளம், பருத்திக் குளம், வெள்ளைக் குளம், உலகாணி, சிவகங்கை, இஷ்டசித்தி முதலிய எண்ணில உள்ளன.

### தற்கால நிலை :

காஞ்சிபுரம் ஒரு பெரிய பட்டணமாக விளங்கி வருகிறது. இங்குள்ள ஆலயங்களைப் பார்க்க வடநாடு தென்னாடுகளிலிருந்து இலட்சக் கணக்கான ஜனங்கள் பிரதி வருஷமும் வந்து போகிறார்கள். காஞ்சிபுரத்தில் உற்சவம் நடவாத நாளே கிடையாது. ''விழாவறக் காஞ்சி மூதூர்'' என்றும் "வேடிமுழக் கொழியாக் காஞ்சி'' என்றும், புகழ்ந்தது இந்நகரையே.

காஞ்சிபுரம், சுமார் 50-வருஷகாலமாக முனிசிபாலிட்டியாக இருந்து வருகிறது. குழாய் ஜலம் வேகவதியாற்றில் தோண்டப்பட்டுள்ள இரண்டு பெரிய ஊற்றுக் கிணறுகளிலிருந்து ஜனங்களுக்கு உபயோகப்பட்டு வருகிறது. இங்கு சாலைகள் (ரோடுகள்) மிகவும் அகலமாகவும், இரண்டுபக்கங்களிலும் பலவகை மரங்கள் வைக்கப்பட்டிருத்தலால் மிக அழகாகவும் இருக்கின்றன. இப்போது மின்சார விளக்குகள் போடப்பட்டு வருகின்றன. இவ்வூரில் எந்தக்காலத்திலும் தொத்துவியாதிகள் வருவதே கிடையாது. இது 65000 ஜனத்தொகை கொண்ட ஊர்; மூன்று இங்ஙனே போஸ்டாபீஸ்களும் தாலுக்கா கச்சேரி, முனிசீப் கோர்ட்டுகளும் மூன்று போலீஸ் டேஷன்களும் ஒரு ரயில்வே ஸ்டேஷனும் அமைந்துள்ளன.

இவ்வூரில் பெரும்பான்மையோர் வியாபாரிகளெனினும் கைத்தொழில் செய்பவர்களுமாவார்கள். இவ்வூர் பட்டுநெசவிற்குப் பெயர்போனது. காஞ்சிபுரம் பட்டு சேலைகள் இந்தியாமுழுதும் அனுப்பப்படுகின்றன. சுமார் 12000 தறிகள் வேலைசெய்கின்றன. இரண்டு ஐஸ்கூல்களிருக்கின்றன.

இவ்வூர் வியாபாரத்திற்கும் வசிப்பதற்கும் மிகவும் சௌகரியமானது. ஆகவே எல்லா வகையாலும் இந்நகர் ஏற்ற நகரம் என்பதற்குச் சிறிதும் சந்தேகமில்லை. "கமலையில் பிறக்க முத்தி, காஞ்சியில் வசிக்க முத்தி'' என்பது ஆன்றோர் வாக்கு என்பதைத் தெரிவித்து இத்துடன் விரிவஞ்சிவிடுகிறேன்.


# திருக்குறள்

மூலமும் பொழிப்புரையும்.

| | | |
|---|---|---|
| பொருளீட்டும் கருத்தின்றி தமிழ் நாகரீகத்தின் புகழ்நாட்டும் கருத்தோடு நல்ல கிளேஸ் காகிதத்தில் பாக்கட் அளவில் அச்சிடப்பட்டுள்ளது. | 300 பக்கங்கள் உள்ள பெரிய புத்தகம் **விலை அணா எட்டு.** இதுவரை இத்தகைய உரை வெளிவந்ததில்லை. | சமத்துவம் சகோதரத்துவம் பெண்ணுரிமை முதலிய தமிழ் நெறிபற்றி எழுதப்பட்ட புத்துரை — தமிழர் அனைவரும் ஓதி ஒழுகவேண்டிய முக்கியமான நூல். |

''நவசக்தி'' ஆசிரியர், திரு. வி. கலியாணசுந்தர முதலியார்
முதலியோரால் நன்கு மதிக்கப் பெற்றது.

சொற்ப காப்பிகளே உள்ளன !

இன்றே ஆர்டர் செய்யுங்கள் ! !

ஒரு புத்தகம் வேண்டுவோர் தபால் செலவு சேர்த்துப் பத்தணா ஸ்டாம்பு அனுப்ப வேண்டும். 2 அல்லது 3 புத்தகங்கட்கு வி. பி. உள்பட தபால் செலவு அணா 7. ஆறு புத்தகங்கட்கு அணா 10.

**செங்குந்த மித்திரன் புத்தகசாலை** 17 பவழக்காரத் தெரு, சென்னை.

# நாவல் பகுதி

## மீனாட்சி சுந்தரம் (அல்லது) விவேகமுள்ள சுந்தரம்

[திருவாளர். ம. தட்சிணாமூர்த்தி முதலியார் அவர்கள் பி. ஏ.,]

(தொகுதி 4, பகுதி 12, 446-வது பக்கத் தொடர்ச்சி)

நாக:—(நகைத்து) சூழ்ச்சியாவது மண்ணாவது! கேள். ஒரு நாள் கற்பகம் ஒன்றும் குடிக்காமல் தொந்தரவு செய்திருந்தான். அச்சமயத்தில் நான் கற்பகத்திற்கு உடம்பு எப்படியிருக்கிறது என்று பார்க்க உங்கள் வீட்டிற்கு வந்திருந்தேன். 'உடம்பு ஒன்றும் இல்லை. ஆகாரம் உள் செல்லாததினால் தான் நோய்' என்று உன் தாயார் கூறினார்கள். உடனே நான் 'ஏன் சாப்பிடமாட்டேன் என்கிறான்?' என்றபொழுது, 'இதோ இந்தக் கஞ்சியை ஊற்றுங்கள் பார்க்கலாம்' என்று என் கையில் கரண்டியையும் கஞ்சியையும் கொடுத்தார்கள். உடனே நான் கற்பகம் அருகில் சென்று, "அவள் என்ன சண்பகத்தைப்போல் பிடிவாத முள்ளவளா? சண்டியா? இல்லை. நல்லவனாயிற்றே. குடித்து விடுவானே" என்று கூறி அவன் வாயில் கஞ்சியை ஊற்றினேன். அப்பா, இப்பொழுது நினைத்துக் கொண்டாலும் சிரிப்பு வருகிறது. உடனே கரண்டி எங்கேயோ பறந்தது. ஊற்றின கஞ்சியை என் முகத்தில் உமிழ்ந்தான். உன் அன்னையின் புடவையெல்லாம் கஞ்சியாயது. அருகிலிருந்த உன் பாட்டியார் 'எங்கே பிரம்பு? இவனை அடிப்போம்' என்று கூவினார்கள். நான் 'பிரம்பு எதற்கு? இப்பொழுது ஒரே வழியிருக்கிறது. இதோ நான் காலை நீட்டிக் கொண்டேன். இருவர் அவனைத் தூக்கிக் காலில் போட்டு கையைப் பிடித்துக் கொள்ளுங்கள்' என்று கூறிக் கால் நீட்டிய வண்ணம் உட்கார்ந்தேன். 'சண்பகம் இப்படித்தான் செய்தாள். நான் ஒரு நாள் அவளைக் காலில் படுக்க வைத்துக் கொண்டு, அவன் பல்லை யெல்லாம் உடைத்து வழிக்குக் கொண்டு வந்தேன். நீங்கள் ஏன் பயப்படுகிறீர்கள்' என்று கூறி அவர்களை அழைத்தேன். உடனே உன் தாயார், உன் இளைய தாயார் இருவரும் கற்பகத்தைத் தூக்க அருகில் சென்றார்கள். இரு காலாலும் இருவரையும் உதைத்துத் தள்ள, கதவின் மேல் போய் மோதினார்கள். கயிறு கொண்டு காலைக் கட்டக் கயிறு தேடினார்கள். நான் அப்பொழுது உன் பாட்டியார் கொண்டுவந்த பிரம்பை வாங்கி, 'இப்பொழுது தூக்குங்கள்' என்று கூறி, ஏதாவது சண்டித்தனம் செய்தால் அடிப்பது போல் பிரம்பைக் காட்டினேன். கற்பகம் பயந்து விட்டான். உடனே, 'கற்பகம்! இதைக் குடித்து விடு. என் கண்ணல்ல!' என்றேன். அதற்குள் கற்பகத்தைத் தூக்கி என் காலில் படுக்க வைத்தார்கள். கைகால்களைப் பிடித்துக் கொண்டார்கள். நான் கஞ்சியை ஊற்றினேன். உள் சென்றது. அப்பா! அன்று முதல் இன்று வரையில் கற்பகத்திற்கு என்னைப் பார்த்தால் பயந்தான்.

பின்பு இருவரும் ஏதோ வேறு விஷயத்தைப்பற்றிப் பேசினார்கள். சண்பகம் சமையல் அறையில் தன் தாய் விட்டுச்சென்ற வேலைகளைச் சரிவரப் பார்த்துக் கொண்டிருக்கும்போது, ஏதோ நினைத்துக்கொண்டு கூடத்திற்கு வந்தாள். தாய் சந்திர சேகரனிடம் இன்னும் பேசுவதைக் கண்டு,

சண்:—அம்மா! அம்மா! அண்ணா வந்து விட்டாரா?

நாக:—வரவில்லை. இதோ நானும் வருகிறேன் (என்று கூறிப் போக முயன்றான்).

சந்:—மீனாட்சி சுந்தரம் வருவதற்கு நேரமாகுமோ?

நாக:—அது என்னவோ தெரியவில்லை. மணி ஆகிறது: எப்படியும் சாப்பாட்டிற்கு வந்து விடுவான் (என்று கூறி),

நாகரத்தினம் மீனாட்சி சுந்தரத்தின் அறையைத் திறந்து, 'அப்பா! உள்ளே உட்கார், தம்பி வருவான்' எனச் சொல்லி, சண்பகத்தை அழைத்துக் கொண்டு உள் சென்றாள். சந்திர சேகரன் கதவை மூடி உள்ளே உட்கார்ந்து ஏதோ வாசிக்கத் தொடங்கினான்.

சந்திரசேகரன் நண்பன் வரவை எதிர் பார்த்து அமர்ந்திருக்க, வழக்கம்போல் பதினொன்று மணிக்குச் சாப்பாட்டிற்கு வருபவன் அன்று வரவில்லை. கருணாகரர் வந்து விட்டார். சந்திரசேகரன் அவர் வந்ததைக் கவனிக்கவில்லை:

கரு:—அவன் எங்கு சென்றான்? அறை பூட்டியிருக்கிறதே?

நாக:—எங்குச் சென்றானோ தெரியவில்லை. மணியோ பதினொன்று அடித்து, அரை மணி ஆகிவிட்டது. சந்திர சேகரன் வந்து அறையில் காத்திருக்கிறான். இன்னும் வரவில்லை.

கருணா:—சந்திர சேகரன் வந்திருக்கிறானா? ஏது சாப்பிட்ட பிறகுங்கூட வீட்டில் இருக்கப் போகிறதில்லை. எப்பொழுதும் எவனாவது வந்துகொண்டேயிருக்கிறான். வீட்டில் அடங்கி யிருப்பவனை இழுத்துக் கொண்டு போய், அங்கும் இங்கும் ஓடி, சோதயர்களிடமெல்லாம் சேர்ந்துக் கெட்டுப் போகப் புண்ணியம் கட்டிக்கொண்டார்கள் அவன் எப்படி போனால் அவர்களுக் கென்ன? கெடுவது இவன் தானே.



நாக:—என்ன எப்பொழுது பார்த்தாலும், இந்தப் பாடம் படிக்கிறீர்கள்? ஆணாய்ப் பிறந்தவன் வீட்டிலேயே அடைபட்டிருப்பானா? அறையில் சந்திர சேகரன் வாசித்துக்கொண்டிருக்கிறான். அவன் என்ன நினைப்பான்? இப்படித்தான் இராஜாமணி சண்பகத்தைக் கெடுத்து விட்டான், கெடுத்துவிட்டான், என்று கூறி அவனை ஓட்டிவிட்டீர்கள். இன்னும் திருப்தி யடைய வில்லையா? சந்திர சேகரன் ஏதோ அடிக்கடி வந்து போய்க்கொண்டிருக்கிறான். அதுவும் சம்மதம் இல்லையா?

கருணா:—ஏதாவது இருக்கட்டும் எனக்கு வந்ததென்ன? இவர்களை எல்லாம் யார் வரச் சொன்னது?

நாக:—யார் வருகிறார்கள்.

கருணா:—இனிமேல் எவன் வந்தாலும், வீட்டில் இல்லை என்று ஒரே வார்த்தை கூறிவிடு. இவன் சிநேகிதர்கள் என்ன செய்கிறார்கள் என்று பார்ப்போம். அப்படியாவது ஒழியட்டும்.

சண்பகம், பிதாவிற்கும் அன்னைக்கும் கோபம் அதிகரிப்பதைக் கண்டு, சச்சரவை முதிர வொட்டாமல் களைய நினைத்து ஒன்றும் அறியாதவள் போல, சமையல் அறையில் இருந்தபடியே,

சண்:—அம்மா! அம்மா! உலை பொங்கி வழிகிறது (என்று கூப்பிட்டாள்).

நாக:—உலை வைத்த ஞாபகம் கூட யில்லை. இதோ வந்தேன், இதோ வந்தேன் (என்று கூறி வேகமாய்ச் சென்றாள்).

கருணாகரர் கோபத்தை, நன்றாய் மூள எரியும்படி செய்ய பசியும் அதிகரித்தது. அவர் பதினொன்று மணிக்குச் சாப்பிடுவது வழக்கம். இன்று அவர் வலியத்தொடக்கின சச்சரவினால் மணி பன்னிரண்டு ஆகிவிட்டது. அப்பொழுதும், நாகரத்தினம் வழக்கம்போல் சாப்பிட அழையாததினால், அவருக்கு அடங்காத கோபம் வந்துவிட்டது.

கருணா:—(உரக்க) சண்பகம், சண்பகம், (என்று பன்முறை கூப்பிட்டார்.)

கருணாகரர் தன் சாப்பாடு தயாராக இருக்கிறதா என்று கேட்கக் கூப்பிடுவதாகச் சண்பகம் நினைத்தாள்.

சந்திரசேகரனிடம் பேசி யிருந்ததால், நாகரத்தினத்தால் போஜனத்தை மணிக்குத் தயாரிக்க முடியவில்லை. சண்பகம் பிதா கேட்டால் அன்னைச் சந்திர சேகரனிடம் பேசியிருந்ததைக் கூறப் பயந்தாள். ஆகையால் கருணாகரர் கோபத்திற்குப் பாத்திரமாகாமல் இருக்க, நாகரத்தினத்தைப் பார்த்து,

சண்:—அம்மா! அம்மா எனக்குத் தலை நோகிறது (என்றாள்).

நாக:—அடி! போய்ப் படுத்துக் கொள். அவரிடம் சற்றுப் போஜனம் நேரமாகும் என்று சொல்லடி.

சண்:—அம்மா! ஐயோ! அவர் கோபிப்பார். என்னை அடித்தாலும் அடிப்பார். பயமாயிருக்கிறது. நான் போய் என் அறையில் படுத்துக் கொள்கிறேன், (என்று கூறி, அறையை விட்டுச் சென்று, தன் அறையின் பின்புறமுள்ளக் கதவைத் திறந்து உட்சென்று, முக்காடிட்டுக் கொண்டு படுத்துக் கொண்டாள்).

கருணாகரர் சண்பகத்தைக் கூவி அழைத்ததும், வராது யிருப்பதைக் கண்டு,

கருணா:—எங்கு சென்றாள்? காதுகூட செவிடாகப் போய் விட்டதா? வாய்கூட அடைத்து விட்டதா? (உரத்த குரலோடு) நாகு, நாகு...... என்று கூப்பிட்டார்).

நாகரத்தினம் சமையல் அறையை விட்டு ஓடி வந்து,

நாக:—என்ன அவசரம்? எங்கும் தொலைந்து போகவில்லை.

கருணா:—சண்பகம் எங்கு ஒழிந்தாள்?

நாக:—அவள் எங்கும் ஒழியவில்லை. ஒழிந்தால் சுகமாய் இருக்கலாம். அவளும் சுகப்படுவாள்.

கருணா:—என்ன அவ்வளவு கெட்டுவிட்டது? அவளுக்கு என்ன குறைவு? அவளுக்காக உழைத்துப் போடுகிறேனே, இன்னும் திருப்தி யில்லையா? சீ, நன்றி கெட்டவள்!.

நாக:—அவள் நன்றி கெட்டவள் அல்ல. அவள் நொந்து சாவது தெரியவில்லையா? இன்னும் வருத்தம் வேண்டுமா?

கருணா:—சரி. பின் நான் கூப்பிட்டதற்கு ஏன் பதிலொன்றும் கூறவில்லை? இராஜாமணியை ஓட்டியது அவளுக்கு கோபமோ?

நாக:—கோபம் ஒன்றுமில்லை.

கருணா:—பின் என்னதான்?

நாக:—அவளுக்குத் தலை ஓயாமல் நோகிறதாம். மருந்து ஏதாவது சரியாக வாங்கிக் கொடுத்தால் தானே நிற்கபோகிறது. காலையிலிருந்து படுத்திருந்தாள்; சற்று வெளிவந்து ஏதோ என்னுடன் கலந்து வேலை செய்தாள். மீண்டும் தலைநோகிறது என்று கூறிவிட்டுச் சென்று அறையில் படுத்திருக்கிறாள்.

கருணா:—தலை நொந்தால் என்னை என்ன செய்யச் சொல்கிறாய்? மருந்து வாங்கிக் கொடுத்தால் சாப்பிட்டால் தானே நோய் போகும்?

நாக:—சாப்பிடாமல் இருக்கிறாளா? எல்லாம் புட்டிமேல் புட்டி சாப்பிட்டுத்தான் வருகிறாள். அது தீர்ந்தபாடில்லை.

கருணா:—வைத்தியன் சொன்னபடி ஏதாவது செய்கிறாளா?

நாக:—செய்யாமல் என்ன? ஏதோ மருந்து சாப்பிடுவதும், வாசிப்பதும், படுத்துக்கொள்வதுமாகத் தானே இருக்கிறாள். முன்பு போல்-அவளை வேலை

செய்ய கூறுவதில்லையே. எங்குதான் இருந்து வந்ததோ இந்த இழவெடுத்த தலைநோய்.

கருணா :—எங்கு இருந்து வந்தது? எல்லாம் தானாகவே வைத்துக் கொண்டது தான். வைத்தியன் கிளிப்பிள்ளைக்குக் கூறுவதுபோல், 'வாசிக்க வேண்டாம், அம்மா! நோய் அதிகரிக்கும்', என்று வற்புறுத்திக் கூறினான். கேட்கிறாளா? இவளே வைத்திய சிகாமணி. அவனுக்கென்ன தெரியும், இவனுக்கென்ன தெரியும் என்று அசட்டையாய்க் கூறுவதும், அந்தத் தடியன் கொண்டுவந்து கொடுக்கும், புத்தகங்களை வாசிப்பதும், ஏதோ ஏதோ நூதனமாகக் கற்றுக் கொண்டதாக உளறுவதுமாகக் காலத்தைக் கழித்து வருகிறாள். யார் பேச்சைக் கேட்கிறாள். இவள் படித்து என்ன உத்தியோகம் செய்யப்போகிறாள்? அந்த மடையன் படித்து என்ன நலம் பெற்றான்? வீட்டிற்கு அடங்காதவனாய்த் திரிகிறான். மேலும் இவள் பெண்பிள்ளை ஏதோ அடக்கமாகச் சமையல் அறையில் இருந்து கொண்டு, புருஷர் முன்னிலையில் வராமல், மறைவு பலகை வழியாய்ப் பார்த்துக் கொண்டும், புருஷர் எதிரில் நின்று பேசாமலும் இருப்பதை விட்டு, படிப்பதும், பாடுவதும், யார் வந்தாலும் முன் வந்து பதில் உரைப்பதும்—இந்த மாதிரி இருந்தால் யார் மெச்சிக்கொள்ளப் போகிறார்கள்? இந்தத் தலை நோய் தீர்வதற்கு. இவள் புத்தகத்தைத் தொடக் கூடாது. புத்தகத்தை எல்லாம் கிழித்துப் போடுகிறேன், அப்பொழுது தான் வழிக்கு வருவாள்.

நாக :—புத்தகம் படிப்பதினால்தான் தலைநோய் வருகிறதா? மற்றவர்கள் படிக்க வில்லையா? இராஜாமணி வாசிக்கவில்லையா? நூதனமாயிருக்கிறதே! இதென்ன புதுமை! வாசித்தால் கெட்டு விட்டார்கள் என்றால், பின் ஏன் ஒவ்வொருவரும் படிக்கவேண்டும்? பாஸ் செய்யவேண்டும்? படிப்பதற்காக ஊர்ஊராகத் திரிகிறார்கள், அவர்கள் பைத்தியக்காரர்களா? சிலர் பிச்சை எடுத்து ஒருவேளை சாப்பாடு சாப்பிட்டும் படிக்கிறார்களே, அவர்களெல்லாம் மூடர்களா? தாங்கள் பட்டினி கிடந்தேனும், மகன் படித்து முன் வந்தால் போதும் என்று நினைத்துப் பிள்ளையைப் போஷிக்கிறார்களே, அவர்களுக்கு வேறு வேலையில்லையா? படிப்பதால் ஒன்றும் முழுகிப் போகவில்லை.

கருணா :—சரி. வீண் பேச்சு ஏன்? நேரமாகிறது சாப்பாடு ஆயிற்றா?

நாக :—ஆவதற்குள் கூப்பிட்டீர்கள், வந்தேன். இதோ கொண்டு வருகிறேன். இவள் நோய் ஒன்று சங்கடம் கொடுக்கிறது. சிவனே என்று திரிந்து இருப்பவள், இப்படி அடிக்கடிப் படுக்கவேண்டுமா? இந்த நோயைத் தீர்க்க எந்த வைத்தியனாலும் முடியவில்லையா?

கருணா :—வைத்தியன் என்ன செய்வான்? அவனும் பார்த்து ஏதேதோ மருந்து கொடுக்கிறான்.

நாகா :—என்ன கொடுக்கிறான்? பணம்பிடுங்கிக் கொள்கிறான், அதுதான் பெருமை.

கருணா :—உங்களுக்கு இந்த வைத்தியன் பிடிக்கவில்லை, நான் என் செய்வது? ஏதோ நம் சக்திக்கு ஏற்றபடி, வைத்தியம் சொல்கிறான். வேறு எவன் இருக்கிறான்?

நாக :—ஏன் வேறு வைத்தியர் இல்லையா? அந்தக் கற்பகத்திற்குப் பார்த்தாரே அவருக்கென்ன? அவர் இல்லாவிட்டால், அவள் எழுந்து உலாவி யிருப்பாளா? ஏன் அவரை அழைத்து ஒரு முறைச் சண்பகத்தைப் பரீக்ஷை செய்யக் கூறலாகாது? அவர் மருந்துகொடுத்துப் பார்க்கட்டும், அதிலும் தீராவிட்டால் முருகன் தான் அவளைக் காப்பாற்ற வேண்டும்.

கருணா :—ஆமாம், கற்பகம் நோய் என்ன? இவள் நோய் என்ன? அவர்கள் தான் பணம் கொடுத்தார்கள், அவன் வீடு வந்தால் 15 ரூபாய் கொடுக்க வேண்டுமாம்; பார்ப்பதற்கு 25 ரூபாய் கொடுக்க வேண்டுமாம்; அவன் பெரிய ஆசாமி. அவனைப் பார்ப்பதானால் காலையில் 6 மணி முதல் அவன் வாசலில் காத்திருக்க வேண்டும். யாரால் முடியும்?

நாக :—கஷ்டப்படாமல் எப்படி மகள் வளர்ந்து விடுவாள்?

கருணா :—சரி, அது உன் அபிப்பிராயம். அவனை வீட்டிற்கு அழைத்து வந்து பரிசோதிக்கச் சொல்ல, அவனுக்குக் கொடுக்க என்னிடத்தில் பணம் இல்லை. இவன் தான் பார்க்கட்டும்.

நக :—சரி, உங்கள் இஷ்டம். நான் ஏதோ சொன்னேன். அப்படிப் பார்த்தால் அவள் சுகப்படுவாள் என்றேன்.

இவர்கள் இவ்வாறு பேசியிருக்க, சந்திரசேகரன் 'நாம் வந்ததாலல்லவா இவர் இப்படி மீனாட்சி சுந்தரத்தை ஏசிப் பேசுகிறார். நாம் வருவது இவருக்குப் பிடிக்கவில்லை போலும் சீ! இனி நாம் இங்கு வருவது மரியாதையல்ல. அருமையான குணத்தின் குன்றான—வாக்கில் சத்தியமே குடி கொண்ட மனதில் அழுக்காரற்ற நம் நண்பனை இவர் எப்படி தூஷிக்கிறார். மீனாட்சிசுந்தரம் இவருக்கு ஏன் மகனாகப் பிறக்க வேண்டும்? அவனுக்குப் பொருந்தியுள்ள குணத்திலும் பெருந்தன்மையிலும் இவருக்கு ஆயிரத்தில் ஒரு பங்கு, ஏன் இலட்சத்தில் ஒன்றுகூட இல்லை என்றே கூறவேண்டும், தந்தை குணம் மகன் பெறுவான் என்று உலகத்தில் கூறுவது நம் மீனாட்சி சுந்திரத்திற்கு உவமை ஆகாது. ஆ! அவன் சாந்தமென்ன? ஐயோ, இவர் கொடூரம் என்ன! அவன் பெருந்தன்மை என்ன? இவர் சிறுதன்மை என்ன! இவனுடைய குணத்தில் பாதி அவருக்குப் படிந்திருந்தால் எவ்வளவு நலமாக இருக்கும்! இப்படிப்பட்டவரிடம் சமாளித்து உயிர் வாழ்வது அபூர்வம் தான். மணிக்கு மணிக்குச் சண்டையும் சச்சரவுமாக அல்லவோ இருக்கிறது. என்ன போர்! என்ன சந்தேகம்! என்ன கொடுமை! சீ! இப்படிப்பட்டவரிடம் சம்பந்தப்



பட்டுக் கலந்து கூடி அடங்கி வாழ்வதை விட, பிறவாமலே இருக்கலாம். ஆ! மீனாட்சி சுந்தரா! இவ்வித கஷ்டத்தையும் பொறுத்துக் கொண்டு, ஒருத்தரிடமும் தந்தையைப் பற்றி விரோதமாகக் கூறாமல், உன் வருத்தத்தை உள் அடக்கிக் கொண்டு, பலர் முன் வந்து கலந்து, ஏதோ உற்சாகத்தில் பிறந்து வளர்ந்து சுகமாய் வாழ்பவனைப் போல் நடிக்கிறாயே, உன் குணம் மெச்சத் தக்கதே. ஆ! நண்பா! மீனாட்சி சுந்தரா! இனி நான் இந்த வீட்டில் காலை வைக்கப் போகிறதில்லை நீ காரணம் கேட்டால் என்ன உரைப்பேன். ஐயோ! என்னை மறந்து நீ எத்தனை நாளைக்குக் காலம் கழிப்பாய்? உன்னை நான் கண்டு சந்தோஷமாய்ப் பேசுவது உன் தந்தைக்குப் பிடிக்கவில்லை. இனி உன்னைக் கண்டு பேசினாலும், என்ன கெட்ட அபிப்பிராயம் கொள்வாரோ? நான் என் செய்வேன்? உன்னை நினைத்து வருந்தி, உன் நலத்தை நாடியே காலம் கழிப்பேன் ஆ! தோழா!' என்று மனங்கலங்கினான்.

மீனாட்சி சுந்தரத்தின் அறையில், சந்திரசேகரன் இவ்வாறு மனம் வருந்தி எண்ணியிருக்க, நாகரத்தினம் கருணாகரருக்கு அமுது படைத்தாள். கோபங் கொண்ட கருணாகரர், பசியால் வயிறு எரிய, என்ன செய்வது என்று தோன்றாமல், நாகரத்தினம் இட்டப்போஜனத்தை அருந்தினார். பசிதீரக் கோபமும் கொஞ்சம் கொஞ்சமாகத் தணிந்தது.

வழக்கமாகக் கருணாகரர் சாப்பிட்டு முடிந்தவுடன் வெற்றிலையை எடுத்துக்கொண்டு, மீனாட்சி சுந்தரத்தின் அறைக்கு வந்து, அவனுக்கு வந்த நிருபங்களைப் பரிசோதித்துத் தனக்கு என்ன கடிதம் பிடிக்கவில்லையோ, அது மீனாட்சிசுந்தரத்திற்கு எவ்வளவு முக்கியமான, கடிதமாயிருந்தாலும்சரி, அவசியம் பார்க்கவேண்டிய காகிதமாயிருந்தாலும் சரி. உடனே பதில் எழுத வேண்டிய காகிதமாயிருந்தாலும் சரி, முன்பின் யோசியாமல், கிழித்து எறிந்து, எழுதினவர்களைப் பாடி, மனம் திருப்தி கொண்டு தன் அறைக்கு வருவார். நாகரத்தினத்தினிடம் விஷயத்தைப் பத்தாக்கிக் கூறுவார். அன்றும் அவர் வழக்கம் போல் மீனாட்சிசுந்தரத்தின் அறைக்கு வந்தார். சந்திரசேகரனை ஜன்னல் வழியாகக் கண்டு மனதில் முணுமுணுத்தார். பின் தன் அறைக்கு வேகமாய்ப் போனார் செல்லும்போது, தபால்காரன் வந்து மீனாட்சிசுந்தரத்திற்கு நிருபங்கள் வந்திருக்கிறது என்று கூறினான். உடனே திரும்பிவந்து அவசரமாகக் கடிதங்களை வாங்கிச் சிலவற்றைக் கோபமாகப் பிடித்துக் கிழித்து எறிந்துவிட்டு, மற்றும் உள்ளதை நாகரத்தினமிடம் கொடுத்து அவனுக்குச் சேர்ப்பிக்கும்படிக் கூறி, உட்செல்ல முயன்றார். நாகரத்தினம் அவர் செய்த திருவிளையாடல்களைக் கண்டு "ஐயோ! அவனுக்கு என்ன பதில் அளிப்பது." நேற்றுக்கூட 'அம்மா! எனக்குப் பலர் பலவிதமான கடிதங்களை அனுப்புகிறார்கள். அவற்றுள் ஒன்றுகூட எனக்கு அகப்படுவதில்லை. எப்படி தப்பிவிடுகிறது என்று தெரியவில்லை. நீங்கள் இனி பத்திரமாய் வாங்கி வைத்துக் கொடுங்கள்' என்று கூறினான். ஐயோ! இவர் கிழிப்பதை அறிவானானால் என்ன செய்வானோ? அவனுக்கு உள்ள கோபத்தினால் எப்படி நடந்து கொள்வானோ? இதுவரை இவர் கிழிப்பது தெரியாமல் இருப்பதே நல்லதாயிற்று. இவருக்கு வந்ததென்ன? யார் நிருபம் எழுதினால் என்ன? ஐயோ! அவன் அறிவானானால், நான் வாளா இருக்கிறேன் என்று நினைத்துக் கோபித்து வார்த்தையாடுவானே. இதற்கு என் செய்வேன்? வந்தது வரட்டும்.' என்று வருந்தினாள்.

நாக :—என்ன, அவனுக்கு வரும் நிருபங்களையெல்லாம் கிழித்து எறிகிறீர்களே? அவன் பார்த்தால் என்ன நினைப்பான். நேற்று கூட கோபமாக, 'எனக்கு வரும் கடிதத்தை யார் பிரித்துபார்க்கிறது?' என்று கூறினான். இது என்ன வேலை?

கருணா :—வேலையா? அவன் கெடுவதற்குக் காலம் நெருங்கிவிட்டது. சீ-இந்தக் காகிதத்தை அவன் முகத்தில் எறி' என்று கூறிக் கடிதத்தை நாகரத்தினத்தின் முகத்தில வீசி எறிந்து அறைக்குச் சென்று கதவை மூடிக் கொண்டார்.

நாகரத்தினம் கிழித் தெறிந்த நிருபங்களைப் பொறுக்கி எடுத்துக் கொண்டிருந்தாள். அறையில் இருந்த சண்பகத்திற்குக் கருணாகரர் செய்த லீலைகளைப் பார்க்கப் பார்க்க தலைநோய் அதிகரித்தது. தமையன் வாராமையைக் குறித்து மனம் நொந்தாள். அன்னை கண்ணீர் விடுவதைக் கண்டு சகியாதவளாய் தானும் கண்ணீர் விட்டாள். இக்கோலத்தைக் கண்டு, மீனாட்சி சுந்தரம் அறையில் சோபாவில் சாய்ந்து கொண்டிருந்த சந்திர சேகரன் மனம் உடையும்போலிருந்தது. நண்பன் நேரம் சென்றும் வராமைக்குக் காரணம் புலப்படவில்லை. ஐயோ! காலதாமதத்தினால் வரும் கேடுகளைப்பாருங்கள் அவன் சரியான காலத்தில் போஜனத்திற்கு வாராததால் இவ்வளவு ஆடல்கள் நடந்தன. ஆனால் கருணாகரர் நிருபங்களைக் கழித்தெறியும் போது, சந்திர சேகரனுக்கு அடங்காதக் கோபம் மனதில் பொங்கி எழுந்தது. அவரை மேல் கிழிக்கவொட்டாமல் செய்யத் தத்தளித்தான்.

சந் :—(மனதில்) ஆ! அவரோ கோபக்காரர். நானோ கோபம் அதிகரித்தவன். இருவரும். ஒருவரோடு ஒருவர் மோதிச் சண்டைச் செய்ய நேர்ந்தால், முடிவு எப்படி ஆகுமோ.

சந்திரசேகரன் சற்றுச் சமாளித்துக் கொண்டு, கருணாகரர் கிழிப்பதைக் கண்டு பொறாமல், நண்பனுக்கு உதவி செய்ய முடியவில்லையே என்று மனம் துடித்து அமர்ந்திருந்தான். (தொடரும்)

# செங்குந்த யாத்திரைவாசி

## சித்திரகுப்தன் படலம்

(தொகுதி 4, பகுதி 12, 443-வது பக்கத் தொடர்ச்சி)

தருமராஜன்:—(பிரமதேவனைப்பார்த்து) சுவாமிகளே! சித்திரகுப்தனை எங்கு கண்டீர்கள். சமீபித்துவிட்டானு?

பிரம:—இதோ வந்துவிட்டான். வருகிற சமயந்தான்.

வீரவா:—பிரமதேவரே! சித்திரகுப்தன் எவ்விடத்திற்கு எதற்காக வருகிறான் அறிவீரா?

பிரம:—பெருமானது மஹா சந்நிதானத்தை நோக்கித்தான் வருகிறான். இங்கு நடக்கும் விசாரணை சம்பந்தமாகத்தான் வருகிறதாகத் தெரிகிறது. யான் முன்னர் கூறியதுபோல் தேவர்கள் முதலியோர் இதையறிந்து சித்திரகுப்தன் வரும் வழியில் திரள் திரளாக நின்று வேடிக்கை பார்ப்பதோடு விமோசனகாலம் அணுகிவிட்டதென்று குதூகுலத்தோடு ஆரவாரித்துக்கொண்டிருக்கிறார்கள். நாரதரை வாயார வாழ்த்துகிறார்கள்.

வீரவா:-தேவர்களுக்கு இவ்விசாரணையால் குதூகலமுண்டாவானேன்? நாரதரை வாழ்த்துவானேன்?

பிரம:—கந்தசோதரரே! பூலோகத்தில் தற்போது அதர்மம் தலைவிரித்தாடுவதற்கும், அநேக தேவாலயங்கள் தாறுமாறானநிலையில் இருப்பதற்கும், உண்மைப் பக்தியும், உண்மை அடியார்களும், உண்மை வைதீகமும், நாளுக்குநாள் மறைந்துகொண்டு வருவதற்கும் காரணம் செங்குந்தர்களது தற்கால சீர்கேடான நிலைதான் என்பதை யாவரும் நன்கு உணர்வரன்றே. இதன் காரணத்தை தங்களைப் போன்றவர்களுக்கு விவரித்துச் சொல்ல வேண்டியதில்லை என்று கருதுகிறேன். இவ்விசாரணையில் ஒருசமயம் விமோசனம் உண்டாக்கக் கூடும் என்ற எண்ணத்தால் தேவர்கள் சந்தோஷமடைகின்றனர்.

ஆனல் இவ்விஷயத்தைத் (செங்குந்தர்கள் சீர்கேடான நிலையை) தக்கவர்களோடு செவ்வியறிந்து தெரிவித்துப் போதிய ஏற்பாடுசெய்விக்கத் தகுந்த ஆற்றலும் பெருமையும் உடையவரின்றி இதுகாறும் ஏங்கியிருந்தனர். கைம்மாறு கருதாது அதனைச் செய்துமுடிக்க முன்வந்த நாரதரை வாழ்த்துகிறார்கள். இதற்கு விமோசனகாலமு முண்டோ என ஏங்கின்றார் பலர். முயல எண்ணினர் பலர். முயன்றால் என்ன நேருமோ வென அஞ்சி நின்றார் பலர். முயன்றும் மன முளைந்தார் பலர். அவரங் மனோசாமாய், அப்பாலுக் கப்பாலாய், யாவும் கடந்துநின்ற பொருளை சனகாதி நால்வருக்குச் சிவபெருமான் சொல்லாமற் சொல்லி யருளும் பொருட்டு சின்முத்திரைதாங்கிய குருமூர்த்திகளாய் எழுந்தருளி யிருந்தகாலத்தில் அப்பெருமானை யார் அணுகுவது என்று ஏங்கி இருந்தது போல் தேவர்கள் தக்கவர் காணது தவித்து நின்றனர். அக்காலத்து மன்மதன் அடைந்த கதி அடையாது இதுகாறும் இதோ இருந்துவரும் நாரதரின் ஆற்றலைநோக்கி வியந்து வாழ்த்துகின்றனர்.

நாரதர்:—(எழுந்து) ஆமாம். மன்னிக்கவேண்டும். மன்மதனுவது இன்றும் அனங்கன் என்றபெயரோடு இருந்து வருகிறான். முன்னமே என்கதி அதோகதி யாய்விட்டிருக்கும். யார் செய்த பூஜா பலமோ! நல்லசமயத்தில் தருமராஜனும் தாங்களும் வந்து நேர்ந்தீர்கள். எந்தகாலத்திலாவது என் வாயில் பொய் வந்ததுண்டா! எனக்கென்ன வந்தது பொய் பேச. செங்குந்தர்கள் எனக்கு விரோதிகளா? அவர்களிடத்தில் எனக்குள்ள அன்பினலன்றே இவ்வளவு பிரயாசை எடுத்துக்கொண்டேன். உண்மை பொய்யாகவும், பொய் உண்மையாகவும் தோன்றும் இக்கலியில் இந்த வம்பெல்லாம் நமக்கேன். உத்தியோகத்தை ராஜீனமா கொடுத்துவிடலாமென்றும் தோன்றிற்று. (வீரவாகுதேவரைப் பார்த்து) இப்போதாவது அடியேன் வெளியே போக உத்தரவு கிடைக்குமா?

வீரவா:—நாரதரே! நீர் இப்போது போகக் கூடாது. சித்திரகுப்தன் வருகிறான்.

நாரதர்:—அப்படியே விசாரணை பூர்த்தியாகிற வரையில் இருக்கிறேன். இதைவிட எனக்கென்ன வேலை!

இச்சமயத்தில் சுமார் 5-அடி உயரமும், வழுக்கைத்தலையும், பலகீற்றுகள் பொருந்திய நெற்றியும், அழகிய மீசையும், ஒளிபொருந்திய முகமும், நுண்ணிய நோக்கமும், அடக்கமும், சுருசுருப்பும் அமைந்த ஒரு உருவம் வியர்வை ஒழுக ஒழுக ஓடிவந்து கொலுமண்டபத்தின் வாயிலண்டை அடியற்ற மரம்போல் வீழ்ந்து எழுந்து, சிரமேற் கைகூப்பி அரோஹரா முருகா! வேலு மயிலுந் துணை! 'திணியான மனோசிலை மீதுனதாள்-அணியார் அரவிந்தம் அரும்புமதோ - பணியாவென வள்ளி பதம்பணியும் - தணியா அதிமோக தயாபரனே' என்று வாயாரப்பாடி இன்றே சிறியேன் உய்ந்தேன். திருமாலொடு நான்முகனும் தேடியுந் தேடொணாத தேவனை இன்று நான் தேடாது கண்டுகொண்டேன். என்முன்னோர் செய்த நல்வினையோ இங்ஙனம் வந்து நேர்ந்ததுவே! என்னையாளுடைய இளம்பூரணப்பெருமான், பச்சைமயிலேறும் பரமதயாளு, சேவற்கைக்கோளன், பிரமதேவரைக் குட்டிச் சிறையிட்டுக் சிருட்டித்தொழில் மேற் கொண்டிருந்தருளியகாலத்தில் பெருமானைத் தரிசித்துள்ளேன். அன்றுமுதல் இன்றுகாறும், ஒரு க்ஷணமும் ஓய்வில்லாத என் உத்தியோக நிர்ப்பந்தத்தால் வாய்க்கப்பெறாத பெரும்புண்ணியம் இன்றே வாய்க்கப்பெற்றேன்; எனப் போற்றிப் புகழ்ந்து தருமராஜன் அருகேவந்து நின்றான். இவனே சித்திரகுப்தனென யூகித்துக்கொண்டேன்.



தரும:-(வீரவாகுதேவரைநோக்கி)ஸ்வாமி! தயவுசெய்து விசாரணை தொடங்கலாம். சித்திரகுப்தன் வந்து விட்டான். (சித்திரகுப்தனைப் பார்த்து தாழ்ந்த குரலில்) தயார்தானு? கணக்கோடு வந்திருக்கிறாயா?

சித்திர:—வேண்டியவற்றோடு தயாராய் வந்திருக்கிறேன்.

நாரதர்:—ஸ்வாமி! இனிப் பொதுவாய் விசாரிப்பதில் பயனில்லை. நபர்வாரி விசாரிப்பதே நலம். அப்போதுதான் விஷயம் எல்லோருக்கும் நன்கு விளங்கும்.

வீரவா:—ஆமாம். அதற்காகத்தான் உம்மை இருக்கச்சொன்னேன். உம்முடைய பேச்சு பொய்யென்றும், மெய்யென்றும் இனிமேல்தான் தெரியப்போகிறது.

நாரதர்:—நல்லது! இனிமேல்தான் எல்லாம் தெரியும். (பக்கத்தி லிருந்தவரைப் பார்த்து மெல்லிய குரலில்) இப்படி இழுத்து அம்பலத்தில் வைத்தாலல்லவோ இவர்களுக்கும்படும். ஒருவழியும் ஏற்படும். நான் ஏன் இதைவிட்டுப்போகிறேன் முடிகிறவரையில்!

வீரவா:-தருமராஜனே! சித்திரகுப்தனை நேராய் விசாரிக்கலாமே.

தரும:—தேவரீர் விருப்பத்திற்குத் தடை கூறுவாருமுண்டோ?

வீரவா:—சித்திரகுப்த! செங்குந்தர்களுடைய தற்காலநிலைமையைப்பற்றி உனக்குத் தெரிந்ததைச் சுருக்கமாகக் கூறுவாயாக.

சித்திர:—ஸ்வாமிகளே! அப்படியே என்னல் கூடியவரையில் சுருங்கச்சொல்லி விளங்கவைக்கின்றேன். பிழையிருப்பின் பொறுத்தருள்வீராக இப்போது தாங்கள் பூலோகத்திற்குச் சென்று செங்குந்தர்களைப் பார்ப்பீர்களாயின் அவர்களைத் தங்கள் சந்ததியாரென்று ஒப்புக்கொள்ளவே மாட்டீர்கள். அவர்கள் பண்டைப்புகழைக் கூறும் நூல்கள் யாவும் பொய்நூல்கள் என்றே பிறரால் மதிக்கப்பெற்று வரும்படியான அவ்வளவு தாழ்ந்த நிலைக்கு வந்துவிட்டார்கள். கல்வி ஒழுக்கங்களில் மேம்பட்ட சிலர் தங்களைச் செங்குந்தர்கள் என்று சொல்லிக்கொள்ளவும் விரும்புவதில்லை. இவர்கள் பதினெண்மலையாளம், கலிங்கம், ஈழம், வங்கம், மாளவம் முதலிய நாட்டரசர்களைப் போர்க்களத்தில் முறியடித்துச் செயக்கொடி நாட்டியகாலத்தில், பிரபலசிவாலயங்களும், குகாலயங்களும் இவர்கள் பரிபாலனத்தில் இருந்தகாலத்தில்,இவர்களுக்கிருந்த பெருமையென்ன! செல்வாக்கென்ன! இப்போதுள்ள சீர்கேடான நிலையென்ன! இவர்கள் தேவாலயங்களுக்குள் பிரவேசிக்கலாகாதென்றும், பொதுக்குளங்களில் நீர் எடுக்கலாகாதென்றும், சில இடங்களில் நிபந்தனைகள் ஏற்பட்டிருக்கின்றனவென்றால் இதற்குமேலும் விவரிப்பானேன். இவர்கள் இகபரமென்னும் இரண்டும் கெட்டவர்கள். முடிவாக இவர்கள் அறிவின்மையாலும், அற்பத்தன்மையாலும் பூலோகத்தையே நரகமாக்கிக்கொண்டு துன்பத்தையே அனுபவித்து வருகின்றனர். அதர்மத்திற்கு அஞ்சுவதே கிடையாது. காருண்யத்தைக் கனவிலுமறியார். இவ்வளவும் பெருபான்மை குறித்தே கூறினேன். அந்தோ...

வீரவா—சரிபோதும்; பொதுவாய்ச் சொல்லுவது போதாது. தனித்தனி நபர்களைக்கொணர்ந்து அவர்கள் செய்த அக்கிரமங்களை விவரித்துச் சொல்லமுடியுமா?

சித்திர:—தேவரீர் சித்தப்படியே செய்யக் காத்துக்கொண்டிருக்கிறேன். ஆனல்...பொதுப்படக் கூறினலே பல யுகங்கள் மாண்டுபோகும். நபர்வாரி கூறுவதென்றால்......வகைக் கொருவராகத் தேர்ந்தெடுத்து வந்தபோதே அவர்கள் சம்பந்தமான தஸ்தாவேஜுகள் எண்ணிறந்த வண்டிகளில் கொண்டுவர நேர்ந்தது.

வீரவா:—வகைக் கொன்றே போதுமானது. இனிக் காலதாமதமின்றி ஆகவேண்டும். பயிரை மேயும்-வேலிகளைப்பற்றி முதலில் கவனிப்போம்.

## சோணசலப்படலம்

அச்சமயத்தில் கொலுமண்டபத்தின் வாயிலுக்கு அப்புறம், கண்கொண்டு பார்க்க முடியாததும், நாக்கொண்டு இத்தகைத்தென சொல்லமுடியாததும்,—அந்தோ என்ன சொல்வேன்—உச்சிமுதல் உள்ளங்கால் வரை சீயும், ரத்தமும் ஒழுகிக்கொண்டிருப்பதும், நடக்கவும், நிற்கவும், பேசவும் சக்தியற்றதாயும் நாலுபேர் தாங்கிக்கொண்டு வரப்பட்டதாயுமுள்ள ஒரு அகோரரூபம் தோன்றிற்று. தோன்றிய இரண்டொரு நிமிஷத்திற்குள் திடீரெனக் கீழே விழுந்தது, சபையோர்கண்டு சிவசிவ! என்று சொல்லிக் கண்ணை மூடிககொண்டனர்.

சித்திர:—இதோ ஸ்வாமி! (அக்கோர உருவத்தைச் சுட்டிக்காட்டி) இவர் ஒரு பெரிய நாட்டிற்கு அதிகாரி. பரம்பரையான அதிகாரி. இவர் ஏழைகளுக்கு இழைத்த இன்னல்களுக்கு அளவே இல்லை. பஞ்சமாபாதகங்களுக்குள் நடுநாயகமாய் விளங்கும் மதுபானத்திலும், மாம்சபக்ஷணத்திலும் மிகுந்த பிரியமுள்ளவர். லஞ்சம்கொடுக்காத விவகா

ரத்தில் தலையிடவேமாட்டார். மன்றேரஞ் சொல்வதில் நிபுணர். ஈரமென்பது இவருக்கு ஜென்ம விரோதி. பொய்கணக் கெழுதுவதில் நிகரற்றவர். பொதுப்பணத்திற்குக் கணக்கே காட்டுவதில்லை. கணக்குப் பார்க்கவேண்டுமென்போரை நெருங்கிக் கேட்க இடங்கொடுப்பதில்லை. இன்னெரு விஷயத்தில் வர்ஞசிரமமே கவனிப்பதில்லை. இந்நாட்டைச்சேர்ந்த கிராமங்களில் தீராத விவகாரங்கள் இந்நாட்டிற்கு வருமாயின் வந்தவர்கள் காலை ஒடித்துக் கழுத்தில் கட்டுவார். இவருக்குத்தகுந்தபடி ஆலோசனை கூறும் தர்மந்திரிகளும் பொருத்தமாக அமைந்திருந்தார்கள். இவரும் இவர் தர்மந்திரிகளும் கூடிய கூட்டமே அந்நாடாளும் மன்றமாகும். ஒரு கிராமத்தைச் சார்ந்த ஒரு பெரியார் இவரையும் இவரைச்சார்ந்தவர்களையும அவமானப் படுத்திய கதை ஒன்று ஞாபகத்திற்கு வருகிறது. திருவுளச்சம்மதமாயின் அதைச் சொல்லுகிறேன். அது ஒரு வேடிக்கையான சம்பவம்.

கற்கோட்டையென்னும் ஒரு கிராமத்திலிருந்து ஒரு வழக்கு இந்நாட்டிற்கு வந்தது. அதற்கு முதலாளியாக வந்தவர் குமரப்பமுதலியார் என்னும் ஒரு உத்தமர். இம்முதலியார் உண்மையிலேயே பெருந்தன்மை வாய்ந்தவர். தம்மூர்ச் சங்கிலியோடும், பயபக்தியோடும் நியாயம் பெறும் பொருட்டு நாட்டதிகாரிகளை நாடிவந்தார். நாட்டுத்தலைவராகிய சோஞசல முதலியார் என்னும் இவர் அவருக்குப் பேட்டிதருவதே அருமையாகவிருந்தது. கடைசியாக கற்கோட்டை குமரப்ப முதலியார் இந்த சோஞசல முதலியாரைக்கண்டு நாடுகூட்டித் தாம் கொண்டுவந்துள்ள விவகாரத்தைப் பைசல் செய்யுமாறு முறைப்படி வேண்டிக்கொண்டனர். ஆகட்டும், யோசிப்போம்; யோசிப்போம்: என்று சொல்லிக்கொண்டே மூன்றுமாதம் கழித்தார். வந்த பெரியார் அடுத்தடுத்து ஞாபகமூட்டிக்கொண்டுவந்ததால் நாடு கூட்ட ஒருநாளைக் குறிப்பிட்டார். ஆனல் அன்று யாரும் வராததால் கூட்டம் கூடவில்லை. கூட்டத்திற்கு இவ்வாறு பலநாள் குறித்ததுண்டு. தலைவராகிய இவர் நாடு கூடுவதற்கான உண்மையான முயற்சி எடுத்துக்கொள்ளாதபடியால் கூட்டம் சேரவில்லை. தான் உண்மையாய் நடந்துகொள்வதாகக் குமரப்பமுதலியாருக்குக் காட்டவேண்டி அச்சமயங்களில் அடுத்த தெரு அருஞசல முதலியாரைக் கூப்பிடுங்கள். சின்னதெரு சிதம்பர முதலியாரைக் கண்டீர்களா? எதிர்வீட்டு ஏகாம்பரமுதலியாரைக் கூப்பிடுங்கள். நடுத்தெரு நாராயண முதலியாரைக் கொஞ்சம் பாருங்கள். என்று சொல்லி சாக்குப் போக்குகள் காட்டி வந்தார். அவர்களைப் போய்க் கூப்பிடும் போதெல்லாம் இதோ வருகிறேன் இந்தவேலையை முடித்துவிட்டு. நாட்டாண்மைமுதலியாரைப்பார்த்தீர்களா? தேவஸ்தான வியாஜ்ஜிய சம்பந்தமாக வக்கீல் இன்று என்னை வரச்சொல்லி இருக்கிறர். தென்னைமரத்திலேறி இன்று கன்றுக்குட்டிக்குப் புல் பிடுங்கப் போகிறேன்; நான் எப்படி வரமுடியும். என்பனவபோன்ற பொருத்தமற்ற பதில் சொல்லி யனுப்பிவிடுவார்கள்.

இவ்வாறு மாதம் ஒன்பது கடந்துபோயிற்று. நாடு கூடியபாடில்லை. விவகாரத்திலும், சொல்வன்மையிலும் கைதேர்ந்த கற்கோட்டை குமரப்ப முதலியார் என்னசெய்வார் பாவம். தபிக்கிறர். நாட்டுக் கட்டுப்பாட்டை நிராகரிக்கவும் முடியவில்லை. நாட்டதிகாரிகளும் பிடிபடாதவர்களாயிருக்கிறர்கள். நியாயத்தை விலைகொடுத்து வாங்குவதென்பதும் இவருக்குப் பிடிக்கவில்லை. இவருக்கும், இவரது சிப்பந்திகளுக்கும், குதிரைக்குமாக மாதம் ஒன்றுக்கு 75-ரூபாய்க்குமேல் பிடிக்கிறது. பொறுமையும். நம்பிக்கையும் இழந்தாரில்லை. தம்மூருக்குப் போய்வரலாமென்றலோ, நாடு கூடுகிறசமயத்தில் நீர் இங்கில்லாததால் காரியம் கெட்டுப்போய்விட்டது என்றுசொல்லி இவர் மேல் பழி சுமத்துவார்கள் போலிருந்தது. இப்படியே பார்த்துப் பார்த்து மாதம் பன்னிரண்டாய் விட்டது. இதுவரையில் இச்சோஞசல மகானுபாவராவது மற்றவர்களாவது குமரப்பமுதலியாரது சாப்பாடு முதலிய வசதிகளைக் குறித்துக் கவனித்த நாளே கிடையாது. பன்னிரண்டாம் மாதத்தில் நாடுகூடுவதாகக் குறித்த ஒருதினம், இதோ கிடக்கும் நாட்டாண்மைக்காரர் தமது தர்மந்திரிகளுள் ஒருவராகிய அருஞசல முதலியாரை (வழக்கம் போல்) அழைத்து வரும்படி குமரப்ப முதலியாருக்குக் கட்டளையிட்டார். கற்கோட்டைக் கிராமாதிகாரியாகிய பெரியவரும் வழக்கம்போல்தமது சங்கிலியை அருஞசலமுதலியாரிடம்அனுப்பினர். அவ்வாறேசென்றசங்கிலியைஅருஞசலமுதலியார் அண்டைவீட்டு அம்மையப்ப முதலியாரைப் பார்க்கச் சொன்னர். அம்மையப்ப முதலியாரும் வழக்கம்போல் 'வருகிறேன் போ' எனப் பதிலிறுத்தார். இவர் இப்போது வருகிறேன் என்று சொல்லிய வார்த்தைக்கு இவர்கள் வைத்தபொருள் எந்த அகராதியிலும், நிகண்டிலும் கிடைக்காது. இவர்களுக்குப் பிரத்தியேகமான அகராதி ஒன்றுண்டு. வந்த ஆளுக்கு அப்பொருள் தெரியும். ஆகையால் ஒன்றல்ல இரண்டல்ல பன்னிரண்டு மாதங்களாக வீடுவீடாக நடந்து நடந்து காலோய்ந்து அலுப்புற்ற (குமரப்ப முதலியார்) சங்கிலி 'நல்லநாடு! ரொம்ப ஒழுங்கானநாடு!! காலை ஒடித்துக் கழுத்தில் கட்ற நாடு!!! போயும் போயும் இந்த நாட்டைத்தேடி வெவாரத்தைக் கொண்டுவந்தோமே.' என்று சொல்லிக்கொண்டே திரும்பினன்.

இதைக் கேட்டுக்கொண்டிருந்த அம்மையப்ப முதலியார், குமரப்பமுதலியார் ஆள் நாட்டை அலக்ஷியமாகப் பேசினன் என்று இந்த சோஞசல முதலியாருக்கு உடனே சொல்லி யனுப்பினர். நாடு ஐந்தேநிமிஷத்தில் கூடிவிட்டது. எதற்காக? நாட்டை அலக்ஷியமாகப் பேசியதற்காக குமரப்ப முதலியாரைத் தண்டிக்க. ஒருவரும் பாக்கியில்லாமல் வரவேண்டிய எல்லோரும் வந்துவிட்டனர். உடனே குமரப்ப முதலியாருக்கு ஆள் போயிற்று. அவரும் வந்தவேலை எதிர்பாராதவண்ணம் நல்லகாலம் முடிந்ததென்று சந்தோஷத்தோடு வந்து சேர்ந்தார். சபை நிசப்தமாயிருந்தது அளவற்ற குடும்பங்களையும், பலகிராமங்களையும் பாழாக்கிய



இந்தக் குடிக்கார அயோக்கிய நாட்டாண்மை சோஞசலமுதலியார், கல்விகேள்விகளில் தேர்ந்தவரும், பரமபக்தரும், ஆசாரபரரும், உலகானுபவம் நிறைந்த வயோதிகரும், மறந்தும் பொய்பேச அறியாத உத்தமருமாகிய கற்கோட்டைக் குமரப்பமுதலியார் விபூதி ருத்திராக்கம் தரித்தவராய்ப் பொன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் மேனிப் பொலிந்திலங்கும் சிவபெருமானைப் போல் மலர்ந்த முகத்தோடு சபையைக் குமாரக்கடவுளின் சந்நிதானமென்றே பாவித்துச் சிரமேற் கூப்பிய கையராய் வரலும், இச்சோஞசலப்பாவி! அப்பெரியாரை உட்காரவும் விடாது மரியாதையுமின்றி 'குமரப்பமுதலியாரே! உன்மேல் குற்றமிருக்கிறது. நின்று பதில் சொல்லவேண்டும்' என்றுன்.

குமரப்பமுதலியார் திடுக்கிட்டு நின்று குற்றமிருப்பின் உறவின்முறை ஆண்டவமார்களுக்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன் என்று சொல்லிப் புன்னகையோடு கும்பிட்டு நின்றுர். ஆதிமுதல் செங்குந்தத்திற்குரிய பெருமைகளையெல்லாம் இத்தலைவர் வரிசையாகக் கூறி அத்தகைய நமது முன்னேர்கள் ஏற்படுத்திய இந்த நாட்டை உன்னுடைய ஆள் அலக்ஷியமாகப் பேசினன். அது நீ செய்த குற்றமேயாகும். என்ன சொல்லப்போகிறய்; எனக் கடாவினர்.

பின்னர் நிகழ்ந்தவை கீழ்க்கண்டவாறு

கற்கோட்டை குமரப்ப முதலியார் :—என்னுடைய ஆள் எப்போது, எவ்விடத்தில், எவ்விதமாக நாட்டை அலக்ஷியமாகப் பேசினன்? தயவுசெய்து ஆண்டவமார் விபரமாய்ச் சொல்லவேண்டும்.

சோஞசலமுதலியார் நடந்ததைக் கூறினர்.

க. குமர:—அப்படியா! பதில் சொல்லவேண்டியதுதான். சொல்லுகிறேன். ஆனல் பதில் கூறும் வரையில் ஆண்டவமார் யாரும் எழுந்துபோகக் கூடாது. ஆண்டவன்மேல் ஆணை யிருக்கிறது.

ஆழ்ந்து யோசிப்பவரைப்போல் நெடுநேரம் மௌனமாய் நின்றுகொண்டிருந்தார். கூட்டம் காலை 9-மணிக்குக் கூடிற்று. இப்போது மணி 12-ஆயிற்று.

அருஞசல முதலியார்:—என்னையா! குமரப்பமுதலியாரே! சும்மாவிருந்தால் நேரமாகிறதே.

க. குமர:—(கும்பிட்டு) ஆண்டவன்மேல் ஆணை இருக்கிறது. யாரும் எழுந்திருக்கக் கூடாது. யோசித்துச் சொல்லுகிறேன்.

மணி 2-ஆயிற்று

நடுத்தெரு நாராயண முதலியார்:—ஐயா! கற்கோட்டையாரே! இன்னுமா யோசிக்கிறீர். சாப்பாட்டுவேளையாய்விட்டதே!

க. குமர:—பொறுங்கள். ஆண்டவன்மேல் ஆணையிருக்கிறது. எழுந்திருக்கக்கூடாது. 'யாகாவாராயினும் நாகாக்க காவாக்கால் — சோகாப்பர் சொல்லிழுக்குப்பட்டு' என்றுர்களே பெரியோர்களே! யோசிக்காமல் ஆண்டவமார் சந்நிதானத்தில் அவசரப்பட்டுப் பேசலாமா? யாரும் எழுந்திருக்கக்கூடாது.



ஆற்றுன் அளவறிந்து கற்றவரும், உத்தமசிகாமணியுமாகிய இப்பெரியாரிடத்தில் சபையில் பேச்சுக்கொடுப்பதென்றல் யாருக்கும் கொஞ்சம் அச்சந்தான். மணி 4-ஆயிற்று.

சின்னத்தெரு சிதம்பர முதலியார்:—ஐயா! சாப்பாட்டுவேளை தவறிவிட்டதே! மாலை ஆறுமணிக்கு மேல் மறுபடி கூடலாமே அவரும் நன்றய் யோசிக்கட்டுமே,

பெரியதெரு பொம்பல முதலியார்:—ஆமாம் அப்படியே செய்யலாம். அவர் விவகாரமும் முடிய வேண்டுமே. அவர் எங்கே போய்விடுகிறர்.

க. குமர:—ஆண்டவன்மேல் ஆணையிருக்கிறது. மன்னிக்க வேண்டும். யாரும் எழுந்திருக்கக் கூடாது. முன்னேர் ஏற்படுத்திய நாட்டின் பெருமையைக்கண்ணுங்கருத்துமாகப்பாதுகாக்கும் அதிகாரிகளாகிய உங்களுக்குக் கீழ்ப்பட்ட நான் எவ்வளவு ஜாக்கிரதையாகப் பதில் சொல்லவேண்டும்! யோசிக்காமல் சொல்லலாமா? ஆண்டவன்மேல் ஆணையிருக்கிறது. யாரும் எழுந்திருக்கக்கூடாது.

மணி ஆறும் ஆய்விட்டது ஊர் ஜனங்கள் எல்லாம் ஒன்றய்க் கூடிவிட்டார்கள்.

ஏகாம்பர முதலியார்:—ஐயா! முதலியாரே! யோசித்தது போதாதோ?

க. குமர:—ஒரு பெரியநாட்டை, அது எவ்வளவுதான் மற்றவர்களை அலக்ஷியம் செய்துவந்தபோதிலும், முன்னேர்கள் ஏற்படுத்திய பெருமைபொருந்திய நாட்டை, என்னைப்போன்றவர்கள் பயந்து தலைகுனிந்து வணங்கிப் பெருமைபடுத்தும் நாட்டை ஒரு சாதாரண கிராமவாசி அலக்ஷியமாகப் பேசுவது மிகப் பெருங்குற்றமல்லவா! குற்றவாளியும் நாட்டின் பெருமைக்குத் தகுந்தபடி யோசித்துப் பதில் கூறவேண்டாமா? முன்னேர்கள் பெயரையும், நாட்டின் பெருமையையும், பாதுகாப்பதற்கே பிறந்த நமக்கு சாப்பாடு பெரிதா? நாட்டு விவகாரம் பெரிதா? ஆண்டவன்மேல் ஆணையிருக்கிறது. தயவுசெய்து யாரும் எழுந்திருக்கக்கூடாது. இதோ யோசித்துச் சொல்லுகிறேன். யோசித்துக்கொண்டிருக்கும்போது இடை இடையே பேசுவது சரியல்ல.

மணி எட்டுமாயிற்று, பத்துமாயிற்று, பனிரண்டுமாயிற்று.

நாட்டதிகாரிகள் ஊண் உரக்கமின்றி எங்கி ஆண்டவன்பேரில் இட்டுள்ள ஆணைக்கு அஞ்சி குணக்குன்றுகிய கற்கோட்டை குமரப்பமுதலியார் அவர்கள் வாய்ப்பிறப்பை எதிர்பார்த்தவண்ணமாயிருந்தார்கள். பசியாலும், சபையில் சொல்வன்மை வாய்க்கப்பெற்ற கற்கோட்டையாரை எதிர்த்துப் பேசும் சக்தி இன்மையாலும், திரிகரணங்களும் சோர்ந்திருந்த இச்சோஞசல முதலியாரையும் பிற

ரையும் பார்த்து இத்துஷ்டர்களுக்கு இதுவே போதுமான தண்டனை என்று எண்ணி மனமிரங்கிப் பின்வருமாறு கூறத்தொடங்கினர்.

'ஆண்டவமார்களே! காலதாமதமானதற்காகச் சிறியேனை மன்னிக்கவேண்டும். நமது நாட்டின் பெருமைக்குத் தக்கவாறு ஆழ்ந்து யோசித்தேன் இதுவரையில். என் புத்திக்கெட்டிய விடை கூறுகிறேன். தயவுசெய்து கேளுங்கள். நாட்டை அலக்ஷியமாகப் பேசியதாகச் சொல்லப்படும் குற்றம் என்னைச் சாராது. நாட்டதிகாரிகளுள் ஒருவரையே சாரும் என்பதே எனது தாழ்மையான அபிப்பிராயமாகும். எவ்வாறெனில் நான் என் ஆளை அருணசல முதலியாரிடத்தில் மாத்திரமே அனுப்பினேன். அவனை அம்மையப்ப முதலியாரிடத்திற்கு அனுப்பியது யானல்ல, உங்களில் ஒருவராகிய அருணசல முதலியாரேயாவர். அவர் தம்மிடம் வந்த என்னுடைய ஆளைத் தம்முடைய ஆளாக்கிக்கொண்டு அம்மைபப்ப முதலியாரிடம் அனுப்பினர். நாட்டை அலக்ஷியமாகப் பேசியது அவ்விடத்தில் என்று தெரிகிறபடியால் அக்குற்றம் என்னைச்சாராது உங்களையே சாரும்.'

சபையார் வெட்கித் தலைகுனிந்தார்கள். இச்சோணசல முதலியாரது நண்பர்களும் இவரை வெறுக்க ஆரம்பித்தார்கள். இவர் காலத்தில்தான் இந்நாடு தன்பெருமையையும், மதிப்பையும் நாளுக்குநாள் இழந்துகொண்டே வருகிறது என்று சொல்லி ஊரார் இவரைப் பழிக்கத் தொடங்கினர்கள்.

குமரப்பமுதலியார் கொண்டுவந்த விவகாரம் மறுதினமே பைசல் செய்யப்பட்டது. இவ்வளவிற்கும் இச்சோணசல முதலியாரதுகுணம் எள்ளளவும் மாறவில்லை. பரம்பரை நாட்டாண்மைக்காரராகையால் இவரை அதிகாரத்தினின்றும் நீக்கவும் ஊரார் அஞ்சினர்கள். நாட்டை நல்வழிப்படுத்திக் காக்கும்பொருட்டு அதிகாரியாக நியமிக்கப்பட்ட இவர், தாம் கெட்டதன்றித் தமக்குக் கீழ்ப்பட்ட பிரஜைகளையும் பாழ்படுத்தினரென்றால் வேலியே பயிரை மேய்கிறது என்று சொல்லுவது தவருகுமா? 'அரசனெவ்வழி குடிகளவ்வழி' என்றபடி இவரே இக்கதியானல் மற்றையோரைப்பற்றிக் கூறுவானேன். இவருக்கு விதித்துள்ள நரக தண்டனைகாலம் 548-வருஷம் 11-மாதம் 8-நாள் 15-நாழிகையாகும். இதுவரையில் 52-வருஷங்கள் கழிந்துள்ளன. இவர் அளவிறந்த அக்கிரமங்கள் செய்தவர். இவர் சம்பந்தமான ரிகார்டுகள் இதோ நிற்கும் பத்துவண்டிகளில் கொண்டுவரப் பட்டிருக்கின்றன. தங்கள் பணியைத் தலைமேல் தாங்கி எல்லாவற்றையும் ஆதியோடந்தமாக வாசித்துக் காட்டத் தயாராயிருக்கிறேன்.

வீரவா:—சிவ! சிவ! போதும், போதும். இன்னுமாவேண்டும்? இப்பாவியை என்னெதிரே வைத்திராதே. உடனே அனுப்பிவிடு. முருகப்பெருமான் சந்நிதிக்கு வரநேர்ந்தமையால் இவனுக்கு விதித்துள்ள தண்டனையில் 50-வருஷம் குறைப்பாயாக.

---


# மகா நாட்டு மலர்

நமது முதல் மகாநாட்டின் நிகழ்ச்சிகள், வைபவங்கள், தலைவர்களின் பேருரைகள், தீர்மானங்கள் நிறைந்துள்ளன.

தலைவர்களின் ஆப்டோன் படங்கள்

**40**-க்கு மேல் பொலிந்து விளங்குகின்றன.

வழவழப்பான காகிதம். கண் கவர் அழகு.

செங்குந்தர் ஒவ்வொருவர் கையிலும்இருக்கவேண்டியது அவசியம்.

விலை அணு **8** தபாற் செலவு அணு **3**

மானேஜர், செங்குந்தமித்திரன் ஆபீஸ்,
கீழ்ப்பாக்கம், சென்னை.







## உலக நிலக்கடலை வர்த்தகம்

### சில புள்ளி விவரங்கள்

(1—1—1931 - ல் தமிழ் நாட்டில் கண்டது)

நமது நிலக்கடலைப் பயிர் வெகு விரைவாக வளர்ந்தோங்கி வந்திருக்கிறது. நாம் அதில் ஒரு பாகத்தை நமது தேசத்திலேயே உபயோகிக்கிறோம். ஆனல் அது மிகவும் சொல்பம். இதற்குக் காரணம் வெகு தெளிவானதே. இந்தப் பயிரின் விளைவை அது விளையும் இடங்களிலேயே அதிகமாக உபயோகிப்பதற்குப் போதுமானபடி, நாம் நம்முடைய கைத்தொழில் முயற்சிகளில் முன்னேற்ற மடையவில்லை. ஆகையால், நமது விவசாயிகள், மேல்நாட்டுக் கைத்தொழில் வியாபாரத்தின் வளர்ச்சிக்கும் தாழ்ச்சிக்கு மேற்றவாறு லாபமோ நஷ்டமோ அடைகிறார்கள்.

நிலக்கடலைச் சம்பந்தப்பட்டமட்டும், அதை அதிகமாக ஏற்றுமதி செய்கிற நாடுகள் முறையே, பிரிட்டிஷ் இந்தியா, ஸெனிகல், சீன, நைஜீரியா, காம்பியா, மொசாம்பிக், கீழ் டச்சு இந்தியா, தாங்கனீக்கா, பிரஞ்சு கினியா, ஆங்கிலோ ஈஜிப்ஷியன்ஸுடான், ப்ரஸில், என்னும் நாடுகளேயாம். நமது தேசம் 1,676,881,000 பவுன் நிறை நிலக்கடலை ஏற்றுமதி செய்கின்றது. இதற்கடுத்தபடியாக ஸெனிகல், 900,000,000 பவுன் நிறைபெறுமான நிலக்கடலையும், சீன தேசம் 500,000,000 பவுன் நிறை பெறுமான நிலக்கடலையும் ஏற்றுமதி செய்கின்றன. இதர தேசத்தார் நிலக்கடலை ஏற்றுமதியில் மிகவும் பின்னிட்டு நிற்கிறார்கள். 1913-ம் வருஷத்தில் நமது ஏற்றுமதி—அதாவது, 1909-ம் வருஷத்திலிருந்து 1913-ம் வருஷமட்டும் சராசரியாக 813,149,000 பவுன் நிறை பெறுமானதாயிருந்தது. ஸெனிகல், அதே வருஷங்களில் சராசரியாக 425,937,000 பவுன் நிறைபெறுமான நிலக்கடலையும், சீன தேசம் சராசரியாக 138,472,000 பவுன் நிறைபெறுமான நிலக்கடலையும் ஏற்றுமதி செய்து வந்திருக்கின்றன. ஆகையால், இந்தக் கணக்கின்படிப் பார்க்கும்பொழுது, 1913-ம் வருஷத்திலிருந்து இன்றைக்கு நம்முடைய நிலக்கடலை ஏற்றுமதி இருபங்கு அதிகமாகிவிட்டதென்று காணலாம். நிலக்கடலை பயிராகும் நிலங்களின் விஸ்தீர்ணத்தைப் பார்த்தாலும் நாம் வெகு விரைவாக முன்னேறியிருக்கிறோம் என்று தெரிந்துகொள்ளலாம்.

| வருஷம் | இந்தியா முழுவதிலும் | ஏக்கர்கள் |
|---|---|---|
| 1880 | ,, | 112,000 |
| 1895—1896 | ,, | 700,400 |
| 1913—1914 | ,, | 2,100,000 |
| 1914—1915 | ,, | 2,413,000 |
| 1918 | ,, | 1,312,000 |
| 1922—1923 | ,, | 2,533,000 |
| 1926—1927 | ,, | 3,863,486 |

நிலக்கடலை ஏற்றுமதியின் எண்ணிக்கையிலிருந்து, இந்தியாவானது தன்னேடு போட்டி போடுகிற நாடுகளோடு ஏற்ற விகித ரீதியாக முன்னேறி வந்திருக்கிறது என்று எண்ணலாமெனினும் நிலக்கடலையைப்பற்றிய உண்மையை அந்த வழியாக நிலைநிறுத்த முடியாது. நம்முடைய நிலக்கடலைப் பயிர் அதை இறக்குமதி செய்துகொள்ளும் நாடுகளையும் அவற்றின் தேவையையும் பொறுத்திருக்கிறது. நிலக்கடலையை அதிகமாக இறக்குமதி செய்துகொள்ளும் நாடுகளில் பிரான்சே முக்கியமானது.

பிரான்சுதேசத்து இறக்குமதி விவரம்

| வருஷம் | இறக்குமதி ஏற்றத் தாழ்ச்சி | நிலக்கடலை பவுன் நிறை |
|---|---|---|
| 1913 | | 1,239,659,000 |
| 1918—1927 | கிரமமான ஏற்றங்கள் | 1,503,887,000 |
| | | 1,516,515 000 |
| 1927 | தாழ்ச்சி | 1,454,257,000 |
| 1928 | ஏற்றம் | 1,727,894,000 |

ஆனல், நம்முடைய தேசத்திலோ, 1913-ம் வருஷத்திலிருந்து 1928-ம் வருஷத்திற்குள்ளாக ஏற்றுமதி இரட்டித்துவிட்டது. பிரான்சு தேசம் 1913-ம் வருஷத்தில் இறக்குமதி செய்துகொண்ட நிலக்கடலையின் மூன்றிலொரு பாகமே அதிகமாக

1928-ம் வருஷத்தில் இறக்குமதி செய்துகொண்டிருக்கிறது.

நிலக்கடலை இறக்குமதியில் இதற்கடுத்தபடியானது ஜெர்மனி தேசமாகும். அதன் இறக்குமதி வெகு விரைவில் அதிகரிக்கத் தொடங்கியது. 1913-ம் வருஷம் அதன் இறக்குமதி 174,970,000, பவுன் நிறையாகும். 1927-ம் வருஷம் அதன் இறக்குமதி 930,555,000 பவுனாக அதிகரித்தது. ஆனால் 1928-ம் வருஷத்தில் அத்தேசத்தின் இறக்குமதியின் தொகையைப்—1,883,601,000 பவுன் பார்க்கிறபோது அது நம்ப முடியாதபடி மிகவும் அதிகரித்துக் காணப்படுகிறது. நிலக்கடலை இறக்குமதி செய்துகொள்ளும் இதரநாடுகளாவன: இத்தாலி, ஐக்கிய மகாராஜ்யம், ஹாலந்து, அமெரிக்கா, ஐக்கிய மாகாணங்கள், ஜப்பான் டென்மார்க்கு, கனடா, பிரிட்டிஷ் மலாய் பெல்ஜியம் ஈஜிப்த் என்பனவாம். நிலக்கடலை இறக்குமதியின் மொத்தத் தொகை மிகவும் அதிகரித்திருக்கிறது என்பது உண்மையே. நாம் ஜர்மனி தேசத்தோடுள்ள வர்த்தகத்தில் அதிகமாகப் பங்கு பெற்றிருக்கிறோம் என்பதை மறக்க முடியாதெனினும், தற்காலம் அதிகமாக இறக்குமதி செய்துகொள்ளுகிற தேசங்கள் தங்களுடைய சொந்த நிலங்களிலேயே நிலக்கடலைப் பயிரும் செய்து கொள்ளுகின்றன என்பதை நாம் மறந்து விடக்கூடாது. உதாரணமாக, அமெரிக்கா ஐக்கிய நாடுகளைப் பார்ப்போமாயின், அவை 1929 ம் வருஷம் 930,700,000பவுன் நிறைபொருமான நிலக்கடலையைத் தம் சொந்த நிலங்களிலிருந்தே அறுவடை செய்து கொண்டன. உண்மையைக் கூறுமிடத்து, மேற்கு ஆஸ்திரேலியாவின் விவசாய இலாகாவின் அறிக்கைப் பத்திரிகையில் கண்ட விஷயங்களை நாம் ஒப்புக்கொள்ளக் கூடுமாயின், அமெரிக்கா விவசாயி சீன தேசத்து நிலக்கடலை விவசாயியோடு போட்டிபோடக்கூடிய நிலைமைக்கு வந்து விட்டான். அமெரிக்கா அரசாங்கத்தார் நிலக்கடலை விவசாயிக்கு, தோலோடுகூடிய ஒரு டன் நிறையுள்ள நிலக்கடலைக்கு 1 ப. 14 ஷி. 6 பெ. வீதமும், தோலுநீக்கிய ஒரு டன் பருப்புக்கு 3 ப. 9 ஷி. வீதமும் பொருளுதவி செய்து வருகிறது. ஆனால், ஆஸ்திரேலியாவிலோ, தோலோடு கூடிய ஒரு டன் நிலக் கடலைக்கு 37 ப. 6 ஷி. 8 பெ. வீதமும், தோல் நீக்கிய ஒரு டன் பருப்புக்கு 56 ப. வீதமுமாக விவசாயிக்கு உதவிசெய்து வருகிறது. இதை ஆதாரமாகக் கொண்டு, உஷ்ண தேச விவசாய விஷயமாக யோசனை கூறுகிற மேற்கு ஆஸ்திரேலியா விவசாய அதிகாரி, நிலக்கடலைப் பயிர் அபிவிருத்திக்காக முயற்சி செய்ய இதுவே தக்க சமயமென்று அறிக்கையிட்டிருக்கிறார். ஆஸ்திரேலியா தேசத்தில், ஒரு டன் நிறை அளவான முதல்தர நிலக்கடலைக்கு 84 ப. அதாவது மணங்குக்கு பதின்மூன்று ரூபாய் வீதம் போன செப்டம்பர் மாதம் விலை இருந்தது. ஆனால் இந்தியாவிலோ விவசாயிகள், அந்த நாட்டில் நிலக்கடலை விற்பனையாகிய அதே மாதத்தில், முதல் தரமான ஒரு மணங்கு நிலக்கடலையை 10 அணாவுக்கும் 15 அணாவுக்கும் அதிகமான விலைக்கு விற்க முடியவில்லை.

நம்முடைய தேசத்தோடு நிலக்கடலை விஷயமாக இதர தேசத்தார் போடுகிற போட்டி விஷயமாக இன்னொரு முக்கிய விஷயம் கவனிக்கிறதற்குண்டு. அதாவது, நிலக்கடலை எண்ணெயின் பரஸ்பர வர்த்தகம் தேசீய வர்த்தகமேயாகும். நாமும் நிலக்கடலை எண்ணெய் எடுக்கிறோம். எனினும் அது முற்றிலும் கசட்டு எண்ணெயாகவே இருக்கின்றது. எனினும் அதன் பெரும் பாகமும் நாம் சாப்பிடுகிற நெய்யில் கலப்பதற்காவது, இலங்கை, மொரிஷியஸ் முதலான இடங்களில் இருக்கிற நம்முடைய சகோதரர்களுக்கு நல்லெண்ணெய் என்ற நாமதேயத்திலே அனுப்புகிறதற்காவது உபயோகப்படுகிறது. பரஸ்பர தேசீய வர்த்தகத்தில் நம்முடைய நிலக்கடலை எண்ணெய் வர்த்தகம் ஒரு பொருட்டாகக் கருதப்படுகிறதில்லை. நிலக்கடலை எண்ணெயை முக்கியமாக ஏற்றுமதி செய்கிற நாடுகளாவன, சீனா, பிரான்சு, ஜர்மனி, கீழ் டச்சு இந்தியா முதலியனவாகும். ஜெர்மனியும் பிரான்சும் நிலக்கடலையை இறக்குமதி செய்து கொள்ளுவதினாலே, அவற்றை ஒழித்துத் தம்மிடத்திலே உள்ள நிலக்கடலையைத் தாமே ஆட்டி எண்ணெய் எடுத்து, அந்த எண்ணெயை இதர தேசங்களுக்கு ஏற்றுமதி செய்கிற சீனா, கீழ் டச்சு, இந்தியா என்னும் நாடுகளின்வர்த்தகம் நம்முடைய நிலக்கடலை வர்த்தகத்தையும் பாதிப்பதாயிருக்கிறது. சீனா தேசம் 1928-ம் வருஷம் 78,889,000 பவன் நிறையளவான எண்ணெயும் அதே வருஷத்தில் கீழ் டச்சு இந்தியா 9,974,000 பவுன் நிறையளவான எண்ணெயும் ஏற்றுமதி செய்தது ; ஆனால் பாருங்கள், பிரான்சு தேசமானது இறக்குமதி செய்துவரும் நிலக்கடலையிலிருந்து வருஷந்தோறும், 40,000,000 காலன் எண்ணெய் எடுக்கின்றனது.

ஏற்றுமதி இறக்குமதியின் தொகைகள் நமக்கு எதைக்காட்டினாலும் காட்டாவிட்டாலும், அவை ஒழுங்கு செய்யப்படாத இந்திய விவசாயிகளின் நிலைமையினால் ஏற்பட்டிருக்கிற அவர்களுடைய பல ஹீனத்தை நமக்குத் தெளிவாகக் காட்டுகிறது. நிலக்கடலை வாங்குகிற தேசத்தாரும், மிகவும் சீராகத் தமது காரியங்களை ஒழுங்கு செய்துகொண்ட நிலக்கடலைப் பயிர்செய்யும் தேசத்தாரும் தமது நிலக்கடலையை 3 இரகங்களாக வகுத்துக்கொண்டிருக்கிறார்கள். அவை, (1) தின்பண்டங்கள் செய்வதற்கானது ; (2) வறுத்தற்குகந்தது ; (8) ஆட்டுவதற்குகந்தது என்பனவாம். நிலக்கடலையில் சில சிறந்த உபயோகங்களாவன. பச்சடி செய்தல், மருந்திற்கு உபயோகித்தல், வெகு வேகமாக ஓடுகிற யந்திரங்களுக்குக் கொழுப்புண்டு பண்ணுதல், எரிவதற்கு உபயோகித்தல், நெய் செய்தல், என்பனவாம். மட்டமான நிலக்கடலைப் பருப்புக்களைச் சவுக்காரம் செய்வதற்கும், இதரக் கைத்தொழில், காரியங்களுக்கும் உபயோகிக்கிறார்கள். பிரான்சு



தேசத்தார் நம்மிடமிருந்து வாங்குகிற நிலக்கடலையைச் சவுக்காரம் செய்வதற்கு மட்டுமே உபயோகிக்கிறார்கள். நம்முடைய நிலக்கடலை விவசாயிகளுக்கு மத்தியஸ்தர்கள், தரகர்களுடைய உதவியில்லாமல் தாமாகவே நமது நிலக்கடலையைத் தாம் வகுத்து விற்பனைச் செய்யத் தெரிய வில்லை. நிலக்கடலையின் விலை மதிப்பு வியாபார விஷயங்கள் அனைத்தும் கொள்ளை யடிக்கும் நோக்கமுடைய அன்னிய நாட்டு வர்த்தகக் குழுவினரிடம் பரம ரகசியங்களாக உலவிவருவதினால், நமது விவசாயிகளுக்கு நிலக்கடலையின் விலைமதிப்பு விஷயங்கள் ஒன்றும் தெரியவில்லை.

நாம் நம்முடைய நிலக்கடலையை ஆட்டி எண்ணையாகச் செய்வதில்லை என்ற குறை கூறுவதிற் பயனில்லை. பிரான்சு தேசத்தார் மட்டும் எப்படி நம்முடைய நிலக்கடலையை ஆட்டி வருஷந்தோறும் கோடிக்கணக்கான மரக்கால்களாக எண்ணெய் எடுக்கிறார்கள் என்று கேட்பதும் அதிகப்பிரசங்கமாகும். நிலக்கடலையைப் பயிர் செய்கிற நாம் 'மற்றவர்களைப்போல அதை உபயோகப்படுத்திக் கொள்ளக் கூடாமலிருக்கிறோம். நாம் பயிர் செய்கிற நிலக்கடலையை நாமே உபயோகப் படும்படியான பொருள்களாக மாற்றத் திறமை யற்றிருக்கும்பொழுது நிலக்கடலைப் பாதுகாப்பிற்காகக் கூச்சலிடுவது புத்தியீனமாகும்.

சர்க்கார், செல்வ ஆட்சிக்கடாத விதமாக நிலக்கடலை ஏற்றுமதியினால் நமது தேசத்திற்கு மட்டுமல்ல, இவ்வுலகில் உள்ள தேசங்களுக்கெல்லா மேற்படுகிற நஷ்டத்தையும் பொருள் வீணாக அழிந்து போவதையும் தடுத்து நிறுத்தி, விவசாயிகளுக்குப் போதுமான கல்வி யளித்து அவர்களை ஒன்றுகத் திரட்டி ஒழுங்கு படுத்தி, நிலக்கடலையை ஏற்றவாறு உபயோகிப்பதற்கான முறை ஏற்பாடுகள் செய்ய இனிச் சற்றும் தாமதிக்கலாகாது. இவ்வாறெல்லாம் செய்யா விட்டால், இந்த உலகில் அதிகமாகநிலக்கடலை ஏற்றுமதி செய்கின்ற நம்முடையவிவசாயிகள் மிகவும் ஏழையாகவும், திறமை சற்றுமே இல்லாதவர்களாகவும், [illegible] யற்றவர்களாகவும் இருப்பார்கள் [illegible] சியமாமோ?

(கிராம பஞ்சாயத்து)

---

## நம்மவர் கைத்தொழில் வியாபாரங்களின் தற்கால நிலையும் அவைகளை வளர்க்கும் முறைகளும்.

மார்கழி மாதம் விளம்பரப் படுத்திய போட்டிப் பரீக்ஷையில் முதல் பரிசு பெற்ற வியாசம்.

நம்மவர் கைத்தொழில் வியாபாரங்களின் தற்கால நிலையானது நலிவுற்று முன்னணியி வில்லாமலிருக்கின்றது. முன்னணியிலில்லாமைக்குக் காரணங்கள் பலவுளதை ஈண்டு விளக்குவாம்:—

### 1. பொருளாதார நிலைக்குறைவு.

நம்மவர்களின் கைத்தொழில் வியாபாரங்களினது தற்கால நிலைக் குறைவிற்குக் காரணங்களாயதில் முக்கியமானது நம்மவர்களிடையே பொருளாதார நிலைக்குறைவே. பொருளாதார நிலை நம்மவர்களிடையே குறைவான தென்பது நமக்கு நன்கு புலனாகும் ஏனெனில் நம்மவர்களது இரண்டாவது மகாநாடும் சென்றவருஷமே கூடாத தன் காரணமாகியது பொருளாதார நிலைக்குறைவு என்பதை நன்கு குறிக்கின்றது. 'பணம் பத்துஞ் செய்யும்' என்றது போன்று பொருளிருந்தால் யாவையும் கைகூடு மென்பது வெள்ளிடைமலை.

'வடுவி வாவையத்து மன்னிய மூன்றின்
நடுவணது எய்த இருதலையும் எய்தும்'

என்றபடி முப்பொருள்களில் ஒன்றாகிய பொருட் செல்வ மிருந்தால் ஏனைய பொருள்களை அடையலாம். ஆதலிற் நம்மவர்களிடத்தும் பொருளாதார நிலைக்குறை வில்லாமலிருக்குமாயின் நம் கைத்தொழில் வியாபாரங்களும் முன்னணியிலிருக்கும் என்பது திண்ணம்.

"பணந்தானே யறிவாகும் பணந்தானே
வித்தையுமாம் பரிந்து தேடும்
பணந்தானே குணமாகும் பணமில்லாதவர்
பிணமாம் பான்மை சேர்வார்
பணந்தானே பேசுவிக்கும் தண்டலை
ணெறியாரே பாரின் மீது
பணந்தானே பந்தியுறுங் குலந்தானே
குப்பையிலே படுக்குந்தானே."

மேற் கூறிய பிரகாரம் பணம் எல்லாப் பொருள்களையும் தரவல்ல தாதலின், நமது கைத்தொழில் வியாபாரத்திற்கு வேண்டியது அவசியம் என்றும், பொருளாதார நிலைக்குறைவினால் நம்கைத்தொழில் வியாபாரங்களின் தற்கால நிலையானது நலிவுற்றுப் பிற்போக்கிலிருக்கின்றது என்பது நன்கு விளங்குகிறது.

### 2. கல்வி இன்மை.

நம் கைத்தொழில் வியாபாரங்களின் வீழ்ச்சிக்குக் காரணங்களா யிருப்பவைகளுள் நம்மவரிடத்துக்கல்வி இன்மையும் ஒன்றாகும். நம்மவரிடையே கல்வி மிகக்குறை வென்பது நன்கு புலனாகும். எங்ஙன மெனில் நம்மவர்களின் ஜனத்தொகை இரண்டு லக்ஷத்து ஐயாயிரத்துத் தொளாயிரத்து முப்பத்தேழுபேர். ஆண்களிடையே தமிழில் படித்தவர்கள் 100-க்கு 26-பேர்களும் ஆங்கிலம் படித்த

வர்கள், 100-க்கு 8-பேர் களென்றும் கணக்கிடப்பட்டிருக்கின்றது. அதாவது இரண்டு லக்ஷம் ஜனத்தொகைக்கு மேலதாயுள்ள நம்மவரிடையே ஆங்கிலம் படித்தவர்கள் 100-க்குக் கிட்டத்தட்ட சரியாக ஒருவராயினுமில்லை. இதிலேயே நம்மவர்களது கல்வி நன்கு புலப்படுகின்றது. நம் நாட்டில் கல்வி கற்பதெல்லாம் உத்தியோகத்தை நாடியே யல்லாமல் வேறல்ல. இந்நோக்கத்துடன் கல்விகற்பவர்கள் எவ்விதம்செல்வந்தராதல் கூடும்? ஒரு போதும் முடியாது. உத்தியோக முறைக்குத்தான் கல்விகற்க வேண்டிய தவசியம் என்று நம்மவர்களில் சிலர் கருதுவது போலும். அஃதினை எண்ணத்திற் புகுத்தி தங்கள் மக்களுக்குக் கல்வி கற்பிக்க வில்லை போலும். ஏனெனில் தங்கள் மக்களுக்கு உத்தியோகம் வேண்டற்படு வனவல்லவே எனக்கருதித் தங்கள் மக்களுக்கு கைத்தொழிலைப் பழக்குகிறார்கள். ஆதலிற் நம்மவரிடையே ஆரம்பக்கல்வியே கிடையாதெனில் உயர்தரக் கல்வியினைப்பற்றிக் கூறவும் வேண்டுவதில்லை. உத்தியோக முறைக்கல்லாமல் தொழில் செய்வதற்கும் கல்வி வேண்டியதே. எத்தொழிலாயினும் சரி, அத்தொழிலுக்குக் கல்வி வேண்டியது அத்தியாவசியமாகும். நம்மவர்களிடத்தில் கல்வி சரிவர அமைந்திராமையால், நம் கைத்தொழில்களை விருத்தி செய்வதற்கு ஏதுவான வழிகளை நாம் அறியாமலிருக்கின்றோம். நம்மவரிடையே உயர்தரக்கல்வியும் தொழிற் கல்வியு மில்லாமலிருப்பதினால், நம் கைத்தொழில் வியாபாரங்களின் தற்கால நிலையானது பிற்போக்கிலிருக்கிறது.

### 3. இயந்திரத்தறிகள்

நம்மவர் கைத்தொழில் வியாபாரங்களின் குறைவிற்கு முக்கிய காரணங்களில் ஒன்றாக இருப்பது இயந்திரத்தறிகள். இயந்திரத்தறிகள் கண்டு பிடிக்கப்படவே கைத்தறி நெசவு க்ஷீணிக்கலாயிற்று. இயந்திரத்தினோடு போட்டிபோட நம்மால் முடியாதகாரியம். நம்மவர்களாற் நெய்யப்படும் துணிகளை ஜனங்கள் வாங்கி அதிமாக உபயோகிக்காமல் இயந்திரத்தறிகளாற்நெய்யப்படும் புது மாதிரியான துணிகளை வாங்கி உபயோகிக்கிறார்கள். மேலும் நம்மவர்கள் நெய்யும் துணிகளைக் காட்டிலும் புதிய மாதிரியில் ஆலையிலிருந்து உண்டாக்கப் பெறும் துணிகளை ஜனங்கள் குறைந்த விலைக்கு வாங்கி உபயோகப்படுத்துகிறார்கள். அதுவுமல்லாமல் நம்மவர்கள் தறியில் தயார் செய்வதைக்காட்டிலும் இயந்திரத்தறியில் தயார் செய்யப்பட்டு மலிவான விலைக்கு விற்கப்படுகிறதாதலால் நம்மவர்களது கைத்தொழில் பின்னணியில் நிற்கிறது.

### 4. அந்நியநாட்டுத்துணிகள்

நம்மவர்களினது கைத்தொழில் வியாபாரங்கள் தற்போது க்ஷீணித்து வருவதற்கு முக்கியகாரணகர்த்தாவாக இருப்பது அயல் நாட்டுத் துணிகளே. அயல் நாட்டுத்துணிகள் நம் நாட்டுக்கு வருவதினால் அதையே; நம் ஜனங்கள் நாகரீகம், என்று சொல்லிக்கொண்டு விலை குறைவோ, அதிகமோ கொடுத்து வாங்கி அணிகிறார்கள். அயல் நாட்டுத்துணிகளை பணக்காரர்களும் நடுத்தரமனிதர்களும் வாங்கி உபயோகிக்கிறார்கள். நம்மவர்களால் நெய்யப்படும் துணிகளை ஒரு சிலரே உபயோகிக்கிறார்கள். அந்நிய நாட்டுத்துணிகள் நம் நாட்டில் அதிகமாக விற்பனையாவதால், நம்மவர்கள் துணிகள் அதிகமாக விற்கப்படாமல் நம்மவர் கைத்தொழில் வியாபாரங்களின் நிலைதற்போது க்ஷீணித்து வருகிறது.

தற்போதிருக்கும் தேசியக்கிளர்ச்சியினால்பொதுவாக எங்கும் சுத்த கதர் துணிகளை ஜனங்கள் வாங்கி அணிகிறார்கள். அதனால் நம்மவர்களால் நெய்யப்படும் பட்டு, கைலி, 40 60-நெம்பர் துணிகளும் செலவாகிறதில்லை. அதனால் பட்டு, கைலி முதலிய துணிகளின் வியாபாரம் மிக்கக் குறைவாக இருக்கிறது. தற்போது நம்மவர்களது வியாபாரக்குறைவிற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

தற்போது நம்மவர்களது கைத்தொழில் வியாபாரங்களின் நிலை முன்னணியிலிராமையால் அதை முன்னணிக்குக் கொண்டுவருவதற்குச் செய்ய வேண்டிய காரியங்களை ஈண்டுக் கூறுவாம்:—

### 1. கூட்டுறவு இயக்கம்

நம்மவர்களது கைத்தொழில் வியாபாரங்களை நன்னிலைக்குக் கொண்டுவர வேண்டுமானால் நம்மவர் வதியும் ஒவ்வொரு கிராமங்களிலும் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படல் வேண்டும். கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படவேண்டிய அவசியம் என்? எப்படி நம்மவர்கள் தறியிலிருந்து ஒரு மடியோ அல்லது இரண்டோ அறுத்தானவுடன் அவைகளை விற்பதற்கு அருகிலுள்ள கடைகளுக்குக் கொண்டு போகிறார்கள். கடைகள் பக்கத்திலில்லாவிட்டால் நடந்து சென்றாவது அல்லது ரயில் பிரயாணத்தைக் கொண்டாவது கிராமங்களிலிருந்து நகர்ப்புறத்தேயுள்ள கடைகளுக்கு வருகிறார்கள். அப்படி ஒரு மடியோடு வந்தவன் தானகவே கடைகளுக்குப் போய் மடிகள் தங்களுக்கு வேண்டுமா என்று கேட்பான். கடைக்காரர்களாகக் கேட்பதில்லையாதலாலும் இவனே நேரில் கொண்டு போவதாதலாலும் கடைக்காரர்கள் இவன் கொண்டுபோன மடியை குறைந்த விலைக்குக் கேட்கிறார்கள். கடைசியாக அதிக விலை பெறமுடியாமற் கடைக்காரர் கேட்ட விலைக்கே கொடுத்து விட்டுத் திரும்புகிறான். ஆனால் அப்போதுக் கிடைக்கும் பணத்தைக் கொண்டு கொஞ்சம் நூல் வாங்குகிறான். அந்நூலையும் கடைக்காரர்கள் சொல்லிய விலைக்கே வாங்க வேண்டி இருக்கிறது. இரயில் பிரயாணத்தில் கொஞ்சம் பணம் செலவாகிறது. அன்றைய தின வேலையும் கெட்டுவிடுகின்றது. குழந்தைகளுக்குத் தின்பண்டங்கள் வாங்கிக்கொண்டு போவதில் பணம் கொஞ்சம் செலவாகி விடுகிறது. 'பல துளி பெரு வெள்ளம்' என்றபடி அவன் ஒவ்வொரு வகையிலும் கொஞ்சம் கொஞ்சமாகச் செலவிடுகிறது அவனடைந்த பணத்தில் பாதிக்குமேல்



செலவாகி விடுகிறது. மீதி இருக்கும் பணத்தைக் கொண்டு தான் குடும்பச் சவரக்ஷணை செய்ய வேண்டும். குடும்ப சவரக்ஷணைக்கே பணம் சரியாக இல்லாதலாற் குடும்ப சவரக்ஷணைக்கும் சில சமயங்களில் பணம் வட்டிக்கு வாங்குகின்றார்கள். பின்னர் எங்கே நூதன நூதனமாக தினுசுகளை நெய்து அதனால் வரும் அதிக ஊதியத்தை அடைந்து தங்களது கைத்தொழில்களை விருத்தி செய்யப் போகின்றார்கள். ஒருநாளும் முடியாது. ஆனால் ஒருவன் ஒரு மடியோ அல்லது இரண்டு மடிகளோ தறியிலிருந்து அறுத்தானவுடன் கிராமத்தில் இருந்து நகர்ப்புறத்தேயுள்ள கடைகளுக்குக் கொண்டு வருவதைக் காட்டிலும் அவர்களூரிலேயே ஒரு கடை இருந்தால் எவ்வளவு சௌகரியமா யிருக்கும் என்பதை யோசித்துப் பார்க்கலாம். அந்த மாதிரி ஒரு கடை அவர்களூரிலேயே இருந்தால் இரயில் பிரயாணச் சிலவும், சில்லரைச் சிலவும், தேக சிரமுமின்றி அன்றையதின வேலையும் கெடாமற் போய் விடும். அந்தக் கடை எல்லோருக்கும் பொதுவாக இருந்தால் அதனால் எல்லோரும் சௌகரியம் அடைவார்கள். இதே மாதிரி ஒவ்வொரு கிராமங்களிலும் நம்மவர் வதியும் இடங்களில் கடைகளிருந்தால் நம்மவர்களுக்கு மிகவும் சௌகரியம் ஏற்படும். ஒரு ஊரில் ஒரு கடை இருந்தால் அதற்குக் 'கூட்டுறவு' என்றும் அது நடந்து வருவதற்கு 'இயக்கம்' என்றும் பொதுவாக அதற்குக் 'கூட்டுறவு இயக்கம்' என்றும் (கூடு + உறவு + இயக்கம்) கொள்ளுவோம். (கூடு = சேர்வது, உறவு = பந்துக்கள், இயக்கம் = கூட்டம்; அதாவது பந்துக்கள் ஒன்று சேர்வது என்பதும் உள்கருத்து.) பொதுவாக அஃதினை கூட்டுறவுச் சங்கம் என்றும் கூறுவாம்.

கூட்டுறவு இயக்கம் அல்லது கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தும் விதம்:—முதலாவதாக கூட்டுறவுச் சங்கங்களின் பொருளாதார நிலைக்கு அரசாங்கத்தாரை உதவும்படி நம்மவர்கள் மன்றாடிக் கேட்டுக்கொள்ள வேண்டும். அரசாங்கத்தாரின் அனுமதியின்பேரில் சங்கங்களை நிறுவிக்க வேண்டும். அதில் நம்மவர்கள் சங்கத்தின் அங்கத்தினர்களாகச் சேர்ந்து அதில் பங்குகள் (Shares) எடுத்துக் கொள்ள வேண்டும். அப்பங்குந்தொகைகள் ஒவ்வொன்றும் இரண்டு ரூபாய்க்குக் குறையாமலும் ஒவ்வொரு ஏழைக் குடும்பமும் ஒவ்வொரு பங்கு குறைந்தபக்ஷம் எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த விதம் செய்தால் சங்கத்திற்கு கொஞ்ச மூலதனம் சேரும். மீதிக்கு அரசாங்கத்தாரிடமிருந்து பெறவேண்டும்.

சங்கத்தின் அங்கத்தினர்கள்:—இச்சங்கம் நடைபெறுவதற்கு தலைவராக ஒருவரையும், உபதலைவராக ஒருவரையும், பொக்கிஷதார் ஒருவரும், செக்கிரடெரியார் ஒருவருமாக நியமித்துக் கொள்ள வேண்டும். மற்றவர்கள் சங்கத்தின் அங்கத்தினர்களாகவும் அமையவேண்டும். சங்கத்தின் ஏனைய வேலைகளுக்கு நம் ஆட்களையே நியமித்துக்கொள்ளலாம்.

சங்கத்திலிருந்து நம்மவர்களுக்கு உதவி:—எப்பொருளும் மொத்தமாகவும் பலர் ஒன்றுசேர்ந்தும் வாங்கினால் குறைந்த விலைக்கு வாங்கலாம். ஆதலாற் நம் சங்கத்திலிருந்து நம்மவர்களுக்கு வேண்டிய நூல், விழுது, அச்சு, எரி குழல் அல்லது நாடா முதலிய தறிகளுக்கு வேண்டிய சாமான்களும் இதர சாமான்களையும் மொத்தமாக வாங்கிக் கொடுக்கலாம். நம்மவர்கள் நெய்த துணிகளைச் சங்கத்தில் வாங்கி வைத்துக்கொண்டு அதற்குப் பதிலாக நூலும் கூலியும் கொடுக்கலாம். மொத்தமாகத் துணிகளைச் சேர்த்து, வியாபாரிகளுக்கு விற்கலாம். இப்போது அத்துணிகளுக்கு கிராக்கியும் ஏற்பட்டு நல்ல விலையும் ஏற்பட்டுவிடுகிறது. ஏனெனில் அம்மாதிரி துணிகள் அங்குத்தான் அகப்படுகிறதல்லவோ. நாம் சொன்ன சரியான விலைக்கே விற்க ஏதுவாகும். ஆதலாற் நாம் தகுந்த ஊதியத்தை அடையலாம். அதுவுமல்லாமற் நாம் நெய்த துணியை கடைகளுக்குக் கொண்டுபோகவும் வேண்டியதில்லை. மறுபடியும் நெய்வதற்கு நூல்வேண்டுமே யென்ற கவலையும் ஒழிந்து விடுகிறது.

இவைகளோடில்லாமற் இச்சங்கத்தின் மூலமாக எவ்வளவோ நன்மைகள் ஏற்படுகின்றன. தற்போது நம்மவர்களிருக்கும் நிலையில் அநேகர் தறி முதல் இல்லாமலே இருக்கிறார்கள். அதற்காக சங்கத்திலிருந்து பணம் உதவலாம். பிறகு அந்தப் பணத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக நாலைந்து வாய்தாக்களிலும் கட்டிவிடலாம். நம்மவர்கள் வேறு இடத்தில்போய் அதிக வட்டிக்கு வாங்கவும் வேண்டியதில்லை. இதல்லாமற் நம் கல்வி கற்ற வாலிபர்களும் உத்தியோகத்தையோ, கம்பெனியையோ நாடவேண்டியதில்லை. ஒவ்வொரு ஊர்களிலும் ஒவ்வொரு சங்கம் ஏற்பட்டால் அவைகளுக்கு எத்தனை ஆட்கள் வேண்டும். அதற்கு நம் வாலிபர்களை வைத்துக்கொண்டால் அவர்களுக்கு வேலை அகப்பட்டுவிடுகிறது. வேலையில்லாத் திண்டாட்டமும் நீங்கிவிடும். சங்கத்திலிருந்து லாபத்தை வருஷா வருஷமும் பங்குத் தொகைக்கேற்ப பிரித்துக் கொடுக்கவும், இந்தமாதிரியாக நம்மவர்களுக்கு அநேக நன்மைகள் ஏற்படுகின்றன. கூட்டுறவுச் சங்கத்தின் பயனாக நம்மவர்கள் பொருளாதார நிலையை அடைந்து கைத்தொழில்களை விருத்திசெய்வதற்கு ஏதுவான வழிகள் உண்டு.

குறிப்பு:—தற்போது எனது ஊரில் சுமார் நூற்றைம்பது தறிகளுக்கு மேற்கொண்டு நம்மவர்களால் நடைபெற்று வருகின்றது. நம்மவர்களுக்கு இங்கு பல முதலாளிகள் வைத்திருக்கும் சுமார் இருபது கடைகளிலிருந்து தறிகளுக்கு நூல் கிடைக்கின்றது. நம்மவர்கள் அவர்களிடமிருந்து தங்களுக்கு இஷ்டமான ரகங்களும் அகலத்திற்கும் (உதாரணமாக, $18\frac{1}{2}$ நெம்பர் நூலில்

பேட்டு ரகத்தில் 54 அங்குல அகலம் என்றது போன்ற) நூல் எடுத்துக் கொண்டு போய் நெய்து வரலாம். கடைக்காரர்கள் இரண்டு விதமான நூற்கள் கொடுத்து வருகின்றார்கள். அதாவது $10\frac{1}{2}$ & $13\frac{1}{2}$ நெம்பருள்ள நூற்களேயாகும். அதில் நம்மவர்கள் எந்த நூலை எடுத்து நெய்ய விரும்புகின்றார்களோ அந்நூலை அவர்கள் கொடுக்கிறார்கள். அதற்கு அவர்கள் தரத்திற்கேற்ப சரியான கூலியும் நூலும் கொடுத்து விடுகிறார்கள். இதனால் நம்மவர்களுக்கு ஒரு சிரமமுமின்றிப் போய்விடும். எங்ஙனமெனில் ஒரு மடியையோ அல்லது இரண்டையோ அறுத்துக்கொண்டு போய் விற்று நூல் வாங்க வேண்டுமென்ற கவலை அற்றுப்போய் விட்டது. எல்லாக் கடைகளிலும் ஒரே மாதிரியான கூலியா யிருப்பதனால் கூலிச் சிரமமும் இல்லை. நம்மவர்கள் நெய்த துணியைக் கடையில் கொண்டு போய் கொடுத்ததும் அதற்கு அவர்கள் கொடுக்க வேண்டிய நூலையும் கூலியையும் கொடுத்து விடுகிறார்கள். அன்றைய தின வேலையும் கெட்டுப் போய் விடுகிறதில்லை. இந்த மாதிரியாகக் கடந்த பத்தாண்டுகளாக நடைபெற்று வருகிறது. கடந்த பத்தாண்டுகளுக்கு முன்னிருந்ததை விட தற்சமயம் கைத்தொழில் அதிகமாகவே நடைபெற்று வருகின்றது. மேலும் இக்கடைக்காரர்கள் நூல் கொடுத்து உதவுவதுமன்றி தறிகளுக்கு வேண்டிய சாமான்கள் வாங்குவதற்கு முடியாத ஒரு சிலருக்கு அவைகள் வாங்குவதற்குப் பணம் கொடுக்கிறார்கள். இன்னும் நம்மவருக்குப் பணம் வேண்டிய போது அவசியமான காலங்களில் சிறிது பொருளுதவியும் செய்கிறார்கள். இவ்விஷயங்களில் நம்மவர்களுக்குப் பொருளாதார நிலை கூடுமான வரையில் சரியாக இருக்கிறது. இக்கடைக்காரர்கள் எனது ஊரில் மட்டுமே யன்றிப் பக்கலில் உள்ள பல கிராமங்களில் வதியும் நம்மவர்களுக்குச் சுமார் 2000 தறிகளுக்கு நூல் கொடுத்து வருகிறார்கள். இக்கடைகளிலிருந்து, இங்கு வதியும் நம் மக்களுக்கு உதவி செய்யாமற் போயின. தற்போது நம் மக்களது கைத்தொழில் வியாபாரங்கள் க்ஷீணித்து அதனால் துயர்வுறும் இடங்களில் இதுவும் ஒன்றதாய் இருக்கும். அஃதில்லாமற் நம்மவர்கள் ஈண்டு சௌகரியத்தை அடைந்தும் கைத்தொழிலையும் விருத்தி செய்கிறார்கள்.

மேலும் இக்கடைக்காரர்கள் (கூட்டுறவுச் சங்கம்போல்) கதர் ஜவுளி வர்த்தகச் சங்கம் என்று ஒன்றை ஏற்படுத்தி மாதமொரு முறையோ அல்லது இரண்டு முறையோ மீட்டிங்குகள் ஏற்படுத்தி நம்மவர்கள் தறிகளின் விஷயமாய் நூல், கூலிமுதலியவைகளைப்பற்றி தீர்மானம் செய்து அதன்படி செய்து வருகிறார்களாதலால் ஒவ்வொரு கடையிலும் ஒவ்வொரு விதமான நூலும் (அளவில்) கூலியும் (பணத்தில்) இல்லாமற் எல்லாக் கடைகளிலும் ஒரே விதமாக நடந்து வருவதால் நம்மவர்களுக்கு மிகவும் சௌகரியமாயிருக்கிறது. நம்மவர்களுக்கு இச்சங்கத்தின் பயனாக அநேக அநுகூலங்கள் ஏற்படுவது மிகவும் போற்றற்பாலது.

இதுகாறும் கூறிவந்தபடி நம்மவர்கள் வதியும் மற்ற இடங்களிலும் நடந்துவந்தால் மிகவும் சௌகரியமாய் இருக்கும் என்பது நங்கருத்து. அப்படி நடந்து வருமாயின் கூட்டுறவுச் சங்கங்கள் அவசியமில்லை. நம்மலர்கள் பொருளாதாரநிலைக் குறைவிற்கு கூட்டுறவுச் சங்கங்களோ அல்லது நாம் முன் கூறிய பிரகாரமோ இருக்குமாயின் நம்மவர்களது துயரும் நீங்கி, பொருளாதார நிலையை அடைந்து கைத்தொழிலையும் முன்னணிக்குக் கொண்டுவரப்படுமென்பது நமது கருத்து. கூட்டுறவுச் சங்கங்கள் பற்பல விடங்களில் நம்மவரிடையே ஏற்படாமைக்குக் காரணங்கள் நமக்குள் ஒற்றுமை, நம்பிக்கை, கல்வி இவைகளின்மையே.

## 2. தொழிற்கல்வி

நம்மவர்களது கைத்தொழில் வியாபாரங்களை முன்னணிக்குக் கொண்டுவர வேண்டுமாயின் நம்மவர்களுக்கு உயர்தரக் கல்வியேயன்றித் தொழிற் கல்வியும் வேண்டியது அவசியம். நாம் முன் கூறப்பட்டபடி நம்மவர்களுக்குப் போதிய கல்வியே கிடையாதெனினும் நம்மவரிடையே பலருக்கு ஆரம்ப கல்வியே கிடையாது. ஒருவனிடத்தில் கல்வி இருந்தால் அவன் தாழ்குலத்தோனாயினும் உயரிய பதவியில் வைக்கப்படுவான் என்பது பொருளமைய,

> "கடைநிலத்தோ ராயினுங் கற்றுணர்ந்தோரைத்
> தலைநிலத்து வைக்கப்படும்."

என்று கூறப்பட்டிருக்கிறது. ஆகையால் மனிதராம் எவருக்கும் கல்வி அவசியம் என்றும், மனிதர்களுக்கு தங்கள் இடுக்கண்களிலிருந்து களையவும், நீங்காத துணையாகவு மிருப்பது கல்வியேயாம் என்பது விளங்க,

> "அறம் பொருளின்பமும் வீடும்பயக்கும்
> புறங்கடை நல்லிசையும் நாட்டும்—உறுங்கவலொன்
> றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியினூங்கில்லைச்
> சிற்றுயிர்க் குற்ற துணை."

என்றபடி கல்வி மிக்க அவசியம் மாந்தர்க்கு, என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோற் றெற்றென விளங்கா நிற்கும்.

இன்னும் கல்வி அநேகம் பொருள்களை கொடுக்கிறது என்பது அமைய,

> கைப்பொருள் கொடுத்துங் கற்றல்
> கற்றபின் கண்ணுமாகும்
> மெய்ப் பொருள் விளக்கு நெஞ்சின்
> மெலிவிற் கோர் துணையுமாகும்
> பொய்ப் பொருள் பிறகள் பொன்னும்
> புகழுமாம் துணைவியாக்கும்
> இப்பொரு ளெய்தி நின்றீரங்குவ
> தென்னை யென்றான்."

என்றபடி ஞானக்கண்ணும், மெய்ப்பொருளும், துணையும், புகழும் துணைவியுமாகிப் போந்த விடங்



களிலெல்லாம் சிறப்பைத் தருவதும், நல்லறிவைக் கொடுப்பதும், நன்னெறியிற் செலுத்துவதும் கல்வியே. ஆகையால் கல்வி மிக்க அவசியமென நன்கு புலனாகும். ஆதலாற் நம்மவர்களுக்கு அறிவைப் பெருக்கவும் கைத்தொழில்களை விருத்தி செய்யவும் வேண்டியதற்கு கல்வி அவசியம். ஆதலாற் நம்மவர்கள் நம் மக்களுக்கு ஆரம்பக் கல்வியே யல்லாது உயர்தர கல்வியையும் பயிலுவிக்க வேண்டும். உயர்தர கல்வியைப் படித்து முடிந்ததும் தொழிற் கல்வியையும் பயிலும்படி செய்தல் வேண்டும். தொழிற் கல்வியை அதிகமாகப் பயிலுவதற்காக தொழிலபிவிருத்தியினால் முன்னணிக்கு வந்த நாடுகளுக்கு நம்மவர்களுள் செல்வந்தரின் மக்களை அனுப்பிப் படித்து வரும்படி செய்யவேண்டும். அப்படிச் செய்தால் நமது தொழில்களை நூதனமான வழிகளில் செய்து நம் கைத் தொழில்களையும் முன்னுக்குக் கொண்டு வரலாம். எந்நாடு சிறப்புற வேண்டின் அந்நாட்டில் தொழிலபிவிருத்தி செய்யவேண்டும். இஃதினை மேற்கொண்டு நம்மவர்கள் ஒவ்வொருவரும் தங்களது மக்களது உயர்தரக் கல்வியைப் பயிலுவித்துப் பிறகு அவர்களை அடிமை வேலையில் (உத்தியோகத்தில்) அமர்த்தாமல் அவர்களுக்குத் தொழிற் கல்வியும் பயிலுவித்து அவர்களைத் தொழில் செய்வதில் சிறந்தவர்களாகும்படி செய்து நம் தொழில்களை செவ்வனே செய்யும்படி செய்ய வேண்டும். நம் கைத்தொழில்களை நூதன நூதன முறையில் செய்து அதிக ஊதியத்தை அடைவது மல்லாமற் நம் கைத் தொழில்களை முன்னணிக்குக் கொண்டு வரவும் முடியும். நம்மவர்கள் வதியும் இடங்களிலாவது அல்லது ஜில்லாவிற்கு ஒரு தொழிற் கல்விச் சாலையும் சிற்சிலதொழிற் கல்லூரிகளை முக்கியமான சில இடங்களிலும் அமைக்கும்படி அரசாங்கத்தாரை நாம் மன்றாடிக் கேட்டுக்கொள்ள வேண்டும். நாம்தொழிற் கல்வியையும், உயர்தரக் கல்வியையும் பயின்று நம் கைத்தொழில் வியாபாரங்களை முன்னணிக்குக் கொண்டு வரலாம்.

**3.** நம்மவர்கள் தங்கள் மக்களை தொழிற் கல்வி பயில்வதோடு சாயத் தொழிலுக்கு வேண்டிய கல்வியினையும் பயிலும்படி செய்தல் வேண்டும். சாயம் செய்தல், சாயம் கட்டுதல், சாயத்தைக் கொண்டு பலவிதமான வேலைகளைச் செய்வதற்கும் சாயத் தொழிற்கு வேண்டிய கல்வியையும் பயின்று வரும்படி செய்தல் வேண்டும். சாயத் தொழிலால் நாம் நெய்யும் துணிகளுக்குச் சாயம் போட்டு கிராக்கிகளுக்கு துணி பிடிக்கும் படி செய்யலாமாதலாற் சாயவேலை (Dyeing works) களுக்கு வேண்டிய கல்வியையும் பயிலும்படி செய்தல் வேண்டும்.

**4.** நம் மக்களுக்குத் தொழிற் கல்வி கற்பிப்பதுடன் நம் தறிகளுக்கு வேண்டிய சாமான்களை செய்வதற்கும் கல்வி பயின்று வரும்படியும் செய்ய வேண்டும். அதனால் நமக்கு மிக்க சௌகரியம் உண்டு.

**5.** தற்போது இருக்கும் தேசியக் கிளர்ச்சியின் பயனாக எங்கும் கதர்த் துணிகள் நெய்யப்பட்டு அணியப்படுகிறது. அதனால் நம்மவர்களது பட்டு கயிலி, 40, 50, 60 முதலிய சொத்து ரகங்களும் செலவாகின்றதில்லை. எனினும் நம்மவர்களும் கதர்த்துணி நெசவையும் உண்டு பண்ணினால் நம்மவர்களது கைத்தொழில்களும் தற்போது முன்னணியில் நிற்குமென்பதற்கு ஐயமில்லை.

**6.** நம் நாட்டு ஜனங்கள் அயல் நாட்டுத் துணியை வாங்கி அணிவதால் நம்மவர்களால் நெய்யப்படும் துணி அதிகமாக விற்பனையாவதும், உற்பத்தியாவதும் இல்லை. அந்நிய நாடுகளிலிருந்து வரும் துணிக்கு நம் நாட்டு மக்களும் நம்மவர்களில் அநேக பிரபல தனவந்தர்களும் உபசாரப் பத்திரங்கள் வாசித்துக்கொடுத்து அணிகிறார்கள். இவர்களது அந்நியநாட்டுத் துணிகளை இனிமேலாவது வாங்கி அணியாமல் நம்மலர்களால் நெய்யப்படும் நாம் நாட்டுத் துணியை அணிய வேண்டும். அப்படிச் செய்தால் நம்மவர்களது கைத்தொழில் வியாபாரங்கள் முன்னணிக்கு வரும் என்பதற்குச் சந்தேகமில்லை.

நம்மவர் கைத்தொழில் வியாபாரங்களை முன்னணிக்குக் கொண்டு வர வேண்டுமாயின் நம்மவர் பொருளாதார நிலைக்குறைவிற்குக் கூட்டுறவுச் சங்கங்களும் நம்மவர் தொழிற் கல்விக்காக தொழிற் கல்விச்சாலைகளும், தொழிற் கல்விக் கல்லூரிகளும் நிறுவிக்கவேண்டும். கூட்டுறவுச் சங்கங்களும், தொழிற்கல்விச் சாலைகளும் தொழிற் கல்விக் கல்லூரிகளும் நிறுவிப்பதற்கு அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்ள வேண்டும். அரசாங்கத்தாரும் உதவி செய்வார்களென நம்புகிறோம். தற்போது எங்கும் கதர்த்துணிகள் அணியப்பட்டு வருகிறதால் நம்மவர்களும் கதர்த்துணி நெசவை மேற்கொண்டால் நம்மவர் கைத்தொழில்களும் முன்னணியில் நிற்கும் என்பது திண்ணம். எல்லாம் வல்ல நம் பாலக்கடவுள் அருள் புரிவாராக.

சுபம்! சுபம்!! சுபம்!!!

எல்லா விதமான புத்தகங்களுக்கும்
ஸவுத் இந்தியன் புக் டிபோ, 17, பவழக்காரத் தெரு, சென்னை.
என்று எழுதுங்கள்

## தலைச் சங்கம்

### பிரதிநிதிகள் சுற்றுப் பிரயாணம்

மின்னல்.

13-12-30 ல் திரு. தி. அ. சண்முக முதலியார் அவர்கள் சென்னையினின்றும் மின்னல் கிராமத்தையடைந்து அவ்விடத்துள்ள திருவாளர்கள் நடைக்கார பாளையத்தார் முதலியார், பட்டு முத்தப்ப முதலியார் முதலியவர்களால் வரவேற்கப்பட்டு 14-12-30 இரவு 8 மணிக்கு "செங்குந்தர் சீர்திருத்தம்" என்பதைப் பற்றியும் 15-12-30 ல் "இரவு 8 மணிக்கு முசுகுந்தனும் வீரவாகு தேவரும்" என்னும் விஷயத்தைப் பற்றியும் உபன்யசித்து திரு. பாளையத்தார் முதலியாருடன் மதுரா நரசிங்கபுரம், மேகளத்தூர் முதலிய இடங்களைச் சுற்றிப்பார்த்துக் கொண்டு மின்னலை அடைந்தார்.

குருவராஜப் பேட்டை.

17-12-30 ல் குருவராஜப் பேட்டையை யடைந்து, 18-12-30 ல் மாலை 5-மணிக்கு அவ்வூர் பிள்ளையார் கோவிலில் போர்டு ஸ்கூல் உபாத்தியாயர் திரு. வச்சிரவேல் முதலியார் அவர்கள் தலைமையில் செங்குந்தர் பொதுக் கூட்டம் கூடிற்று. அவ்வமயம் திரு. தி. அ. சண்முக முதலியார் "செங்குந்தர் முன்னேற்ற மடையும் வழி" என்பதைப் பற்றியும், திரு. நாகரத்தின முதலியார் "ஒழுக்கம்" என்பதைப் பற்றியும். திரு. சி. கன்னியப்ப முதலியார் "கைத் தொழிலும் செங்குந்தரும்" என்பதைப் பற்றி உபந்யசித்தனர். தலைவர் முடிவுரைக்குப்பின் அவ்வூர் போர்டுஸ்கூல் எட்மாஸ்டர் அவர்களால் வந்தனம் கூற இரவு 9 மணிக்குக் கூட்டம் இனிது நிறை வேறியது.

பொன்னை.

20-12-30 ல் விஸ்வநாதபுரம் முதலிய இடங்களைப் பார்த்துக்கொண்டு பொன்னைக்குச் சென்று அவ்விடத்துள்ள நமது குலதிலகராகிய திருநெல்வேலி ஸ்ரீ. ல ஸ்ரீ. அருணகிரி சுவாமிகளைக்கண்டு அன்று இரவு 9 மணிக்கு ஷை சுவாமிகள் தலைமையில் செங்குந்தர் பொதுக்கூட்டம் பிள்ளையார் கோவிலில் கூட்டப்பட்டது. திரு. தி. அ. சண்முக முதலியார் "செங்குந்தர் உற்பவம்" என்பதைப் பற்றி உபந்யசித்தார். இரவு 1-மணிக்கு கூட்டம் இனிது நிறை வேறியது.

சோளிங்கபுரம்

21-12-30-ல் சோளிங்கபுரத்தை யடைந்து 22-12-30 ல் செங்குந்தர் பிள்ளையார் கோவிலில் இரவு 9 மணிக்கு செங்குந்தர் கூட்டம் ஒன்று கூட்டப்பட்டது. அது சமயம் நமது பிரதிநிதியாகிய திரு. தி. அ. சண்முக முதலியார் ஸ்ரீவள்ளியம்மையார் திருமணம் என்னும் விஷயத்தை உபந்யசிக்க இரவு 12-மணிக்குக் கூட்டம் இனிது நிறை வேறியது. 23-12-30 ல் திரு. வசந்த குப்புசாமி முதலியாருடன் ராமகிருஷ்ணமராசப்பேட்டை, அம்மவாரிகுப்பம், தக்கோலம், நரசிங்கபுரம், பேரம்பாக்கம், முதலிய இடங்களைச் சுற்றிக் கொண்டு 26-12-30-ல் தக்கோலம் வந்து சேர்ந்தார்.

விளாப்பாக்கம்.

27-12-30-ல் நாகவேடு, நெம்மேலி, பனப்பாக்கம், திருப்பாற்கடல், திமிரி, முதலிய இடங்களைச் சுற்றிக் கொண்டு 2-1-31-ல் விளாப்பாக்கத்தை யடைந்து இரவு 9-மணிக்கு பஜனை மடத்தில் செங்குந்தர் பொதுக்கூட்டம் கூடியது. அவ்வூர் அன்பர்கள் வேண்டு கோளுக்கிணங்கி "வன்னி கிணரு லிங்கம்" அழைத்தப்படலம் உபந்யசித்து, 4-1-31-ல் சத்துவாச்சாரி 6-1-30-ல் ஆம்பூர் மேல் கிருஷ்ணாபுரம், பெரியாங்குப்பம், 8-1-31-ல் காலை 9-மணிக்கு செங்குந்தர் கூட்டம் கூடியது. திரு. அ. சண்முக முதலியார் 10-1-30-ல் சமூக முன்னேற்றம் என்னும் விஷயத்தை உபந்யசித்து, சென்னை வந்து சேர்ந்தார். ஆங்காங்கே நமது பிரதிநிதியை வரவேற்று ஆதரித்த நமது சமூகத்தவருக்கு என்றும் நன்றி செலுத்தத் தலைச்சங்கம் கடமைப் பட்டுள்ளது.

---


# கண்கட்டு வித்தைகள்

## நான்கு பாகங்கள் ரூ. 2

கண்கட்டு வித்தையால் கற்பம், வசியம், கொள்ளை, சொக்குத்தூள், குறிசொல்லு மூலிகை, புருஷவசியமுதல் ஸ்திரீ வசியமும், வரிசை வழங்குதல், வாத்தியஜாலம், மூலிகை ஜாலம், மோகனஜாலம், தீவர்த்திஜாலம், மகேந்திரஜாலம், மாம்பழஜாலம், சமுத்திரஜாலம், சங்கிலிஜாலம், அமேத்தியஜாலம், அக்கினிஜாலம், வாத்தியஜாலம், மாடன் மந்திரம், எக்காளஜாலம், எலுமிச்சைவித்தை, கோகர்ணஜாலம், நவில் ஜலஸ்தம்பனம், பத்திரகாளி வசியம், செப்பிடுவித்தை, பாதாள அஞ்சனம், பார்வைமை, குறிசொல் இத்தனை ஜால வித்தைகள் கற்கலாம.

தி ஸவுத் இந்தியன் புக் டிபோ, நெ. 17, பவழக்காரத் தெரு, சென்னை




# தென்னிந்திய செங்குந்தர்

## இரண்டாவது மகாநாடு

சமீபத்தில் காஞ்சீபுரத்தில் கூட இருக்கும் செங்குந்தர் மகாநாட்டுப் பணவசூலுக்காகச் சில கனவான்கள் வரவேற்புக் கமிட்டியின் சார்பாகச் செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள கிராமங்கள்தோறும் சென்ற மார்கழிமாதம் முதல் சுற்றுப்பிரயாணம் செய்துவருகின்றனர். சென்ற வருஷமே காஞ்சீபுரத்தில் நடக்கவேண்டிய இம்மகாநாடு இதுவரையில் நடக்காமல் இருப்பதைப்பற்றிப் பொதுவாகச் செங்குந்த உலகமும் சிறப்பாகச் செங்கற்பட்டுஜில்லாச் செங்குந்தர்களும் மிகவும் வருந்துகின்றனர். ஷையார் இதுவரையில் ஐயம்பேட்டை, கருக்குப்பேட்டை, திம்மன் பேட்டை, நாய்க்கன்பேட்டை, எக்கனம்பேட்டை, ராஜாம்பேட்டை, ஒரக்காட்டு பேட்டை முதலிய பத்துப்பேட்டைகளிலும், சிவபுரம், சேர்க்காடு, சீயமங்கலம், மாமண்டூர் முதலிய ஊர்களிலும், உக்கல், பெருநகர், மானம்பதி, உத்திரமேரூர், அனி முதலிய கிராமங்களிலும் உள்ள பிரமுகர்களைக் கண்டு வசூலுக்கான ஏற்பாடுகள் செய்துவந்திருக்கிறார்கள். வசூல்வேலை தீவிரமாக நடந்துவருகிறது. செங்குந்த பொது ஜனங்கள் மகாநாட்டை மிகுந்த ஆவலுடன் எதிர்பார்த்து வருகிறார்கள். ஷை கனவான்கள், திருக்கழுக்குன்றம், மானம்பதி, செம்பரம்பாக்கம் முதலிய இடங்களுக்கும் போய்வந்ததாகத் தெரிகிறது. கூடியசீக்கிரம் மற்றக் கிராமங்களுக்கும் வருவார்கள்.

வசூலுக்காகச் சுற்றுப்பிரயாணம் செய்வோரை ஆங்காங்குள்ளவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் வரவேற்பதிலிருந்து செங்கற்பட்டு ஜில்லாவாசிகள் மகாநாடு கூட்டும் விஷயத்தில் விசேஷ சிரத்தை கொண்டிருக்கிறதாகத் தெரிகிறது. சிலகிராமங்களில் பணத்தை வசூல்செய்து வைத்திருப்பதாகவும் அறிகிறோம். 18-1-31உ ஷை வரவேற்புக் கமிட்டியின் சார்பாகத் தலைச்சங்கத்தின் கமிட்டி மெம்பர்கள் சிலர் சைதாப்பேட்டை, காரணி, தோப்பேட்டை முதலிய இடங்களுக்குச் சென்று அங்குள்ள வியாபாரிகளையும், பிரமுகர்களையும் கண்டு பேசித்தக்க ஏற்பாடுகள் செய்திருக்கிறார்கள். திருமழிசை நாட்டைச்சார்ந்த மற்ற ஊர்களுக்கும், மதுராந்தகம், படப்பை நாடுகளைச் சார்ந்த ஊர்களுக்கும் கூடியசீக்கிரம் வசூலுக்குப் போவார்கள்.

செங்குந்த கிராமங்களில் பெரும்பாலும் கஷ்டப்பிளவுக ளிருந்தபோதிலும், வியாபாரக்குறைவால் கஷ்டங்க ளிருந்தபோதிலும், பெர்துக்காரியமாகிய இம்மகாநாட்டு விஷயத்தில் அவற்றைக் காட்டிக் கொள்ளாது இதற்காக உழைத்துவரும் குலாபிமானிகளுக்கு வேண்டிய உதவிபுரிந்து உற்சாகப்படுத்துவது மிகவும் பாராட்டத்தக்கது. ஆங்காங்கு வசூலான தொகையையும் நன்கொடையாகக் குலாபிமானிகள் அனுப்பவிரும்பும் தொகையையும் தயவுசெய்து காஞ்சிபுரம் ஆடிசன்பேட்டை ஜவுளி திரு. கங்காதர முதலியார் அவர்களுக்கு விபரத்தோடு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளுகிறோம். நேரில் வசூலுக்கு வருபவர்களிடம் தொகையைக் கொடுத்து ரசீது பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம்.

விளம்பர சபையினர்.

# நிரூபங்கள்

## நமது இரண்டாவது மகாநாடு

இரண்டு வருஷங்களாக நாம் ஆவலோடு எதிர்பார்த்திருந்த மகாநாடு சமீபித்துவிட்டது. கூட்டம் ஏராளமாக இருக்கும். சென்ற வருஷம் நடந்திருக்கவேண்டிய மகாநாடு இவ்வருஷமும் நடைபெறவில்லையென்றால், தமிழ்நாடு, மலையாளம், யாழ்ப்பாணம், பர்மா, மலாயா, ஆப்ரிக்கா, அமெரிக்கா முதலிய பல தேசங்களிலுமுள்ள செங்குந்தர் அனைவராலும் தாய்நாடாகக் கருதப்பட்டு மிகவும் மேன்மையாய் கொண்டாடப் பெற்றுவரும் காஞ்சி சூழ்ந்த தொண்டைநாடு தன்னுடைய மதிப்பை இழக்கநேரிடும் என்ற கவலை நிரம்பவும் செங்கற்பட்டு ஜில்லாவாசிகளுக்கு இருந்துவருகிறபடியாலும்; மகாநாட்டு வசூல் வேலை தீவிரமாக நடந்து வருவதாகத் தெரிகிறபடியாலும் மகாநாடு சமீபித்துவிட்டது என்கிறேன்.

2. தமிழ்நாட்டிலுள்ள எல்லாச் சமயத்தாராலும் மகாபுண்ணிய க்ஷேத்திரமாகக் கருதப்பட்டுவரும் காஞ்சிபுரத்தில் இம்மகாநாடு கூட இருப்பதாலும், மேலும் அந்நகரம் செங்குந்தர்கள் தாய்நாடாகிய தொண்டைமண்டலத்தி லிருப்பதாலும், ஈரோட்டில் நடந்த மகாநாட்டின் சிறப்பைக் கேட்டுணர்ந்த அநேகர் இம்மகாநாட்டிற்கு வரவேண்டுமென்று பேரவாக்கொண் டிருப்பதாலும் காஞ்சிபுரத்திற்கு ஏராளமான கூட்டம் வரும் என்கிறேன். மேலும் காஞ்சிபுரம் எவ்வளவு ஜனங்கள் வந்தாலும் அவ்வளவுபேரும் சௌகரியமாகத் தங்கியிருக்கக்கூடிய விசாலமான நகரமாக இருக்கிறது.

ஆகையால் வரவேற்புக் கமிட்டியார் அதற்குத் தகுந்த ஏற்பாடுகள் முன்னதாகவே செய்துவைப்பார்களென நம்புகிறேன்.

தலைவர் தேர்தல்

3. இவ்வளவு விமரிசையாக நடக்க இருக்கும் மகா

நாட்டிற்கு யாரைத் தலைவராகத் தேர்ந்தெடுப்பார்களெனத் தெரியவில்லை. இது சம்பந்தமாக எனக்குத்தெரிந்தவரையில் பொதுஜனங்களுடைய விருப்பத்தையும், என்னுடைய சொந்த அபிப்பிராயத்தையும் வெளியிட விரும்புகிறேன். ஈரோட்டு மகா நாட்டிற்குத் தலைவர்கள் பொருத்தமாக அமைத்தார்கள். பல நுண்ணறிவுடைய பெரியோர்கள் வந்திருந்தார்கள். அவர்களால் நாம் அடையக்கூடிய பயனைமாத்திரம் அடையவில்லை. அதாவது அவர்களுடைய அரியபெரிய அபிப்பிராயங்களை வெளியிட நாம் சந்தர்ப்பம் தரவில்லை. அக்குறைபாடு இம்மகாநாட்டில் இல்லாதபடி நாம் பார்த்துக்கொள்ளவேண்டும். சமூக மகாநாட்டின் தலைவராகிய நமதுகுல திலகம் உயர் திரு. ஆ. வே. முதைய முத்தலியார் அவர்கள் பல பாஷைகளில் தேர்ந்தவர், பலமத நூல்களில் நிரம்பிய ஆராய்ச்சி யுடையவர். பிரான்சு, ஜெர்மெனி, இங்கிலாந்து முதலிய மேல் நாடுகளுக்குச் சென்றுவந்த உலகானுபவமுடையவர். ஆழ்ந்த தெய்வபக்தியுடையவர். நமது சமூக சீர்திருத்தச் சம்பந்தமாக இப்பெரியாரது அபிப்பிராயங்கள் பூராவும் நாம் தெரிந்து கொள்ளவேண்டியது அத்தியாவசியமாயிருக்கிறது. ஆகையால் அப்பெரியாரையே இரண்டாவது மகா நாட்டிற்கும் தலைவராய்த் தேர்ந்தெடுக்குமாறு செங்குந்தப் பொதுஜனங்களின் சார்பாக வரவேற்புக் கமிட்டியாரை நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ம. சே. நாகலிங்க முதலியார்,
சேயனூர்.

# ஒரு விசனிக்கத் தக்க சம்பவம்

பொங்கற் பண்டிகை கழிந்ததும், வியாபாரிகள் தங்கள் பாக்கிப் பணங்களை வசூலிப்பதற்காகக் கிராமங்கள்தோறும் செல்வது வழக்கமன்றோ. அக்காரணத்தினாலேயே நானும் சென்ற மூன்றாம் நாட் பொங்கலன்று விசனபுரி என்னும் ஓர் கிராமத்திற்குச் சென்றேன். அன்றையத்தினம் நான் அவ்வூரில் சென்றவிடங்களிலெல்லாம் ஜனங்கள் சிறு சிறு கூட்டங்களாகக் கூடி ஏதோ ஓர் விஷயத்தைப்பற்றி ஆத்திரத்துடனும் படபடப்புடனும் பேசிக்கொண்டிருந்தார்கள். நான் கண்டவளவில் என்னை யொத்த வியாபாரிகள் அவ்வூருக்குச் செல்லுந்தோறும் ஆங்குள்ள ஜனங்கள் அவர்களை மரியாதையுடன் அழைத்துக் குசலம் விசாரிப்பது வழக்கம். ஆனால் இத்தருணத்தில் அழையா வீட்டுச் சம்பந்தியோல் நானே அவர்கள் கூட்டத்துள் வலிது புக்கினும் என்னைக் கவனிப்பாரில்லை. அவர்கள் நான் முன் சொன்ன தங்கள் காரியத்திலேயே கண்ணுங் கருத்துமா யிருந்தார்கள். அவர்களது சிவந்த முகங்களையும் கோபக்குறியுடன் பொறி பறக்கும் கண்களையும் கண்ட எனக்கு அவர்கள் தம் செயலுக்குக் காரணம் விளங்காமல் தயங்கலுற்றேன். ஏதோ ஓர் பெருத்த அவமானத்தைத் தரும் செய்கை அவ்வூர்க்கு யாரோ செய்திருக்க வேண்டுமென யூகித்தேன். நான் சென்ற சில செங்குந்தர்கள் ஊர்களைக் காட்டிலும் 'விசனபுரி' என்னும் இவ்வூரில் சிலர் கொஞ்சம் கல்வி வாசனையுடையவர்களாயும், தற்காலச் சீர்திருத்தங்களைப் பற்றி (நடைமுறையில் அனுசரியாவிடினும்) சற்றேனும் கேட்கக் கூடியவர்களாயும் இருப்பவர்கள். இவர்கள் வெளியார்களின் அந்தஸ்துக்கேற்றபடி அவர்களிடம் வணக்கமாக நடந்து கொள்ளுபவர்கள். செங்குந்த மஹாஜனப் பிரசாரகர் ம-ா-ா-ஸ்ரீ தி. அ. சண்முக முதலியார் அவர்களது நன் மதிப்பைச் சிறிது பெற்றவர்கள். அவர்கள் தம் பிரசார வேலையில் இவர்களில் சிலர் ஈடுபட்டு சுற்று கிராமங்களுக்குச் சென்று பல கிளைச் சங்கங்களை நிறுவிக்கவும், அவர்களிடையிற் போந்துள்ள கக்ஷிப் பிளவுகளை யொழிப்பான்வேண்டி அச்சங்கங்களில் (ஒற்றுமை) 'கல்வி', 'ஒற்றுமை யில்லாக் குடும்பம் ஒருமிக்கக் கெடும்,' 'கக்ஷிப் பிளவுகளினால் நேரும் கஷ்ட நஷ்டங்கள்' 'மதுபானம்,' 'சூது' முதலிய அரும் பெருங் கட்டுரைகளைத் தாங்கி சொன்மாரி பொழிந்தும் வந்தவர்கள். தங்கள் கிராமத்திலும் சில அமாவாசைத் தினங்களில் கூட்டங்கள் கூட்டியும், அவைத் தலைமை வகித்தும், மேற்கண்ட விடயங்களைப் பற்றி பிரசங்கங்கள் பல புரிந்தும் வந்தார்கள். இவர்களது தீவிர நன்முயர்சியால் மித்திரனுக்குச் சந்தாதாரராகச் சேர்ந்தவர் பலர்.

தங்கள் குல முன்னேற்றத்திற்காக இத்தகைய அரும் பெருந் தொண்டாற்றிய இவர்களின் மனநிலை இப்பொழுது கலங்குவதேன்? இவ்வூராருக்குள் பெரிய கட்டு (ஒற்றுமை) உண்டே. அக்காரணத்தினாலேயே இதனை பெருங் கட்டூர் எனவும் சொல்லலாமே. இக்காரணத்திற்காகவே, பக்கத்து கிராமங்கள் இதைப் பாராட்டிப் புகழ்வது முண்டே. இத்தகையவர்களின் மனது புண்படும்படி யார் என்ன இன்னலை விளைவித்தனரோ என்று ஒன்றுந் தோன்றாதவனாகி, இந்நிலையிலுள்ள இவர்களை இத்தருணம் பணம் கேட்டல் நன்றல்ல என உணர்ந்து பக்கத்துக் கிராமத்துக்குச் சென்று வரலாமென்றுப் போய்விட்டேன்.

மாலை மணி சுமார் இரண்டரை இருக்கும். நான் மத்தியான போஜனமுட்கொண்டு சற்று இளைப்பாறி மறுபடியும் விசனபுரிக்குத் திரும்பினேன். ஊருக்குள் வந்ததும் நான் திடீரெனப் பயந்தேன். என் மனம் பதைத்தது. திடுக்குற்றுத் தயங்கியது. படபடவென அடித்தது. நாலா வீதியிலுள்ள ஜனங்களெல்லாம் தங்கள் வஸ்திரத்தை இழுத்துக் கச்சமாகக் கட்டிக்கொண்டே வெகு வேகமாக ஓடினார்கள். குறுக்கே ஓடும் குழந்தைகளையும் பாராது தாண்டித்தாண்டி மற்றவர்களையும் கூவிக்கொண்டே ஓடினார்கள். உண்மை தெரியாத நானும் அவர்கள் பின்பற்றி ஓடினேன். நடுவீதி மடத்தன்று ஓடினார்கள். ஊர்ஜனங்கள் எல்லாம் உருண்டு திரண்டு அங்கு வந்து கலப்பதைக் கண்டேன். அங்கு நேர்ந்தவற்றை எழுதவும் என்னால் முடியவில்லை. என் மனம் அதை நினைக்க இன்னும் நடுங்குகிறது. ஓர் பக்கம் வருத்தம் என்னை வாட்டுகிறது. செங்குந்த மஹா ஜன சங்கமும், மற்றும் இதை வாசிப்போர் பலரும் இவர்களுக்கு நற்புத்தி போதிப்பார்களென்ற எண்ணத்துடன் எழுதத் துணிகின்றேன்.



யுத்த களத்தைப்பற்றி நான் சிறிது வாசித்தும் கேட்டுமிருக்கிறேன். ஆனால் கண்டதில்லை, இப்பொழுது பார்க்கலுற்றேன். நவவீரர் வழிவந்த செங்குந்த வீரர்கள் என்பதை இவ்வூரார் ஒருவரே இன்று செய்கையில் நடத்திக் காட்டினார்கள். சிறுவர்முதல் கிழவர்வரை கூடியிருந்த அக்கூட்டத்தில் இளமைத்தன்மையோ, முதுமைத் தன்மையோ ஒரு சிறிதுமில்லாமல் எல்லாம் வாலிபர்களாகவே விளங்கினார்கள். ஒவ்வொருவரும் குதித்துக் குதித்து ஒருசாரரை அடிப்பதற்கும் உதைப்பதற்கும் ஓடினார்கள். மெய்ம்மறந்து சுய அறிவுமிழந்து தங்கள் உற்றார், பெற்றார், சுற்றத்தார், குலத்தார், ஊரார் என்ற முறை ஒரு சிறிதுமின்றி வாயில் வந்தபடியெல்லாம் திட்டினார்கள். மயிர்பிடித்துச் சண்டையிட்டோர் பலர். இடியுண்டோர் பலர், உதையுண்டோரும் அடியுண்டோரும் பலர். சுமார் மணி நான்குக்குமேல் கூட்டம் ஒருவாறு கலைந்தது. சில வீரர்கள் எதிர் கக்ஷியிலுள்ளோர் சிலரை அன்றிரவே கொன்று போடுவதாக உறுதி மொழி கூறிக்கொண்டுத் தத்தம் பாசறை புக்கினர். இவையெல்லாவற்றையும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த அன்னிய மதத்தினர் பலர் பரிகசித்துக் கொண்டே சென்றனர்.

பின்புதான் நான் ஊர் நிலைமையைப் பற்றி முழு விபரம் தெரியலானேன். வெளியூர்க் கக்ஷிகளைத் தீர்ப்பதற்காக ஆங்காங்கு சங்கங்கள் ஏற்படுத்திக் கொண்டு ஓர் அற்ப காரியத்திற்காக மானிடர்கள் அதிலும் ஒரு குலத்தோர், ஒரு ஊரார், உற்றார் உற்றார் முதலியவர்கள் ஒருக்காலும் நடவாத, கனவிலும் நடக்க நினையாத முறையில் நடந்து கொண்டதைப் பற்றி வருத்தமும் இரக்கமும் கொண்டேன். சென்ற மார்கழித் திருவாதிரையன்று எதிர் (சிறிய) கக்ஷியார் சுவாமி ஊர்வலம் வருகையில் கற்பூர தீப ஆராதனைக் கொடுப்பதைத் தடுக்க பெரிய கக்ஷியார் கூட்டம் கூடி வீட்டுக்கு ஒருவர் வீதம் சுவாமியுடன் ஊரைச்சுற்றி வந்தார்களெனவும், தம்மினத்தான், தம்மூரான் ஒருவன் வியாபாரத்தை ஒடுக்கி பிறவினத்தான் அயலூரான் ஒருவன் வியாபாரத்தை ஓங்க வைக்க வேண்டுமெனத் தீர்மானங்கள் செய்துள்ளார்களெனவும் கேட்டு ஆற்றொணா வருத்தமடைந்தேன்.

இன்னும் ஓர் அனுபாவமும் அக்கிரமுமான அட்டூழியம் ஒன்று அன்றிரவு நடந்தது. இதையும் காணும் துர்ப்பாக்கியத்தை நான் பெற்றிருந்தேன். கடைசித் தெருவில் எதிர்க் கக்ஷியைச் சார்ந்த ஓர் வீட்டின்மேல் வாலிபர்கள் சிலர் கன்மாரிபொழிய ஆரம்பித்தார்கள். அப்போது மணி 9½ அல்லது 10 தான் இருக்கும். கற்கள் விழுந்ததைக் கண்ட அவ்வீட்டுச் சொந்தக்காரர் எழுந்து தெருவில் வரத் எதிர்ப் பக்கத்து ஒரு வீட்டிலிருந்து நால்வர் வந்து அவரை நையப் புடைத்துத் திரும்பி ஓடிக் கதவைத் தாளிட்டுக் கொண்டனர். அத்தருணம் அவர் தம் மனைவி மக்களுடன் ஓவென்றலரி அழுதமை யார் மனதைத்தான் கசியச் செய்யாது. அந்நிலைமையிலும் சுற்றுப் பக்கங்களிலுள்ள ஜனங்களில் அவரைத் தேற்றுவா ரொருவருமில்லை. இத்தகைய கொடுங்கோன்மைக்குப் பயந்து வேறு இல்லம் சென்று அன்றிரவைக் கழித்தார்கள் என்பதை அறிய யார் தான் இவ்வூராரைப் பரிகசிக்க மாட்டார்கள். ஐயோ இவர்கள் கக்ஷியின் வன்மை தான் என்னே! பிறர் எது எண்ணினும் எண்க. நரகத் தண்டனை அடையினும் அடையட்டும். தம்முயிர் நீங்கினும் நீங்குக. நான் என் தாயாதி, இனத்தார் ஊரார் இவர்களைக் (கோடரிக் காம்புகளே போல்) தொலைப்பதே சரியெனக் கங்கணம் கட்டி யிருக்கும் இவர்களது வீரதீரச் செய்கை தான் என்னே! அம்மம்மா பெரிது! பெரிது!!

யானும் பல செங்குந்தர்கள் வதியும் கிராமங்களுக்குச் சென்றிருக்கிறேன். ஆங்காங்கு கக்ஷிகள் பலவு மிருந்திருக்கும். இதைப்போன்ற அடாத செய்கைகளைக் கண்டதுமில்லை. கேட்டதுமில்லை.

இத்தகைய மனிதப் பொருப்பு சிறிதுமற்ற செயல்களெல்லாம் சில வாலிபர்களாலேயே நடந்தது என்றாலும், முன் சொல்லிய கொஞ்சம் விஷயமுணர்ந்தவர்களும், தம் சமூகத்திற்குத் தொண்டு செய்கிறேனென்று ஊர் ஊராகச் சென்று உங்கள் கக்ஷிப் பிளவுகளை நீக்கவேண்டும், நீக்கவேண்டுமென்று உபந்நியசித்த இவ்வூர்ச் சங்கத்து அங்கத்தினர்கள் சிலரின் அன்பு கலந்த ஆதரவினாலேயும் தைரியத்தினாலேயும் அத்தகைய காரியங்கள் செய்யலாயிற்றென சிலர் ஊகிக்கின்றனர். எவ்வுண்மை எப்படி யிருப்பினும் மேற்சொன்ன இவர்கள் இதுபோன்ற துஷ்ட காரியங்கள் செய்து வருவதைத் தடுக்கலாம். தடுக்கவும் முடியும். ஊரை ஒருவாறு ஒழுங்கு படுத்தவும் தாங்கள் முயற்சிக்கலாம். இத்தகைய முயற்சியின்றி வேறு விஷயத்தில் திரும்பிய இவர்கள் மனதில் உதித்துள்ள விபரீதம்தான் என்னவோ.

இவ்வளவு நெருக்கடியானதும், மோசமானதுமான நிலைமையில், விபரீதமும அநியாயமுமான செய்கைகள் பல நடந்தும், நடந்து கொண்டும் வரும் இத்தருணத்தில் பக்கத்தூரார் பரிகசித்தும் பரிதாபப் பட்டும் வரும் இந்நாளில், கக்ஷியின் பலம் கொஞ்சமும் குறைவின்றி தினே தினே வளர்ந்து வரும் இச்சமயத்தில் செங்குந்த மகாஜன சங்கமும், இன்னும் பல செங்குந்தப் பிரமுகர்களும் இதைக் கவனித்து இதற்கேற்ற பரிகாரம் ஒன்று தேடார்களாயின் விசனபுரிக்கேயன்றி, செங்குந்த உலகத்திற்கே ஓர் இழிபெயரும், பழிபெயரும் உண்டாகும் என்று எண்ணியே பொதுஜன முன்னேற்றத்தில் கவலை கொண்டுள்ள யான் இதைச் செங்குந்த மித்திரன் வாயிலாக எழுதத் துணிந்தேன்.

ஓர் வியாபாரி




## ‘தேக சுகம்’

L. மாரியப்பன், (ஸ்டுடேனட்) திருச்செங்கோடு

ஐசுவரியங்களில் முக்கியமானது சரீரசுகம். பணக்காரனாக இருந்து நோயுடன் யிருப்பதைக் காட்டிலும் ஏழையாக இருந்தாலும் சரீரசுகம் பெற்றிருப்பதே மேலானது. இதனாலன்றோ பெரியோர்கள்

‘நோயற்றவாழ்வே குறைவற்ற செல்வம்,

என்று சொல்லியிருக்கின்றார்கள். அநேகமாகக் கூலி வேலை செய்கிறவர்கள் ஒருபொழுதும் வியாதியடைகின்றதில்லை. அவர்களுக்குப் பசித்தால் சாப்பாடு, நினைத்தால் தூக்கம் எப்பொழுதும் சந்தோஷமாகவும், சுறு சுறுப்பாகவும் இருக்கின்றார்கள். ஆனால் பணக்காரரோ சாதாரணமாக சுகக் குறைவாக இருக்கின்றார்கள்? அவர்களுக்குப் பசி எடுக்கிறதில்லை. தூக்கம் வருகின்றதில்லை. எப்பொழுது சாவோம் என்றும், ஏன் பிறந்தோம் எப்பொழுது சாவோம் என்று துயரப்படுகின்றார்கள்.

ஒருபாரம் பொன்னைக் காட்டிலும் ஒரு பலம் சுகமே மேலானது என்றால் உலகத்தில் எதைத் தான் சரீரத்திற்குச் சமானமானதாகச் சொல்லுவது. இவைகளில் இருந்து நாம் விரும்பக்கூடிய எல்லாவற்றைவிட சரீரசுகத்தை மேலானதாகக் கருதவேண்டும் என்று தெரியவருகின்றது. அடுத்தபடியாக நாம் சுக தேகத்துடன் பிறந்தால் கூடப் பிறந்த சுகத்தை எவ்வாறு வாழ்நாளில் காப்பாற்றுவது? சுகதேகத்துடன் பிறக்காவிட்டால் வாழ்நாளில் எவ்வாறு சுகமும் பலமும் பெறுவது என்று ஆராயவேண்டும். கீழ்வரும் சில விதிகளை முதன் முதலாக ஆராயவேண்டும்.

(1) பரிசுத்தமான ஆகாயத்தையே கூடியவரையில் உட்கொள்ளவேண்டும் : அதாவது பிராண வாயும், மந்தவாயும் சேர்ந்த ஆகாயத்தை உட்கொள்ளவேண்டும்.

(2) நல்ல ஆகாரத்தையே புசிக்கவேண்டும் : அதாவது நமது தேஹஸ்திதிக்கு எந்த ஆகாரம் நல்லதோ அதைச் சரியாகச் சமையல்செய்து, சரியான காலத்தில் சாப்பிடவேண்டும். நமது தேகஸ்திதி நமது சாப்பாட்டை அனுசரித்தே இருக்கிறது. ‘ஊணெப்படி உடம்புமப்படி’ என்பது சரியாகும். நமது சாப்பாடுசரியானதாக ஏற்படாவிட்டால் நமக்கு சவுக்கியமும் பலமும்வேண்டிய அளவு பயனாகாது.

(3) சுத்தமான ஜலத்தையே சாப்பிடவேண்டும் : சுத்த ஜலம் கிடைக்காத இடத்தில் நாம் என்னசெய்வது ? தண்ணீரைக் கொதிக்கவைத்துச் சாப்பிடலாம். ஏன் கொதிக்க வைக்கவேண்டுமென்றால் அசுத்தத் தண்ணீரில் கோடிக்கணக்கான கிருமிகள் (Germs) இருக்கின்றன. அவைகள் நமது உடம்பிற்குள் சென்று பலவித வியாதிகளுக்கு நம்மை ஆளாக்கிவிடும். ஜலத்தைச் சுடவைத்தால் அவைகள் இறந்துவிடுகின்றன. வேண்டிய அளவு சுத்த ஜலம் சாப்பிட்டால் வாந்திபேதி விஷ ஜுரம் முதலியன வராமல் சுகமாகவும், பலமாகவும் இருக்கலாம். சாப்பாட்டைக் காட்டிலும் சுத்தஜலமே அவசியமானது. சாப்பாடில்லாமல் சிறிதுகாலம் ஜீவித்திருக்கலாம். தண்ணீரில்லாமல் இருக்கமுடியாது.

(4) சுத்தமாக இருக்கவேண்டும் : சரீர சவுக்கிய சம்பந்தமான விதிகளில் முக்கியமானது இதுவே. நமது உடம்பையும், பற்களையும், கண், காது, நாசி இவைகளைமாத்திரம் சுத்தமாக வைத்துக்கொண்டால் போதாது. நமது வஸ்திரங்களையும், உடுப்புகளையும், நாம்வசிக்கும்வீட்டின் சுற்றுப் பக்கங்களையும் தெருவையும் சுத்தமாக வைத்துக் கொள்ளவேண்டும்.

5. கூடிய வரையில் வேலையைச் செய்ய வேண்டும்:—கூடிய வரையில் வேலையை செய்ய வேண்டுமென்றால் சரீரத்திலுள்ள தசைகளை யெல்லாம் அப்பியசிப்பதுடன் மூளைக்கும் வேண்டிய வேலை தரவேண்டும். கைத் தொழில் செய்யாமல் உத்தியோகம் செய்து பிழைக்கும் ஜனங்களும், மாணாக்கர்களும் மூளைக்கே முயற்சி தருகின்றார்கள். ஆகையால் பலவிதமான பந்து விளையாட்டுகளும் (cricket, Tennis, Football, Hockey) ஓடுவதும், கஸரத்து தேகப் பயிற்சியாகும். கூலி வேலை செய்பவர்களுக்கு அவை அவசியமில்லை. உடம்பிற்கும், மூளைக்கும் வேலைகொடுப்பவன் நெடுங்காலம் வாழ்ந்திருப்பான். ஆனால் மிதமிஞ்சி தேஹாப்பியாசம் செய்வதும், உழைத்து வேலை செய்வதும் ஒன்றுமே செய்யாமலிருப்பதைக் காட்டிலும் கேடானது.

6. தசைகளைப் பயிற்சி செய்:—யௌவனத்தில் புஷ்டியும், பருமனும், சுகமும் பெற்று வளர விருப்பமுடைய சிறுவன் பாலியத்தில் தன் உடம்பிலுள்ள எல்லாத் தஸைகளையும் படிப்படியான கஸரத்துகள் செய்து படியும்படி செய்யவேண்டும். ‘பாடென்கப் பாடென்க இராகம்’ என்பது போல ‘பயிலப் பயிலப் பருத்துப் பெருகும்’ என்பதே இயற்கையாக ஏற்பட்ட நமது சரீர சம்பந்தமான விதி. பயிற்சி செய்யாமல் போனால் உடம்பு மெலிந்து உறுப்புக்கள் தளர்ந்து உபயோகமில்லாமல் போய்விடும்’.

7. அன்னபானங்களில் மிதமாக இருக்க வேண்டும்:—ஆஹாரத்தில் மிதம் இல்லாவிட்டால் சரீர சவுக்கியம் கெடும். அதிகமாகச் சாப்பிட்ட சாதம் ஜீரணமாகாமல் அஜீரணம் ஏற்படும். அஜீரணத்தின் காரணமாக மலச்சிக்கலும், தலைவலியும் உண்டாகும்.

பானங்களில் மிதம்தப்புவது தீது. அதிலும் பிராந்தி முதலிய பானங்களை அளவுக்கு அதிகமாகச் சாப்பிட்டால் மிகக் கொடிய வியாதி யடைவோம். அமித மதுபானம் செய்வதனால் தேக சுகம், குறையும். ஜீவனமும், அந்தஸ்தும், யோக்கிதையும் கெடும், பிராணனுக்கே ஹானி நேரிடும். மதுபானத்தில் மாத்திரமல்ல—காப்பி டீ சாப்பிடுவதிலும் அளவு தப்பிப் போகக் கூடாது. காப்பி, டீ, என்ற பானங்களில் ஒருவித விஷம் இருக்கின்றது, டீயிலுள்ள விஷ அம்சத்திற்கு டானின் (Tannin)என்று பெயர்.

நிபந்தனைகள் இன்னும் அனேகம் சொல்லலாம். ஆனால் மேற் கண்டவைகள் தான் முக்கியம். விதைகள் இல்லாவிட்டால் செடிகள் எவ்வாறு பயிராகும்? வித்து முளைத்துச் செடியாவதுபோல கிருமிகள் பெருகி வியாதி ஏற்படுகிறது. தேஹத்தில் வலிவு இருக்குமாயின், அந்த அபாயகரமான கிருமிகளை நாம் உட் கொண்டாலும், நமக்கு வியாதி நேரிடாது. நமது தேஹத்தில் சுகம் குறைந்து வலிவு குன்றினால் ரோகத்திற்கு ஆதாரம் ஏற்படுகின்றது. ஆதலால், நாம் எப்பொழுதும் பலமும், சவுக்கியமும் குறையாமலிருக்கும்படி சரீர சுகத்தைக் காத்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

ஆதிகாலத்தில் ரோமா தேசத்தவர்கள் மற்றெல்லா தேசத்தார்களைக் காட்டிலும் உன்னதமானவர்களாக இருந்தார்கள். இக்காலத்தில் நிகழும் ஆங்கில ராஜ்யத்தைத் தவிர வேறெந்த அரசாக்ஷியையும் ரோமா ராஜ்யத்திற்கு ஒப்பிடத்தகாது. அவ்வாறு பேர்போன ரோமா தேசத்தவர்கள் கைபற்றின முதுமொழி ஒன்றுண்டு. அதாவது ‘உடலில் வலுவிருந்தால் மனத்திலும் திடமுண்டு’ என்பது; அதாவது எவன் நல்ல ஆகாரத்தையும் பரிசுத்தமான காற்றையும் உட்கொண்டு, சரீரத்தை வேண்டியபடி ஸாதகம் செய்து வருகிறானோ அவனே திடசித்தமும், நீர்காலோசனையும், சாதுர்ய புத்தியு முள்ளவனாவான் என்பது.

முன்பு குறிப்பிட்ட ஏழு விதிகளையும் விவரமாக ஆராய்ந்து பார்க்கவேண்டும். பிறகே மனிதன் தன்னுடைய வாழ்நாளைச் சந்தோஷமாகக் கழிக்கத் தேக சுகம் எவ்வாறு இருக்க வேண்டுமென்பது தெரியவரும். இவைகளை விவரமாக அடுத்த சஞ்சிகையில் காண்க.

(தொடரும்)

---

## நன்கொடை


இராசிபுரம் தாலூக்கா கீராளிப்பன் கிராமம் பிரபல மிருஸ் ஜவுளி லேவாதேவி. யூனியன் போர்டு மெம்பர் பெரியதனம் மு. பழனி முதலியாரின் தாய் சென்ற கார்த்திகை மாசம் திங்கட்கிழமை 27-ந்தேதி சுக்கிரவாரம் (12-12-30) மாலை 4-30 மணி சுமாருக்கு தெய்வீகபதவி அடைந்துவிட்டதால் மறுநாள் சனிக்கிழமை ஏழைகளுக்கு அன்னமும் வஸ்திரதானம் மார்கழிமாசம் 9-ந்தேதி புதவாரம் உத்திரகிரியை முதலியதும் அன்று ஏழைகளுக்கு அன்னம் வஸ்திரம் முதலியது கொடுக்கப்பட்டது.

இது சம்பந்தமாக காலஞ்சென்ற தமது பாட்டியாரின் ஞாபகார்த்தமாக மித்திரன் 1824 நெம்பர் சந்தாதாரரும் ஸ்ரீமான் M. பழனியப்ப முதலியாரின் குமாரருமாகிய M. P. சிவஞான முதலியார் மனமுவந்து தென்னிந்திய செங்குந்தர் கல்விநிதிக்கு நன்கொடை அளித்த ரூபா. 2-0-0.

## தலைச்சங்கத்திற்கு வளையற் காப்பு நன்கொடை வரவு.

பிரமோதூதஸு மார்கழிமீ 6உ ஞாயிற்றுக்கிழமை மாயவரம் தாலுக்கா செம்பொனார்கோவில் திருவாளர் பெ. அம்பலவாண முதலியாரவர்களின் மனைவி ஸ்ரீமதி செல்லத்தம்மாளுக்கு நடந்தேறிய வளையற்காப்பு முகூர்த்தத்தில் நமது தலைச்சங்கத்திற்கு நன்கொடை யளித்தது. ரூபா. 1-0-0.

பிரமோதூதஸு மார்கழிமீ 13உ ஞாயிற்றுக்கிழமை சீர்காழி தாலுக்கா மேல் நாங்கூர் சு. கந்தசாமி முதலியார் குமாரத்தி ஸ்ரீமதி சிவகாமியம்மாளின் வளையற்காப்பு முகூர்த்தத்தில் நமது தலைசங்கத்திற்கு நன்கொடை செங்குந்தமணி திரு. அ. சொக்கலிங்க முதலியார் மூலம் வரவு அணாட்டு 0-8-0.




## காஞ்சிபுரம்

### செங்குந்தர் பாடசாலைக் கட்டிட தர்மநிதிச் சீட்டு

இதன் உத்தேசித்த தொகை சேராமையால் கமிட்டியின் தீர்மானப்படி சீட்டுக்குலுக்குந் தேதியைப் பிரசோற்பத்தி௵ வைகாசி௴ 32௳ (14—6—31) க்கு மாற்றி வைத்திருக்கிறது.

### சீட்டின் நோக்கம்

காஞ்சிபுரத்தில் செங்குந்த மகாஜன சங்கத்தின் ஆதரவில் செங்குந்தர் பாடசாலை ஒன்று 3 வருட காலமாக நடைபெற்று வருகின்றது. இப்பாடசாலைக்குச் சொந்தமாகக் கட்டிட மொன்றில்லாமையால் ஜில்லாக் கல்வி அதிகாரிகள் தனியே கட்டிடமொன்று அவசியம் வேண்டியதென வற்புறுத்துவதை உத்தேசித்து இக்கட்டிட தர்மநிதிச் சீட்டு ஏற்படுத்தப் பெற்றது.

கல்வி குறைந்த நமது தேசத்திலே செங்குந்த சமூகம் எழுதப் படிக்கத் தெரிந்தவர் தொகையில் மிகக் குறைவெய்தி யிருக்கிறது. செங்குந்தர்கள் வதியும் ஒவ்வொரு கிராமத்திலும் இத்தகைய பாடசாலைகளிருக்க வேண்டியது அவசியமும் அவசரமுமாகும். இப் பாடசாலையின் முன்னேற்றம் கருதிச் சிறப்பாகச் செங்குந்த சமூகத்தவரும் மற்றைய சமூகத்தவர்களும் இச்சீட்டை ஆதரித்துத் தங்களாலியன்ற பேருதவியைச் செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம்.

### சீட்டின் விபரம்

சீட்டு ஒன்றுக்கு அணா நான்கு (0—4—0) வீதம் (6000) ஆறுயிரம் ரூபாய் வசூல் செய்து, அச்சுக் கூலி, சிப்பந்திச் சம்பளம், பிரயாணச் செலவு, தபாற் செலவு முதலியவற்றுக்காக ரூபாய் ஆயிரம் (1000) போக மீதி ரூபாய் 5000 த்தில் ரூ. 2500 பாடசாலைக் கட்டிடத்துக்கு வைத்துக் கொண்டு மீதியுள்ள ரூ. 2500 த்தைச் சீட்டுக்கள் வாங்கிய அன்பர்களுக்குச் சீட்டுக்கள் குலுக்கிக் கீழ்க் கண்டபடி பிரைசுகளாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | 1-வது பிரைஸ் | 1-க்கு ரூ. 500 | ஆக ரூ. 500 |
| 2. | 2-வது ,, | 1-க்கு ரூ. 250 | ஆக ரூ. 250 |
| 3. | 3-வது ,, | 1-க்கு ரூ. 100 | ஆக ரூ. 100 |
| 4. | 4-வது ,, | 2-க்கு ரூ. 50 | ஆக ரூ. 100 |
| 5. | 5-வது ,, | 4-க்கு ரூ. 25 | ஆக ரூ. 100 |
| 6. | 6-வது ,, | 10-க்கு ரூ. 10 | ஆக ரூ. 100 |
| 7. | 7-வது ,, | 30-க்கு ரூ. 5 | ஆக ரூ. 150 |
| 8. | 8-வது ,, | 100 க்கு ரூ. 3 | ஆக ரூ. 300 |
| 9. | 9-வது ,, | 201-க்கு ரூ. 2 | ஆக ரூ. 400 |
| 10. | 10-வது ,, | 500-க்கு ரூ. 1 | ஆக ரூ. 500 |
| | | | மொத்தம் பிரைஸ் தொகை ரூ. 2500 |

ஒரு சீட்டின் விலை அணா நான்காக 22 சீட்டுக்களடங்கிய ஒரு புத்தகத்தை விற்பவர் ரூ. 5 அனுப்பிவிட்டு 2 சீட்டைக் கமிஷனுக்காக எடுத்துக் கொள்ளலாம். 20 சீட்டுக்குக் குறைந்து விற்பவருக்கும் கமிஷன் கிடையாது.

### சீட்டுக்கள் வாங்குவோர் கவனிக்க வேண்டியவை

மேற்படி சீட்டுக் கமிட்டியார் ஏற்பாட்டின்படி சீட்டு சம்பந்தமான கணக்கு, ரிக்கார்டு முதலியன ஜாக்கிரதையாய் வைக்கப்பட்டிருக்கின்றன. சீட்டு வாங்கினோர் யாரேனும் கணக்குப் பார்க்க விரும்பினால் ஆபீஸ் நேரத்தில் வந்து பார்த்துக் கொள்ளலாம். சீட்டுப் புத்தகம் விற்றவர் அடிப்பாகமான கூபனையும், பணத்தையும் கீழ்க்கண்ட விலாசத்துக்குக் கணக்கு முடிவு செய்யப்படும் தேதிக்குள் கட்டாயம் அனுப்பிவிட வேண்டியது. சீட்டுப் புத்தகம் வேண்டுவோர் காரியதரிசிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம். பணம் வந்து சேராத சீட்டுக்களைக் குலுக்குஞ் சீட்டுக்களோடு சேர்க்கப்படமாட்டாது. சீட்டு வாங்கினவர் தங்கள் நம்பர் குலுக்குஞ் சீட்டுக்களில் சேர்ந்திருக்கிற விபரந் தெரிய வேண்டுமானால் ரிப்ளை கார்டில் தங்கள் சீட்டு நம்பரைக் குறித்தனுப்பித் தெரிந்து கொள்ளலாம்.

### சீட்டுக் குலுக்கி எடுத்தல்

பிரசோற்பத்தி௵ வைகாசி௴ 32௳ (14-6-31) யில் தக்க பெரியோர்கள் முன்னிலையில் காஞ்சிபுரம் செங்குந்தர் பாடசாலையில் சீட்டுக் குலுக்கிப் பிரைசுகள் எடுக்கப்படும். உத்தேசித்த தொகை வசூலாகாது குறையுமானால், விகிதப்படி பிரைசுகளின் தொகை குறைத்தே கொடுக்கப்படும். எல்லாத் தொகைகளும் அடிக்கட்டைச் சீட்டுக்களும் பிரசோற்பத்தி௵ வைகாசி௴ 19௳ (1-6-31) தேதிக்குள் கட்டாயம் வந்து சேர்ந்து விடவேண்டும். விற்காத சீட்டுப் புத்தகங்களையும் ஷை தேதிக்குள் அனுப்பிவிட வேண்டும்.

### பிரைஸ் வந்தவர்களுக்கு அறிவிப்பு

சீட்டுக் குலுக்கி எடுத்தானவுடன் முடிவைப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும். பிரைஸ் வந்த முதல் 9 பேர்களுக்கு அவர்கள் செலவில் தந்தி மூலம் தெரிவிக்கப்படும். மற்றவர்களுக்குத் தபால் மூலம் தெரியப்படுத்தப்படும். சீட்டு வந்தவர்கள் ஒரு மாதத்துக்குள் தங்களிடமுள்ள ரசீதில் கையெழுத்திட்டனுப்பிப் பணத்தை நேராகவோ மணியார்டர் மூலமாகவோ பெற்றுக் கொள்ள வேண்டியது.

ஒவ்வொருவரும் கல்வியை வளர்ப்பதையே தங்கள் முக்கிய கடமைகளுள் ஒன்றாகக் கருதி இச்சீட்டினைத் தவறாது ஆதரிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

### விலாசம்

"C. அருணாசல முதலியார் காரியதரிசி செங்குந்தர் பாடசாலைக் கட்டிட தர்மநிதிச் சீட்டு நிலயம். பிள்ளையார் பாளையம் காஞ்சீபுரம்" என்ற விலாசத்துக்கே பணத்தையும் அடிச் சீட்டுக்களையும் அனுப்பவேண்டும்.

இங்ஙனம்,
S. லக்ஷ்மணன்,
C. அருணாசலம்,
காரியதரிசிகள்.

---

கோழிகள் குஞ்சு பொரிப்பதற்காக மின்சாரத்தை உபயோகப் படுத்துவதினால் ஒரு பெட்டைக் கோழி மூன்று மாதத்திய அடை காக்குங் காலத்தில் ஒரு மின்சாரக் கோழியால் ஐந்து லக்ஷம் குஞ்சுகள் பொரிக்கக் கூடுமென்று தத்துவ சாஸ்திரிகள் ஆராய்ச்சியின் பயனாக முடிவு கட்டியிருக்கிறார்கள். எடின்பரோ எனும் தேசத்திற்கு அருகாமையிலுள்ள கிராஸ்டால் பைன் எனும் ஊரில் ஒரு தொழுவத்திலுள்ள ஒரு மின்சார அடை காக்கும் இயந்திரம் மூன்று லக்ஷம் முட்டைகள் கொள்ளுவதற் கேற்றவாறு அமைந்திருக்கிற தென்றும், அடுத்த கோடை காலத்திற்குள் ஐந்து லக்ஷம் முட்டைகளைக் குஞ்சு பொரித்து விடுமென்றும் லண்டனிலிருந்து வரும் ஒரு தினசரி பத்திரிகையில் கண்டிருக்கிறது. அந்த குஞ்சு பொரிக்கும் இயந்திரத்தில் இயற்கையாக ஒரு அடைகாக்கும் கோழியானது காலக்கிரமமாக எப்படி அதனுடைய இறக்கைகளும் கால்களும் இருக்கின்ற நிலை எல்லா முட்டைகளுக்கும் சூடேறும் வண்ணம் மாற்றிக் கொள்ளுகிறதோ அது போல அந்த முட்டைகளினுடைய கோணங்களை மாற்றிக் கொள்ளுவதற்கு ஏற்றவாறு அமைப்பு உண்டாகியிருக்கிறது.

சிக்கோஸ்லா வாக்கியா எனும் ஊரிலுள்ள ஒரு ரசாயன சாலையில் 300 ஆட்கள் 8 வருடமாக ரேடியம் எனும் ஒரு (உலோகத்தை) செய்வதற்காக வேலை செய்ததின் பயனாக திரவ வளவில் ஒரே ஒரு அவுன்ஸ் அளவுள்ள ரேடியத்தை உண்டாக்கினார்கள். ஆனாலும் அந்த ஒரு அவுன்ஸின் விலை சற்றேறக் குறைய 400,000 பவுன் ஆகிறது.

இது வரையில் அழகின் குறியாகக் கருதப்பட்ட நீண்ட கண் ரப்பை மயிர்கள் ஜப்பானிய வைத்தியரொருவரால் தேக அசௌக்கியத்திற்கு அறி குறி என்று அநேக உதாரணங்களால் கண்டு பிடிக்கப்பட்டது. இரண்டு வருடம் பிரத்தியக்ஷமாய் பார்த்த அந்த வைத்தியர் தேக அசௌக்கியமுள்ள குழந்தைகளுக்கு அநேகமாக நீண்ட ரப்பை மயிர்கள் இருப்பதாகக் கண்டார். அந்த வைத்தியர் க்ஷய ரோகத்தினால் பீடிக்கப்பட்ட குழந்தைகளின் ரப்பை மயிர்கள் சௌக்கியமுள்ள குழந்தைகளின் ரப்பை மயிர்களைப் போல இரட்டைப் பங்கு நீண்டதாக இருப்பதைப் பார்த்ததாக லண்டனிலிருந்துவரும் தினசரி பத்திரிகை ஒன்றில் எழுதியிருக்கிறது. தேக சௌக்கியமுள்ள குழந்தைகளுக்கு பிறந்து ஒரு வருஷமான பிறகு ரப்பை மயிர்கள் எட்டில் ஒரு பங்கு நீளமாகவும் கண்டமாலையுள்ள குழந்தைகளுக்கு இதைப் போல் இரட்டித்த அளவுள்ள புருவமயிர் இருந்தது. மேலே சொல்லப்பட்ட விஷயத்திற்குக் காரணம் ஒன்றும் கொடுக்கப்படவில்லை. அது குழந்தைகளினுடைய தேக சௌக்கியத்தை யறிய ஒரு சரியான சாதனம் என்பது ஒப்புக் கொள்ளப்படவில்லை.

---

### சைதாப்பேட்டை செங்குந்த கோவாபரேடிவ் கிரேடிட் சோசைடி லிமிடெட் G 619

ஷை சங்கத்தின் மகாசபைக் கூட்டம் சைதாப்பேட்டை ஜோனிஸ் ரோட் 76 நெ. கிரகத்தில் 21-12-30 ஆதிவாரம் பிற்பகல் 2 மணிக்கு ம-ா-ா-ஸ்ரீ T. பஞ்சாட்சர முதலியார் தலைமையின் கீழ் கூடியது. ஸ்ரீமான் ராவ்பகதூர் ஜெ. செல்வரங்கராஜீ அவர்களும் மற்றும் சில கனவான்களும் விஜயம் செய்திருந்தார்கள். சங்கத்தின் நிர்வாக சபையினால் கொண்டுவரப்பட்ட சில தீர்மானங்களும் சொசைடி சட்டங்களில் சில திருத்தங்களும் அங்கீகாரம் செய்யப்பட்டன. 1929-30 கோவாபரேடிவ் வருஷத்திய ஆடிட் சர்டிபிகேட் சூபர்வைசர் சேஷகிரி ராவ் அவர்களால் வாசிக்கப்பட்டபின் கனம் ஜெ. செல்வரங்க ராஜீ அவர்கள் பொது ஜனங்களுக்கு ஷை சர்டிபிகேட்டிலுள்ள விஷயங்களை விரித்துப் பேசினார். கடைசியாக இன்ஸ்பெக்டர் ச. ராமச்சந்திர அய்யர் அவர்கள் ஐக்கிய நாணய சங்கங்களின் உபயோகங்களைப்

பற்றி வெகு விரிவாக பேசியபின் சிற்றுண்டி தாம்பூலம் வழங்கப்பட்டு கூட்டம் இனிது கலைந்தது.

எம். நடேசன், சேக்ரிடேரி.

---

ஏழாவதாண்டு

## திருப்பவனி விலாசம்

வளவலம் ஸ்ரீ ஏகசக்கர நாருயண பெருமாளுக்கு ஷை யூர் ஆ. கு. வயித்தியலிங்க முதலியார் கைங்கரியத்தில் நாளது தைமீ 2உ மாலை $4\frac{1}{2}$ மணிக்கு திருமஞ்சனம் செய்து இரவு 9-மணிக்கு கெருடசேர்வை திருவிழா காக்ஷியும் நடந்தேரியது.

சு. வேங்கிடாசல முதலியார், வளவலம்.

---

கொளும்பு செங்குந்த வர்த்தக சங்கத்தாரும் ஸ்ரீமான் இ. பழனியாண்டி முதலியார் அவர்களின் தலைமையில் கூடி மௌலாஞ மஹம்மதலி அவர்களின் ஆத்மா சாந்தி யடைய பிரார்த்திக்கப்பட்டு கூட்டம் கலைந்தது. இந்த கூட்டத்தில் சௌராஷ்டிர வர்த்தகர்களும் தங்கள் கடைகளையும் மூடி வருத்தந் தெரிவித்தார்கள். இந்த விஷயத்தில் சகல ஹிந்துமுஸ்லீம்களும் ஒற்றுமையாக நடந்து கொண்டது பாராட்டத்தக்கது.

K. சுந்தரேச முதலியார்,
காரியதரிசி.

---

## திருஞான சம்பந்தர் ஸ்கூல்
## வீரவ நல்லூர்

12-12-30 வெள்ளிக்கிழமை யன்று ஷை ஸ்கூல் தலைமை உபாத்தியாயர் திரு. ஆதிநாராயணபிள்ளை உதவி உபாத்தியாயர் திரு. பலவேசம் பிள்ளை இருவரும் ஷை ஸ்கூல் மாணவர்களை அழைத்துக் கொண்டு போய் தாம்பிரவருணி நதியிலிருந்து கன்னடியன் கால்பிரியு மிடத்தையும் கன்னடியன் அணைக்கட்டுகளையும் மணிமுத்தாநதி தாம்பிரவருணியுடன் வந்து சேருமிடத்தையும் காண்பித்து அம்பா சமுத்திரம் டவுனுக்கு வந்து சந்தைமார்க்கட்டுகளைக் காண்பித்து முன்சீப் கோர்டு, தாலுகாக் கச்சேரி, மாஜீஸ்திரேட்டுக் கோர்டு, சப்சயில் ஸ்கூல், டிப்டி இன்ஸ்பெக்டரவர்களாபீஸ், தீர்த்தபதி ஆஸ்பத்திரி முதலானவைகளையும் ஸர்க்காட்டு ஜமீன், அவ்வூர் மலைப் பொத்தையிலுள்ள சாஸ்தாங்கோவில் முதலானவைகளையும் காட்டி முடிந்த பின் இரவு $8\frac{1}{2}$ மணி வண்டிக்குத் திரும்பி வந்து ஷை ஸ்கூலில் மாக்ஷிமை தங்கிய சக்கரவர்த்தியவர்கள் திருவுருவப் படத்திற்கு பூமாலை அணிவித்து அலங்காரம் செய்து ஷை யூர் செங்குந்தர் பஜனைக் கோஷ்டியாரால் இன்னிசைக் கருவிகளுடன் கீதங்கள் பாடப்பட்டுப் பின் கன்னடியன்கால் ஷை அணை யேற்பட்ட காரணங்களையும், அதனுல் ஜனங்களுக்கேற்பட்டுள்ள நன்மைகளையும், தலைமையுபாத்தியாயர் ஆதிநாராயண பிள்ளையவர்களால் விரிவாய் எடுத்துரைத்தும், பார்த்து வந்த ஒவ்வொரு ஆபீஸ்களின் விவரங்களையும் சுருக்கமாகச் சொல்லி முடிக்கப்பட்ட பின் ஷை ஸ்கூல் மானேஜர் திரு. ஆ. மு. ஆறுமுக முதலியாரவர்களால் இராஜாங்கத்தார் இந்தியாவுக்குக் கல்வி அபிவிருத்தி விஷயமாய் செய்து வரும் பேருதவியின் பெருமையைப் பிள்ளைகளறிந்து கொள்ளும்படி தெளிவுபட இனிய மொழியால் பேசி முடித்து ஷை ஸ்கூல் மாணவர்களால் தேவாரம் இராஜ வாழ்த்துப் பாடல்கள் பாடியபின் ஷை மானேஜரவர்களால் மாணவர்களுக்கும் மற்றுமுள்ள சிறுவர் சிறுமிகளுக்கும் பழம், லட்டு முதலிய தின்பண்டங்கள் அளிக்கப்பட்டன. அடுத்தபடியாக குழுமி யிருந்தோரனைவருக்கும் சந்தனம் தாம்பூலம் வழங்கப் பட்டு சக்கரவர்த்தியவர்களின் மகுடாபிஷேக தினத்தை மங்களமாகக் கொண்டாடி வந்பின் உபசாரத்துடன் 11 மணிக்குக் கூட்டங் கலையப்பெற்றது.

ஆ. மு. ஆறுமுக முதலியார், உபதலைவர்.


# நாவல்கள்! கதைப் புத்தகங்கள்!!

தற்கால நாகரீகத்துக் கேற்றவாறு, உயர்தர நாவல்களும், துப்பறியும் நாவல்களும், படிக்கப் படிக்க திகட்டாத இன்பத்தைத் தரும் அற்புத நவீன கதைகளும், மற்றும், வைத்தியம், மாந்திரீகம், ஜோசியம் முதலிய எல்லாவித புத்தகங்களும் சப்ளை செய்யப்படும்.

செங்குந்த மித்திரன் புத்தகசாலை,
செங்குந்த மித்திரன் ஆபீஸ்
கீழ்ப்பாக்கம் சென்னை.







## மாதரொழுக்கக் கும்மி

[திரு. வை. ச. இராமலிங்க முதலியார் அவர்கள், கண்டாச்சிபுரம்.]

கும்மியடிப் பெண்காள் கும்மியடி குல
மாதரொழுக்கத்தைக் கும்மியதாய்
செம்மையாய்ப் பாடிட வைங்கரனுருஞ்
செல்வ விநாயகன் காப்பாமே (1)

ஐங்கரன் கந்த னடிமலர் போற்றியே
அன்புடன் மித்திரன் வாழ்கவென்று
செங்குந்த மாதர்க ளெல்லோரும்கூடி
சேர்ந்து கும்மியடியுங்கடி (2)

சோலாமொன்ருக மாதரெலாங்கூடி
செங்குந்தமித்திரற் கையாண்டு
கூறலாம் வந்தென்றே மிகவாழ்த்திக்
குனிந்து கும்மி யடியுங்கடி (3)

குனியுங்கனச்ச மடகாண் பயிர்ப்பெனுங்
குணங்களோர் நாலதும் வேலியதாய்
விளையுங்கள் கற்பெனு மங்கள நான்தனை
மாட்சியுடன் காப்பீரில்லறத்தை (4)

இல்லற மல்லற நல்லற மன்றென்று
ஏந்திழையீ ரௌவை கூறுதலால்
சொல்லுங் குணங்கல்வி பொறைநிறைவாய் வாய்க்
[தோளைச்
சொர்த கணவனுய்க் கொள்ளுங்கடி (5)

கணவன்சொல் வார்த்தையை மீருதே-கடுங்
கோபத்தினுல் மிகச் சீருதே
குணமாகும் பெண்கட் கழகெதிர் மாற்றங்
கூருதிருத்தலாங் கோதையரே ! (6)

கோதையர்க்குத் தெய்வங் கணவனிங்கல்லாது
கூறவேறுண்டோ வுலகினிலே
பேதமென் றெண்ணுமல் பர்த்தாவைத் தெய்வமாய்
பேணுங்கடி கலங்காதுங்கடி (7)

காணுங் கடிமக்கள் விருத்தி யுலகினில்
கணவனை யன்புடன் கூடியேதான்
பேணுங்கடி மாமன் மாமியை நாத்தியை
பிரியமுள்ள சுற்றமண்டினோரை (8)

அண்டை யயல்வீடு செல்லாதீர் சும்மா
ஆடவரெதிரே நில்லாதீர்
சண்டைச் சச்சரவு செய்யாதீர் வெகு
சரசமாய் வாழுங்கள் பேதையரே (9)

பேதமை யென்பது மாதர்க்கணிகலம்
பேசுமிந் நீதியைத் தேருங்கடி
காதலாய்த் துணிமணி நகைகளைப் போடென்று
கணவனை யடிக்கடி வருத்தாதீர் (10)

வருத்துக்குத் தக்க செலவுகள் செய்துமே
வளர்ப்பீர்க ளில்லற மோங்கிடவே
திருத்தமுடன் செட்டாய் குறைவுகள் வாராமல்
செய்குவீர் வாழ்க்கைச் சிறந்திடவே (11)

சிறந்திடு நல்விருந் தோம்பி வருகின்ற
சிவனடியார்க் கன்னஞ் செய்தளித்து
அறந்தரு மம்மையார் பார்வதி பாதத்தை
யனுதினம் போற்றித் துதியுங்கடி (12)

துதியுங்கடி பதிதெய்வ மென்று நம்பி
தோணுமடி பல நன்மைகளும்
மதியிது வாகுநன் மங்கையர் சொல்லுக்கு
வான்மழை பெய்யெனிற் பெய்யுமடி (13)

பெய்வளை மாதர்காள் கொண்ட கணவனின்
பேரதைக் கூறுதீர் பாவமடி
கைவளைகாலாழி மூக்குத்தி மாங்கல்யம்
கழட்டி யிரவல் கொடுக்காதீர் (14)

இரவினிற் கணவன் நித்திரை கொண்டபின்
இன்பமாய் நீங்களுந் தானுறங்கி
விரைவினிலவர்க்கு முன்னர் துயில்நீங்கி
விடியற்காலையிலே யெழுந்து (15)

எழுந்தவுடன் கைகாலலம்பி வெகு
இன்புமாய் நெற்றியில் நீறணிந்து
செழுமையாய் முற்றத்தில் சாணந் தெளித்துமே
தீட்டுவீர் கோலத்தைச் சித்திரமாய் (16)

சித்திர வேல்விழி மாதர்களா ! வீட்டைச்
செம்மையாய் பெருக்கிச் சுத்தஞ்செய்து
பைத்தான சமையல் பாண்டங்களையெல்லாம்
பளப்பளப்பாக விளக்கியபின் (17)

விளக்கமுற மஞ்சள் முகத்திலும் மெய்யிலும்
மேன்மையுடன் பூசி நீரில் மூழ்கி
களக்கமில்லாமலே யாடைகள் புனைந்து
கவினுகக் குங்குமப் பொட்டுமிட்டு (19)

இட்டமுடனட்டில் தான் புகுந்து அங்கே
ஏற்றதோர் சட்கவை புண்டிகளை
திட்டமுடன் செய்து கணவனை புண்பிப்பீர்
சேயிழையீர் பெற்ற தாய்போல (19)

தாயுக்குப்பின் தாரம் சவரக்ஷணைக்கென்பர்
சாற்றுமிந் நீதியைப் போற்றுங்கடி
சேயுக்குத் தாய்படு மக்களை போலவே
செம்மையர்க் கணவனை யாதரிப்பீர் (20)

(தொடரும்)

## அருட் குழவி

[திரு. ஜெ. தங்கவேல்.]

கடற்கரை யோரத்திலே
கண்டேனொரு காட்சி
கண்டாங்கதை யுரைக்க
கவியாலு மாகாதடி.

நிச்சப்தமான கரை,
நிர்மலமான கடல்,
நேர்மையாய் வானத்திலே
நிமிர்ந்தது முழுமதியும்.

அக்கரை யானந்தமாய்
அழகென ஓர் குழவி;
ஆற்றலும் பெற்றிலெனே
அனைத்துங் கூறிடவே.

சின்னஞ் சிறுவயது,
சிறந்த பேருருவம்;
சிவன் செதுக்கினனோ ?
செப்புந் திறமல்லவே.

சுந்தர வதனமடி;
சந்திரன் நேரன்றடி;
சுவர்ண வடிவேயோ
சோதிப் பிழம்பேயோ.

பவளமதாமடி,
பற்களு முத்தங்களே,
குவளைக் கண்களடி,
குனி புருவமடி.

புன்னகை பூத்தமுகம்,
நன்னலங் காய்த்த முகம்,
புனிதம் பழுத்தமுகம்,
பொலிந்து வீசிற்றடி.

பூரண ஆற்றலடி,
புகழுஞ் சாந்தமடி
பொங்கித் ததும்பிற்றடி
தங்கித் தழைத்ததடி.

மதிக்கும் மாசுண்டடி;
கதிர்க்குங் காருண்டடி;
மதிப் பழைக்கு மந்த
மாசொன்றுங் காணேனடி.

மாலையிற் மாண்புறதன் நகையே எளியேன்
மனங் கவர்ந்ததடி;
நங்கையே மழலை மென் மொழிக்கே புழையுடைக்
குழலு மீடல்லவே.

பக்கவில் களங்க மற்றதடி, குழவி
கடவுளென் பேனடி;
நங்கையே விளக்கம் பெற்றதடி, அதனை
வேண்டித் தொழுவேனடி.

அமர்ந்தது கோயி லெனக் கேனோ? குளத்தொடு
கோபுரந் தானேனோ?
அதனழ(கு) கோடி நலன் வருமே குழந்தைக்
கோலத்தைப் போற்றிடினே.

மிகவே பசியை யாற்றுமடி; அதுவே
பாவமும் போக்குமடி;
அங்கங்கள் பிணிக்கு மாமருந்தே; நங்கையது
பிழை தவிர்க்குமடி.

அங்குற்ற கோபக் குறியுடையார் கண்டிடிற்
கோப மாற்றுவாரடி;
அதுதான் பாபச் செய லெண்ணுவார் பார்த்திடிற்
பரிசுத்த மாவாரடி.

இடைகாண் குழந்தைத் தன்மை பெற்றோர் எவரும்
குணக் குன்றங்க ளென்பார்;
வில்லெனக் குழந்தையுடன் பழகிற் குணமன
அழகே யடைவாரடி.


அரிதாம் சோக மொழிக்குமடி அவ்வுரு
தாகந் தணிக்குமடி;
நறுமணம் சுவைக் கனியதடி எவர்க்கும்
சுக மளிக்குமடி.

அதனொடு அகமுருக்குமடி அன்பினால்
அனல் மெழுகெனவே;
பொலிவுடன் இகபரந் தாவே ஏதுவாய்
இலகுமின்பமடி.

தினகரக் சத்திய நாதனருள் சித்தத்திற்
சுத்தியார் பெற்றதடி;
முகத்தில் இத்தகி கண்டதனை மனங்குழைந்(து)
இன்பம் பருகிடடி.

---






1. புருஷனும் பெண்சாதியும் சல்லாபமாக வார்த்தையாடும்போது நடந்த சம்பாஷணை.

பெண்சாதி:—நீங்கள் எந்த சங்கதியும் என்னிடத்தில் யோசிக்கிறதில்லையே.

புருஷன்:—நீ என்னை பேசாவிட்டால் தானே.

2. இரண்டு சிநேகிதர் வெகு நாட்களாக பிரிந்து மீண்டும் சந்தித்தவுடன் குடும்ப க்ஷேமங்களை விசாரித்த பிறகு ஒருவர் கேட்டதாவது 'நீயோ உன்னுடைய அண்ணனோ இறந்து விட்டதாகக் கேள்விப்பட்டேன். இறந்தவர் யாரென்று தெரியவில்லை.'

3. தமிழ் செவ்வையாகத் தெரியாத ஒருவன் ட்ராம் வண்டியில் போய்க் கொண்டிருந்தான். திடீரென்று, 'விழுந்து விட்டான்! விழுந்து விட்டான்!!' என்று கத்தினான். டிராம் ஓட்டுகிறவன் பயந்து உடனே வண்டியை நிறுத்தினான். இந்த ஆசாமி கீழே இறங்கி ஓடிப்போய் தன் கையிலிருந்து விழுந்த டிக்கட்டை எடுத்து திரும்பி வந்து வண்டியிலேறினான். வண்டியிலுள்ளவர்களெல்லாம் நகைத்தார்கள்.

4. ஒரு வியாபாரி தனக்கு மெட்றிகுலேஷன் பாஸ் செய்த ஒரு குமாஸ்தா வேண்டுமென்று பத்திரிகைளில் விளம்பரம் செய்திருந்தான். ஒரு வாலிபன் மனு கொடுத்தான். அவனை நேரில் வருவித்து என்ன பரீக்ஷை செய்திருக்கிறாய்' என்று கேட்டான். 'நான் பி. ஏ. பாஸ் செய்தேன்' என்றான் வாலிபன். வியாபாரி சொன்னதாவது 'நீ மெட்றிகுலேஷன் பாஸ் பண்ணவில்லை. பி. ஏ. பாஸ் பண்ணிருக்கிறதாகச் சொல்லுகிறாய். எனக்கு நீ வேலைக்கு வேண்டியதில்லை, என்று வாலிபனை அனுப்பி விட்டான்.

5. ஆகாய விமான விபத்தில் ஒருவன் கீழே விழும்போது ஒரு மரத்தின் உச்சியைப் பிடித்து மெதுவாக இரங்கினான். அப்போது ஒரு வழிப்போக்கன் அவனைப் பார்த்து, ஆச்சரியப்பட்டு "ஐயா எப்படி மரத்தில் ஏறாமல் கீழே வருகிறாய்' என்று கேட்டான்.

6. சில திருடர்கள் மடையனைப்போல் பாசாங்கு செய்து கொண்டிருந்த ஒருவனிடம் தாரை ஒன்றைக் கொடுத்து யாராகிலும் வருகிற சப்தம் கேட்டால் "ஊது" என்று சொன்னார்கள். இவர்கள் திருடப்போன வீட்டில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அது தங்கள் திருட்டுத் தொழிலுக்குப் பாதகமா யிருக்கிறதாகையால் அவனிடம் அதை "ஊது" என்றார்கள். அவன் தாரையை எடுத்து ஊதி வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த எல்லாரையும் கிளப்பி விட்டான்.

7. ஒரு பள்ளிக் கூடத்தில் ஏழாவது பாரம் படித்து வருடாந்தர பரீட்சையில் தேறாத ஒரு வாலிபனை அவன் தந்தையார் இரண்டு மாத கோடைகால விடுமுறை கழித்து மற்றொரு பாடசாலையில் சென்றார். அப்பாடசாலையின் தலைமை உபாத்தியாயர் அவருக்கும் அப்பையனுக்கும் தக்க ஆசனம் கொடுத்து அப்பையனைப் பார்த்து ஒரு தமிழ் வாக்கியத்திற்கு எழுவாய்ப் பயனிலை அறிந்து சொல்ல முடியுமா என்று கேட்க அதற்கு தெரியுமென்று ஒப்புக்கொண்டான். பிறகு அத்தலைமை ஆசிரியர் "நீ போ" என்ற வாக்கியத்திற்கு எழுவாய் பயனிலை என்ன என்று கேட்டபோது தெரியாமல் சும்மாவிருக்க அவர் நீ எழுவாய் போ பயனிலை என்றார்.

8. கவனக் குறைவுள்ள ஒரு பிரபு ஒரு புத்தகத்தை ஏழு முறை வாசித்துவிட்டு அதைக் குறித்து அபிப்பிராயம் சொன்னதாவது:—"அந்த புத்தகத்தின் நூலாசிரியர் ஒரு விஷயத்தை திருப்பி திருப்பி எழுதி யிருக்கிறார்" என்றாராம். இவர் கவனக் குறைவை நூலாசிரியர் மேல் சுமத்தினார்.

9. ஒரு திண்ணைப் பள்ளிக் கூடத்தில் "4 ஆயாக்கு $\frac{1}{2}$ படி, 8 ஆயாக்கு 1 படி" என்று பிள்ளைகள் வாசித்துக் கொண்டிருந்ததைக் கேட்ட ஒருவன் "என்ன ஐயா பிள்ளைகள் இப்படி உச்சரிக்கிறதே" என்று உபாத்தியாயரைக் கேட்டானும். அது அவர்கள் "பயக்கம்" என்று உபாத்தியாயர் பதில் சொன்னாராம்.

10. உடன் பிறந்தவர்களாகிய மூதேவிக்கும் லக்ஷ்மிக்கும் தங்களில் யார் அழகு என்று வாக்குவாதம் உண்டாகி மத்தியஸ்தன் ஒருவனைக் கேட்டதற்கு இவர்களுக்கு பயந்து ஒரு யுக்தி செய்தான். இவர்களிருவரையும் நடக்கும்படி சொன்னான். அவர்கள் அப்படியே நடந்து காட்டினார்கள். "மூதேவி போகும் போது அழகு" என்றும் "லக்ஷ்மி வரும்போது அழகு என்றும்" சமரசமாய் தீர்மானம் சொல்லி அவர்களிருவரையும் சமாதானம் செய்து விட்டான்.




(1) The first duty of every man in the world is to find his true master, and for his own good submit to him, and to find his true inferior, and for that inferior's good conquer him. —Ruskin.

உலகத்தில் ஒவ்வொருவனுடைய முதல் வேலையாவது:—தனக்கேற்ற ஆசானைக் கண்டு பிடித்துத் தன்னுடைய நன்மைகளுக்காக அவ்வாசானுக்குக் கீழ்ப்படிதலும், தன் சிடனைக் கண்டு பிடித்து அவனுடைய நன்மைகளுக்காக அவனைத் தனக்குள் வைத்துக் கொள்ளலுமாம். —ரஸ்கின்.

(2) Life every man holds dear, but the dear man holds honour far more precious dear than life. —Shakespeare.

ஒவ்வொரு மனிதனும் உயிரை வெல்லமாக மதிக்கிறான். ஆனால் மனிதரிற் சிறந்தவன் தன்னுடைய கௌரவத்தை—தன்னுடைய மேன்மையை தன்னுடைய உயிரினும் சிறந்ததாக மதிக்கிறான். —ஷேக்ஸ்பியர்.

(3) He that hath the steer-age of my course, Direct my sail! —Shakespeare.

எனக்கு வழிக் காட்டியாய் விளங்குகின்றவரே! என் கப்பலைச் சரியான வழியில் திருப்புவீராக. —ஷேக்ஸ்பியர்

(4) When I tell him, he hates flatterers, He says, he does, being then most flattered.

முகஸ்துதி செய்பவர்களை அவன் வெறுக்கிறான் என்று நான் அவனிடம் சொல்லும் போது, (அந்த ஒரு வார்த்தையிலேயே) அவன் நன்றாக முகஸ்துதியில் ஈடு பட்டவனாய், 'ஆமாம்' என்று சொல்லுகிறான்.

(5) Men's judgments are a parcel of their fortunes. —Shakespeare.

சீர் தூக்கிப் பார்க்கும் தன்மை மனிதனுடைய சம்பத்தின் ஒரு பாகமாகும். —ஷேக்ஸ்பியர்.

(6) The purest treasure mortal times afford, is spotless reputation. —Shakespeare.

குற்றமற்ற கீர்த்தியே, அழியக் கூடிய வாழ்வின் சுத்தமான சொத்தாகும். —ஷேக்ஸ்பியர்.

(7) When beggars die there are no connects seen; The heavens themselves blaze forth the death of princes.

வறிஞர்கள் இறக்கும் போது எந்தவால் நக்ஷத்திரமும் தோன்றுவதில்லை. அதிபதிகள் இறக்கும் போது ஆகாயமே சுடர் விட்டெரிகின்றது.

(8) There was never yet philosopher that could endure the tooth-ache patiently. --Shakespeare.

பல் நோவைக் கூடச் சாந்தமாகச் சகிக்கும் அறிவாளி—தத்துவஞானி—இது வரையில் கிடையாது. —ஷேக்ஸ்பியர்.

(9) Silence is the perfectest herald of Joy; I were but little happy; if I could say how much. —Shakespeare.

மௌனம் சந்தோஷத்திற்குப் பரிபூரணமான தூதன். நான் எவ்வளவு சந்தோஷம் அனுபவித்தேன் என்று சொல்லும் அளவிலேயே அது குறைந்து விடுகின்றது. —ஷேக்ஸ்பியர்.

(10) Our affections are our life. We live by these. They supply our warmth. —Channing.

அபிமானங்களே நம் ஜீவாதாரமாயிருக்கின்றன. அவைகளே நம் வாழ் நாளுக்கு ஒரு ஆதரசம் கொடுக்கின்றவை. —சானிங்.

(தொடரும்)

R. S. Swamiappan,
Municipal High School, Erode



# தொழில் பகுதி

[திரு .S. பாலசுந்தர முதலியார் அவர்கள் நெய்தற் றொழிலாசிரியர்]

## நாடா நெய்தல்

நாகரீகம் விஞ்சிய இக்காலத்தில் நம் நாட்டு நாகரீகம் நகைப்புக் கிடமாகவே யிருக்கிறது. மேல் நாட்டில் நாகரீகம் விருத்தி அடைந்திருக்கிற தென்றால் அவர்கள் கைத் தொழிலில் விருத்தி யடைந்திருக்கிறார்களென்பதே காரணமாகும். நம் நாட்டில் நாகரீக மடைந்தோர் எனப்படுவோர், அழகுற ஆடை ஆபரண அலங்காரங்கள் செய்து கொள்வோர்களாகவே யிருக்கிறார்கள். மேல் நாட்டாரை உன்னத நிலைமைக்குக் கொணர்ந்து நிறுத்திய அவர்கள் பொன்னே போல் போற்றி விருத்தி செய்து, புதிய புதிய முறைகளில் செய்யும் கைத்தொழில்களை, நம் நாட்டு நாகரீகர் கவனிக்காது இருப்பதோடு, தொன்று தொட்டு பழைய முறைகளிலேனும் நெய்யும் தொழில் செய்வோரைக் கண்டால் ஏனனம் செய்து அவர்களை நாகரீகமற்றவரென ஒதுக்கி அவர்களுக்கும் அதில் வெறுப்பை யுண்டாக்குவதால் அத்தொழிலாளரின் மக்களுக்கு அவர்கள் பெரியோர்கள் செய்யும் தொழில்களில் வெறுப்பை புண்டாக்கித் தம்போல் போலி நாகரீகர்களாக்குகிறார்கள். இவ்வுண்மைக்கு என் அனுபவத்தில் கண்ட திருஷ்டாந்தத்தைக் கூறுகிறேன். யான் பாடசாலைக் கல்வி பயிலுங்காலத்தில் ஆங்கில பாடத்தில் ஆசிரியர் ஷட்டில் (Shutle)=நாடா என்னும் வார்த்தை வர அதை நெசவில் உபயோகப்படும் ஒரு கருவி என்று விளக்கிக் காட்டி பிரத்யக்ஷமாயும் காட்ட எண்ணியவராய் நெசவாளர் மக்கள் யாராவதிருந்தால் அதைக் கொண்டு வரும்படி கேட்டுக் கொண்டார். என்னோடு இன்னும் சிலர் நம்மவர் பிள்ளைகள் வாசித்தும் தாம் நெசவாளர் மக்களெனச் சொல்லிக் கொள்ள வெட்கி சும்மா இருந்துவிடக் கண்ட யான் எழுந்து கொண்டுவருதாய் ஒப்புக் கொண்டு கொணர்ந்து காட்ட அப்பள்ளியில் வாசித்த என் வகுப்பைத் தவிற மற்ற வகுப்பு நம்மவர் மக்கள் சிலரால் மதிக்கப்பட்டேன். காரணம் நம் நாட்டார் கைத்தொழிலாளர்களைக் கேவலமாய் நினைப்பதே யாகும். அப்படியாயின் கல்வி பயின்றோர் எனப்பட்டு இப்போலி நாகரீகத்தில் மயங்கி சொற்ப வருவாயாயினும் எழுத்தாளர் (குமாஸ்தா)களாக யிருக்க விரும்பும் நம் நாட்டாரால் எவ்விதம் தொழில் முறைகள் விருத்தியடையும். அன்பர்களே இதற்கு இன்னோர் உதாரணமும் என்னனுபவத்தில் கண்டதைக் கூறுகிறேன். சமீபத்தில் யான் சென்னைக்குச் சென்றிருந்த காலத்தில் எனக்குப் பந்துவும் நண்பருமான ஒருவரைப் போய்ப் பார்த்தேன். அவர் குடியிருந்த வீட்டில் மற்றப் பகுதியில் வசித்தோர் வேறு வகுப்பார். அவர் என் க்ஷேமங்களை விசாரித்துப் பேசிக் கொண்டிருந்த காலத்து என் உத்தியோக க்ஷேமங்களையும் பேச நேரிட்டது. அவற்றிடையே என் தொழிலாகிய நெசவுத் தொழில் சம்பந்தமாய் இரண்டொரு வார்த்தைகள் வர என் நண்பர் அந்த வார்த்தைகள் பேசவேண்டா மென்றும், அதனால் மற்றவர்கள் தம்மை நெசவாளர் வகுப்பாரென கேவலமாய் நினைப்பார்களெனவும் குறிப்பித்து அச்சம்பாஷணையை நிறுத்திக் கொள்ளச் செய்தார். எனக்கு அது விஷயமாய் வியப்புண்டாகியும், அவருக்குக் கஷ்டமெதற் கென்று வேறு விஷயமாய் சற்று சம்பாஷித்துத் திரும்பினேன். இது தவிர நம்நாட்டின் கைத்தொழிலைப் பற்றிக் கொண்டிருக்கும் வெறுப்பு எண்ணிலடங்கா. கல்வி பயிலும் மாணவர்களில் அநேகர் பள்ளியில் கற்பிக்கப்படும் தொழில் பாடத்தைக் கருத்தோடு செய்வதில்லை என்பதை மாணவனாய் இருந்த அனுபவத்தாலும் கண்டிருக்கிறேன். யாவற்றிற்கும் காரணம் நம் நாட்டு மக்கள் தங்கள் செல்வ நிலையும், நாகரீகமும், தொழில் முறைகள் சீர்திருத்தத்தாலும், விருத்தியாலுமே என்பதைக் கண்டு தெளியாமலும், மேல் நாட்டார் எவ்விதம் உன்னத நிலைமைக்கு வந்துளார் என்பதை சிந்தித்துப் பார்க்காமலும் இருப்பதே யாகும்.


சகோதரர்களே, உத்தியோக மொன்றையே விரும்பி எழுத்தாளர்களாக விரும்புவதால் நாம் வாசித்த சாஸ்திரீய விஷயங்கள் (Science முதலியவை) 'பள்ளிக் கணக்குப் புள்ளிக்கு உதவாது' என்றபடி நமக்குப் பிரயோசன மற்றுப் போவதோடு தேகப் பயிற்சியுமின்றி நமது தேக பலமும் குன்றி விடுகிறது. தவிர கௌரவத்திற்காக நம் வீட்டுப் பெண்களையும் 'புலியைப் பார்த்துப் பூனை சூடுண்டதைப் போல்' நமக்குச் சொற்ப வருவாயே யாயினும் கஷ்டப்பட்டுக் கொண்டு வீட்டுச் சிறு காரியங்களாகிய கூட்டல், மெழுகல், பாத்திரம் தேய்த்தல், நீர் திரட்டல் முதலியவற்றிற்கும் ஆளமர்த்தித் தேகப் பயிற்சிக்கு இடமின்றி செய்வதால், அவர்கள் தேகபலம் கெட்டு பிரசவ காலத்தில் மிகுதியும் சிரமப்பட்டுப் புனர்ஜென்ம மெடுக்கும்படி செய்து விடுகிறார்கள். தொழிலாளர் வீடுகளிலோ பெண்டு பிள்ளைகள் முதல் சகலரும் வேலை செய்வதால் தக்க தேகப் பயிற்சி புண்டாவதால் தேக பலமுடையவர்களாயு மிருக்கின்றனர்.

அன்பர்களே, இப்படிச் சொல்வதால் யான் கல்விபயில வேண்டாம் என்று சொல்வதாய்க் கொள்ளவேண்டாம். நிரம்பக் கல்விகற்று அவ்வவர்கள் இனத்தொழிலையோ, அல்லது தமக்குப் பிடித்த வேறெந்தத் துறையிலாவது தொழில் முறைகளைக் கற்று அயல் நாட்டார் செய்யும் முறைகளோடு ஒப்பிட்டுச் சீர்தூக்கி, உயர்ந்த முறைகளைக் கையாடி அதை விருத்தி செய்து நம் நாட்டு மக்களுக்குக் கற்


பித்து நமது தேசத்திய செல்வ நிலைமையையும், நம் நாட்டு பெருமையையும் விருத்தி செய்யுமாறு வேண்டுகிறேன்.

உத்தியோக முறையில் இருக்கும் அன்பர்களே யாயினும் தாங்கள் ஓய்வு காலங்களில் தங்கள் மனைவி மக்களோடு புறக்கடையில் தோட்ட மமைத்துப் பேணுதல், ராட்டினம் சுற்றல் (நூற்றல்) நாடா நெய்தல் (Tape Weaving) இவை போன்ற வேறு சில தொழில் முறைகளை வீட்டில் கையாடுதலால் வீட்டில் உள்ளார்க்கு தேகப் பயிற்சியோடு வீண் வார்த்தைப் பேசுதல், வீண் காலக்ஷேபம் செய்தல் முதலியவற்றிற்கு இடமில்லாமலும் நம் குழந்தைகளுக்கும் தொழில் செய்வதில் ஆர்வத்தை உண்டாக்கு கிறவர்களாகின்றோம்.

நண்பர்களே, அடியில் நம் வீட்டிலேயே சுலபமாய் நாடா நெய்யக்கூடிய முறை யொன்றை விவரிக்கின்றேன். நமக்குத் தேவையான நீளம் நாடாவை நெய்து கொண்டு கட்டிலுக்கு உபயோகப் படுத்திக் கொள்வதால் குழந்தைகளுக்கு நாமே தயாரித்தோம் என்ற பெருமையால் தொழிலில் ஆசையும் உண்டாகும்.




(படம் 1)





(படம் 2)

(தரைப் படம்)


மேலே குறித்த படத்தில் உள்ளபடி 'மு,' 'ந,' 'க,' மூன்று இடத்திலும் இவ்விரண்டு கால்கள் ஒன்றுக்கொன்று ¾ அடி இடைவிட்டு நடு. (இரண்டு படங்களையும் கவனிக்க.) 'மு' என்னும் இடத்தி லிருந்து 'ந' என்னும் இடத்திற்கு 3 or 4 அடி இடை விட்டும் 'ந'விலிருந்து 'க'வுக்கு 10 or 12 அடி இடை விட்டும் நடு. 'மு' கால்கள் இரண்டும் பூமி மட்டத்திலிருந்து 1¼ அடி உயரமும், 'ந' கால்கள் 3¼ அடி உயரமும், 'க' கால்கள் 1¼ அடி உயரமும் இருக்கும்படி நடு.

1 அல்லது 1½ அங்குல கனமுள்ள கெட்டி மூங்கிலை எடுத்து சிலும்பல், கணு முதலியவை யில்லாமல் சீவி விடு. (ஏனெனில் நூலை அறுக்கும்.) வேண்டுமானால் உப்புக் காகிதத்தால் பிறகு தேய்த்து வழவழப்பாக்கி 1 அடி நீளத் துண்டுகளாக 4 துண்டுகள் நறுக்கிக்கொண்டு, 'மு' கால்கள் இரண்டிற்கும் பூமி மட்டத்திலிருந்து 1 அடி உயரத்தில் ஒரு துண்டை வைத்து ஆணியால் அடித்துவிடு, 'ந' கால்களில் 2 அடி உயரத்தில் ஒன்றும், அதற்குமேல் 1 அடி அதாவது பூமியிலிருந்து 3 அடி உயரத்தில் மற்றொன்றையும் 'க' கால்களில் 1 அடி உயரத்தில் ஒன்றையும் வைத்துப் பதித்துவிடு.

அரை விழுது (அரை வடி—Half Heald) ஒன்று 20 இழைகள் கொள்ளுமாறு ½ அடி உயரம் கட்டிக்கொள். விழுது என்பது தெரியாதவர்கள் தறிநெய்யும் இடத்திற்குச் சென்று நேரே பார்த்துத் தெரிந்து கொள்ளவும். தறியில் இழைகளை (நூல்களை) மேலும், கீழும் முறையே உயர்த்தவும் தாழ்த்தவும் செய்தற்கு நூலினால் (Twine) செய்யப்பட்டது விழுது அல்லது வடி என்று பெயர். தறியில் விழுது மேலேயும், கீழேயும் நூலினால் கட்டப்பட்ட வளையங்கள் வரிசையாயிருக்கும். மேலேயுள்ள வளையங்கள் கீழ் வளையத்தைப் பின்னிக்கொண்டிருக்கும். அந்த வளையங்களுக்கிடையே நூல் சேர்க்கப்பட்டிருக்கும். இது முழு விழுது. நமக்கு வேண்டியது ¼ விழுது இதைச் செய்யும் முறை அடியில் வருமாறு. மெல்லிய கயிறு (Twine) கொஞ்சம் எடுத்துக்கொள். இதற்கு 8 அல்லது 10 இருபதாம் நம்பர் நூலைக்கொண்டு முறுக்கிக்கொண்டால் போதும். அதை 1¼ அடி துண்டுகளாய் 20 துண்டுகள் நறுக்கிக்கொள். அந்தக் கயிறு இரண்டு சேர்த்துத் தாராளமாய் கோர்க்கக்கூடிய கண்ணுள்ள மணிகள் 20 எடுத்துக்கொண்டு ஒவ்வொரு துண்டிலும் ஒவ்வொன்றாக 20 க்கும் கோர்த்துவிடு. பிறகு ஒரு மரக்கட்டையில் ½ அடி தூரத்திற்கு இடை வெளி விட்டு இரண்டு ஆணி அடித்து, அந்த இரண்டு ஆணிக்கும் ஒவ்வொரு கயிறாய் தளர்வு இல்லாமல் முடிந்துவிடு. (படம் 3 பார்க்க.) இப்படியே 20 கயிறு முடிந்து கொண்டு அதிலிருந்து எடுத்துக் கொள். கால்களுக்கு அடித்த மூங்கில் துண்டு மாதிரி 1 அடி நீளமுள்ள மூங்கில் துண்டில் முடிந்த நூல்களை மிகுதியாகவுள்ள நூலால் வரிசையாகக் கட்டிவிடு. (படம் 4 பார்க்க) பிறகு இந்த வளையங்களை நெருக்கி மூங்கிலின் மத்தியில் நகர்த்திவிடு. இதுதான் ½ விழுது. இதை 'ந' கால்கள் இரண்டிலும் அடியில் வைத்து அடித்துவிடு. (1 படம் பார்க்க).



(படம் 3)




(படம் 4)



நாடா நெய்யவேண்டிய கருவி இவ்வளவே. இனி நெய்வதற்கு வேண்டிய பாவு (நீள நூல்) தயார் செய்வதைக் கூறுவோம். 3 அல்லது 4 இழைகள் போட்டு முறுக்கப்பட்ட 20 நம்பர் நூலை 4 நெம்பர் (நூல் கடையில் $\frac{3}{20}$ நம்பர் or $\frac{4}{20}$ என்று கேட்டால் கிடைக்கும்) இந்த நூலை நமக்கு எவ்வளவு நீளம் டேப் வேண்டுமோ அவ்வளவு நீளத்திற்கு 40 இழைகள் போட்டுக்கொண்டு (பாவு ஓடிக்கொண்டு) சுருணையாய் சுற்றி வைத்துக்கொள். இதற்கு நெய் தொழிலாளர் உதவி சிலாக்கியமானது.


சுருணையிலுள்ள நூலைக் கொஞ்சம் பிரித்துக்கொண்டு 4 மூங்கிலின் கீழாக கொண்டு வந்து அதில் முதல் இழையை எடுத்து 2 மூங்கில் மேலும் அரை விழுதில் முதல் வளையத்தில் இருக்கும் மணி



(படம் 5)

(பாவு சுருணை)

யில் கோர்த்து இழுத்துக்கொள். அடுத்த இழையை 2 மூங்கிலின் கீழாக நேரே இழுத்துக்கொள் அதை விழுதில் கோர்க்கக் கூடாது. 3-வது இழை 1-வது இழைக்குப் பக்கத்தில் 2மூங்கிலின் மேலேயே போட்டு விழுதில் 2-வது வளையத்தின் மணியில் கோர்த்து இழுத்துக்கொள். இப்பொழுது விழுதில் கோர்க்காத 2-வது இழை விழுதில் கோர்க்கப்பட்ட 1,3 இழைகளின் இடையில் இருக்கும் 4-வது இழையை 2-வது இழையைப் போல் 2 மூங்கிலின் கீழாக 3-வது இழைக்கு வெளியில் நேராக இழுத்துக்கொள். இப்படி 40 இழைகளை ஒன்று மாற்றி ஒன்றாக முறையே விழுதின் மூலமாகவும் விழுதில் கோர்க்காமலும் இழுத்துக்கொள். நூல் சுருணையைப் பிரித்து 4 மூங்கில் மேலாகவும் 3 மூங்கிலின்



(படம் 6)

மேலாகவும் கொண்டுவந்து 1 மேல் போட்டு கீழாக வாங்கி கோர்த்து இருக்கும் முனையோடு மொத்தமாக முடிந்துவிடு. (படம் 6 பார்க்க) இப்பொழுது a வரிசை நூலில் 20 இழைகள் விழுதில் கோர்க்கப்படாமலும், b வரிசை நூலில் 20 இழைகள் விழுதில் சேர்க்கப்பட்டும் இருக்கும். இப்பொழுது a வரிசை நூலை மேலுங் கீழும் முறையே உயர்த்தவும் தாழ்த்தவும் செய்யலாம்.

இனி செய்யும் முறையை விளக்குவோம். குறுக்கே போடுவதற்கு 20 நெ. நூல் 8 or 10 இழைகள் சேர்த்து ஒரு சிறு குச்சியில் கொஞ்சம் நூலை சுற்றிக் கொள். இப்பொழுது a வரிசை நூலை மேலே கையினால் உயர்த்த b வரிசை கீழாகவும், a வரிசை மேலாகவும் இருக்கும். a வரிசையை தாழ்த்த




(படம் 7)

a கீழாகவும் b மேலாகவும் இருக்கும். குச்சியில் சுற்றிய நூலை a உயர்த்தி விழுதுக்கு முன்னால் இரண்டு வரிசைக்கும் இடையில் கோர்த்து ஒரு சிறு மரக்கத்தியால் நூலை அடித்து நெருக்கியும் a தாழ்த்தி மறுபடியும் நூலைக் கோர்த்து மரக்கத்தியால் அடித்து நெருக்கியும் நெய்ய வேண்டும். இப்படியே மாற்றி மாற்றி செய்து கொண்டுபோகவும். நெய்த பாகம் விழுதுக்கு நெருங்கிப் போனால் சுருணையோடு முடிச்சியை நகர்த்தி நெய்யவும். அந்த முடிச்சி நகர்த்துவதால் 1-வது மூங்கில் வழியாய் 3-க்கு மேல் சென்று 4-வதுக்கு வரும் வரையில் நெய்து பிறகு முடிச்சியை அவிழ்த்து சுருணையிலுள்ள நூலைப் பிரித்து முதலில் இருந்த நிலைமையில் நெய்த நாடாவோடு முடிந்து நெய்து கொண்டு போகவும்.

சகோதரர்களே, பிரமாதமென்று மலைக்கவேண்டாம் செய்து காட்டுவது எளிது; எழுதி விளக்க வேண்டியதால் பிரமாதமாய் தோன்றும் யாவரும் சுலபமாய் செய்யக் கூடியதே.

பள்ளிச் சகோதரர்களே, உங்கள் ஓய்வு காலத்தை வீணாக்காமல், இப்படிப்பட்ட சிறு தொழிலால் பிரயோஜன கரமாக செலுத்துமாறு வேண்டுகிறேன்.

# செங்குந்தர் கல்வி நிதி

## காப்பாளர் சபையின் முதல் கூட்டம்

செங்குந்தர் கல்விநிதியின் காப்பாளர் சபையின் முதற் கூட்டம் 8-2-31 ல் காலை 9 மணிக்கு மேல் 'மித்திரன்' காரியாலயத்தில் திரு. ம. சண்முக சுந்தர முதலியார் எம். ஏ., எல். டி., அவர்கள் தலைமையிற் கூடியது. அப்போது தலைவரோடு திருவாளர்கள் ஆ. வே. முத்தையய முதலியார் பி. ஏ., பி. எல்., தி. நா. சபாபதி முதலியார், வெ. மு. மொட்டையப்ப முதலியார், மா. பா. கந்த சாமி முதலியார் பி. ஏ., பி. இ., வீ. இரத்தின முதலியார் பி. ஏ., பி. எல்., மா. அ. கனகசபை முதலியார் ஆக எழு அங்கத்தினர் வந்திருந்தனர். திருவாளர்கள் M. V. பீமராஜ முதலியாரும், ப. கு. ஆறுமுக முதலியாரும் தாம கூட்டத்துக்கு வர இயலாமையைத் தெரிவித்துக் கடிதமெழுதி யிருந்தனர்.

1. காப்பாளர் சபையின் உத்தியோகஸ்தர்களாகக் கீழ்க் குறிப்பிட்டுள்ளோர் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றனர்.

தலைவர் : திரு. ஆ. வே. முத்தையய முதலியார் பி. ஏ., பி. எல்.,

துணைத்தலைவர் : திரு. ம. சண்முக சுந்தர முதலியார் எம். ஏ., எல். டி.,

அமைச்சர் : திரு. மா. பா. கந்தசாமி முதலியார் பி. ஏ., எல். டி.,

பொருட் காப்பாளர் : திரு. வீ. இரத்தின முதலியார் பி. ஏ., பி. எல்., அட்வகேட்.

உத்தியோகஸ்தர் தேர்தல் முடிந்ததும் திரு. ம. சண்முகசுந்தர முதலியார் அவர்கள் தலைவர் இடத்தைத் திரு. ஆ. வே. முத்தையய முதலியார் அவர்கள் ஏற்கும்படி கேட்டுக் கொள்ள அவரும் இசைந்தார்.

2. கல்வி நிதியின் பராமரிப்புக்கு வேண்டிய உப சட்டங்களைத் தயாரித்து அடுத்த காப்பாளர் சபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கத் துணைத் தலைவரும் பொருட் காப்பாளரும் அமைச்சரும் கொண்ட ஒரு கிளைச்சபை ஏற்படுத்தப் பட்டது.

3. கல்விநிதியை ரிஜிஸ்தர் செய்தவற்குரிய தஸ்தா வேசுகளைத் தயாரித்து அடுத்த காப்பாளர் சபைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கவும் இக்கிளைச் சபையினரே வேண்டிக் கொள்ளப் பெற்றுள்ளனர்.

4. தென்னிந்திய மகாஜன சங்கத்தினரிடமிருந்து பிக்செட் டெபாசிட்டில் ரூ. 7500-ம் கவர்ன்மெண்ட் பாண்டில் ரூ. 2500 ஆகக் கல்வி நிதிக்கு மூலதனமாக வழங்கப் பெற்ற மொத்தம் ரூபாய் பத்தாயிரத்யையும் இக்காப்பாளர் சபை மிக்க வந்தனத்துடன் ஏற்றுக் கொள்ளுகிறது.

5. கல்வி நிதியின் மூலதனத்தைப் பெருக்கக் காப்பாளர் சபையினர் காஞ்சியில் கூட இருக்கும் செங்குந்தர் இரண்டாவது மகா நாட்டில் நன்கொடைகள் உண்டி வசூல் நடத்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்று தீர்மானிக்கப் பெற்றது.

6. இந்நிதிக்குக் கிடைக்கக்கூடிய வட்டி வருவாய் இன்னும் சில மாதங்கள் கழித்தே கிடைக்குமாகையால் இடையில் நிதியின் பராமரிப்புக்கு ஆகும் தபால் அச்சு செலவு முதலியவற்றிற்குத் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தினரை நூறு ரூபாய்வரை கடன் கொடுக்கும்படியாகக் கேட்டுக் கொண்டு ஷை செலவுகளைச் செய்ய அமைச்சருக்கும் பொருட் காப்பாளருக்கும் அனுமதி அளிக்கப் பெற்றது.

மா. பா. கந்தசாமி முதலியார் பி. ஏ., பி. இ.,
அமைச்சர்.

---

## தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்

### 8—2—31 காலை 8-மணிக்குத் திரு. ஆ. வே. முத்தையா முதலியார் அவர்கள் தலைமையின்கீழ் கூடிய நிருவாக சபைக் கூட்டத்தின் நடவடிக்கைகள்.

இக்கூட்டத்திற்கு வந்திருந்த அங்கனத்தினர்கள்:—

திரு. ஆ. வே. முத்தையய முதலியார் பி.ஏ. பி.எல்.
" தி. நா. சபாபதி முதலியார்
" மா. அ. கனகசபை முதலியார்
" வீ. இரத்தின முதலியார் பி.ஏ. பி.எல்.
" மா. பா. கந்தசாமி முதலியார் பி.ஏ. பி.இ.
" சொ. முருகையய முதலியார்
" ம. சண்முகசுந்தர முதலியார் எம்.ஏ. எல்.டி.

இக்கூட்டத்தில் சென்ற கூட்டத்தின் ஆலோசனைக்குக் கொண்டுவரப் பட்டிருந்த விஷயங்களும் இடையே அங்கத்தினர் அனுமதிக்கும் அபிப்பிராயத்துக்கும் அனுப்பப்பட்டிருந்த அவசரக் கடிதங்களும் இக்கூட்டத்தின் ஆலோசனைக்குக் கொண்டு வந்துள்ள விஷயங்களும் யோசித்து முடிவு கட்டப்பட்டன.

1. சப் கமிட்டியார் 31-10-30 வரை தயாரித்துள்ள கணக்குப் பாகுபாடுகள் அங்கீகரிக்கப் பட்டது.



2. மித்திரன் அச்சு செலவுக்கு பாங்கியில் பிக்செட் டெபாசிட்டின்மீது வாங்கியுள்ள 500 ரூபாய் கடன் அங்கீகரிக்கப்பட்டது.

3. இராமேஸ்வரம் மடசம்பந்தமாக அமைச்சரின் சிபார்சுகள் அங்கீகரிக்கப் பெற்றன.

4. 5-12-30ல் திரு. ம. சண்முகசுந்தர முதலியார் அமைச்சர் பதவியையும், ஆசிரியர் பதவியையும் இராஜிநாமா செய்து எழுதியுள்ள கடிதம் வாசிக்கப்பட்டது. சில அவசரமான சொந்த அலுவல்களையும் தேக சுகத்தையும் கவனித்துக் கொள்ளுவதற்காக அவர் சங்கக் காரியங்களைக் கவனிப்பதிலிருந்து சிறிது காலம் ஓய்வெடுத்துக் கொள்ள வேண்டியது அவசியமானதால், அவர் அமைச்சர் பதவியை இராஜிநாமா செய்துள்ளது தற்காலிகமாக ஒத்துக் கொள்ளப்பட்டது. ஆனால் மித்திரன் ஆசிரியர் பதவியிலிருந்து அவர் விலகிக் கொள்ளாமலிருக்க வேண்டிக் கொள்ளளப்பட்டுள்ளார். தற்காலம் மித்திரன் வேலையைக் கவனித்து அவருக்கு ஒத்தாசைபுரிய திரு. வீ. இரத்தின முதலியார் பி.ஏ., பி.எல்., அவர்களும் பிறகு திரு. மா. அ. கனகசபை முதலியார் அவர்களும் வேண்டிக் கொள்ளப் பெற்றுள்ளனர்.

5. அமைச்சரின் அலுவல்களைக் கவனித்துக் கொள்ள, மதராஸ் பாலையகாட் கம்பெனி, மானேஜரும், கவர்ன்மென்டு பென்ஷனருமான திரு. சொ. முருகையயா முதலியார் அவர்களை வேண்டிக் கொள்ளப் பெற்றுள்ளார்.

6. இரண்டாவது மகாநாட்டு சம்பந்தமான விஷயங்களைக் கவனித்துத் தீர்மானிக்க திரு. மா. அ. கனகசபை முதலியாருக்கு அதிகாரமளிக்கப் பெற்றது.

7. பிரசாரகர்களின் வேலைகளையும், கணக்குகளையும் மேற்பார்வையிட திரு. மா. பா. கந்தசாமி முதலியார் அவர்கள் பி.ஏ., பி.இ., வேண்டிக் கொள்ளப் பெற்றுள்ளார்.

8. திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியார் கல்விநிதி சீட்டு சம்பந்தமாக ஓய்வு ஒழிவின்றி பாடுபட்டமைக்காக அவருக்கு ரூ. 186-7-4 வெகுமதியாக அளிக்க தீர்மானமாயிற்று.

9. T. K. அண்ணாமலை என்னும் மாணவனுக்கு (Junior Intermediate Class, Presidency College, Madras) அனுமதித்துள்ள உபகாரச் சம்பளத்தில் ரூ. 56 குறைத்துவிட வேண்டும்.

10. கல்விநிதியின் பாதுகாப்பாளர் சபையினை மாற்றி வேறு சட்டதிட்டங்கள் அமைத்து அதில் ஒவ்வொரு கிளைச் சங்கத்துக்கும், பிரதிநிதித்துவம் அளிப்பதோடு அப்பிரதிகளின் மொத்தத் தொகையில் மூன்றிலொரு பங்கினர் வந்தபோதே பாது காப்பாளர் சபைக் கூட்டங்களை நடத்த வேண்டுமென மதுரைச் சங்கத்தினர் அறிவித்துள்ள அபிப்பிராயம் தக்க சமயத்தில் கிடைக்காததால் கவனிப்பதற்கில்லை என்றும், அவ்வபிப்பிராயத்தின்படி சபையினரை மாற்றி அமைத்தால், ஒரு கூட்டமும் கூட்ட யியலாதென்றும், கல்வி நிதியின் பாதுகாப்புக்குத் தற்போது அங்கீகாரமாய் அமுலிலுள்ள அமைப்பையே, மிகவும் சிறந்ததென்றும் இந்நிருவாக சபை, அபிப்பிராயப் படுவதாய், மதுரைச் சங்கத்தினருக்கு அறிவிக்க அமைச்சர் வேண்டிக் கொள்ளப் பெற்றனர்.

11. கல்வி நிதியின் பாதுகாப்பாளர் வசம் ஷை நிதிக்கு முதலாக பிக்செட் டிப்பாசிட்டிலுள்ள தொகையில் 7500 ம், கவர்ன்மெண்ட் பாண்டிலுள்ள 2500 ம், ஆகமொத்தம், 10,000 ரூபாய் அளிக்க வேண்டுமென தீர்மானமாயிற்று. இத்தொகைகளுக்கு முதலாவதற்கு 1930ஞு ஜனவரி மீ 1 தேதி முதலும், இரண்டாவதற்கு 1931ஞு பிப்ரவரிமீ 15 தேதி முதலும் கிடைக்கும் வட்டித் தொகையை கல்விநிதியின் பாதுகாப்பாளர் வசம் கொடுத்து விடுவதென்றும் தீர்மானமானது.

12. திரு. மாணிக்கவாசக முதலியார் அவர்களுக்கும் இரண்டாவது மகாநாட்டின் வசூல் சம்பந்தமாக உதவிபுரியத் திருவாளர்கள் தி. நா. சபாபதி முதலியார் அவர்களும் வேண்டிக் கொள்ள பெற்றுள்ளனர்.

13. இரண்டாவது மகாநாட்டின் போது தலைச் சங்கத்தின் பொதுக் கூட்டத்தினையும் கூட்ட வேண்டிருப்பதால், அதன் அங்கத்தினர் ஜாப்திதாவைப் புதிப்பிப்பதற்கும், அதற்குமுன் சமர்ப்பிக்க வேண்டிய அறிக்கைப் பத்திரத்தினைத் தயாரிப்பதற்கும் அனுகூலமாக ஒவ்வொரு கிளைச் சங்கத்தினைத் தயாரிப்பதற்கும் அனுகூலமாக ஒவ்வொரு கிளைச் சங்கத்திலிருந்தும் பாக்கி கட்டணங்களை வசூலிப்பதோடு கீழ் குறிப்பிட்டுள்ள விவரங்களை வரவழைத்துக் கொள்ள அமைச்சர் வேண்டிக் கொள்ளப் பெற்றனர்.

i. கிளைச் சங்கம் அங்கீகாரமான தேதி முதல் 28-2-31 வரை அதன் நடவடிக்கைகளின் சுருக்கமான வரலாறு.

ii. கிளைச் சங்கத்தின் தற்கால உத்தியோகஸ்தர்களின் பெயர்களும், தலைச் சங்கப் பொதுக் கூட்டத்திற்கு தலைச் சட்டப்படி தேர்ந்தெடுத்துள்ள பிரதிநிதிகளின் பெயர்களும்,

14. 1-11-30 முதல் 28-2-31 வரை ஆகியுள்ள தலைச்சங்கத்தின் வரவு செலவு கணக்குகளைப் பார்வையிட்டு அங்கீகரிக்கத் திரு. மா. பா. கந்தசாமி முதலியார் அவர்கள் வேண்டிக் கொள்ளப் பெற்றுள்ளார்.

# செங்குந்தர் கிளர்ச்சி

## சென்னை ஜில்லா.

### திருமயிலை செங்குந்த வாலிபர் சங்கம்.

### கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் திருநாள்.

ஷை சங்கத்தின் சார்பாக 1930-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 6 ம் நாள் மாலை 4 மணிக்கு திருமயிலை சுந்தரேச்வரர் ஹாலில் (திருமயிலை தேசிய உயர்தர பெண்பாடசாலைக்குப் பாங்கரில்) சென்னை அரசாங்கக் கல்வி மந்திரியார் உயர் திரு. திவான் பகதூர் S. குமாரசாமி ரெட்டியார் அவர்கள் B.A. B.L., அவைத் தலைமையில் சென்னை இராஜதானிக் கல்லூரித் தலைமைத் தமிழாசிரியர் திரு. கா. நமச்சிவாய முதலியார் அவர்கள் "ஒட்டக்கூத்தர்" எனும் பொருள்பற்றி சொற்பெருக்கு நிகழ்த்தியதில் ஒட்டக்கூத்தர் சிறப்பினையறிய வேண்டுமானால் அவரியற்றிய தக்கயாகப்பரணியே போதுமான கருவியாகுமென்றும் கம்பர் புகழேந்தி முதலாயினோர் அவருக்குப் பிற்காலத்தவரென்றும், அவர் காலத்திருந்ததாகக் கூறப்படும் ஔவையார் புலவர் பெருமக்களால் வழங்கப்படும் சங்சக்கால ஔவயாரல்லரென்றும், ஓர் காலம் சோழன் ஒட்டிப்பாடுதிரோ வெட்டிப் பாடுதிரோ என்று வினவியபோது ஒட்டிப்பாட இசைந்தமை காரணமாக ஒட்டக்கூத்தர் என்ற பெயர் உண்டாயிற்று; ஆகையால் பிற காரணங்கள் அப்புலவர் பெருமானுக்கு பேரிழுக்கை புண்டு பண்ணுவதாகுமென்றும் ஒட்டக்கூத்தர் வேத்தவைப் புலவரா யிருந்தனான்று சோழன் செம்மலிடத்து சன்மானம் பெறுவான் ஈண்டும் போலிப் புலவர்களை அரசனவையிற் கூட்டி அன்னோர் தம் கல்வித் திறத்தினைச் சோதித்துக் கல்விக் குறையினை வேந்தர்க்குக் காட்டி அவன் ஒருப்படச் சிறையிலிட்டு நவராத்திரி காலத்தில் அப்போலிப் புலவர்களை வெளியேற்றி ஒன்றிரண்டாய் முடிபோட்டு வெட்டினாரென்பதுஉம் புகழேந்திப் புலவர் சிறைவாசம் அனுபவித்துக் கொண்டிருந்த காலத்து பல போலிப் புலவர்களை வழக்கம் போல சிறைக்கனுப்ப அவர்கடமக்கெல்லாம் புகழேந்திப் புலவர் உண்மைக் கல்வி கற்பித்து ஒட்டக்கூத்தர் விடுக்கும் வினாக்களுக்கு விடையளிக்கத்தக்க வகையிலே கவிபாடுவதில் வல்லுநராக்கி, ஒட்டக்கூத்தர் தம் வீறினை அடக்கினார் என்பதுஉம் புனைந்துரைகளே என்றும் இவைகள் "குட்டுதற்கோ" எனும் தொடங்கத்தாய செய்யுளைச் சற்றுப் பெருக்கி உருவகப்படுத்தி வழங்கப்படுகின்றன் என்றும் மறுத்துப் பேசியதுஉம் குறிக்கற்பாலது.

இரண்டாவதாக சென்னை, முத்தியாலுப் பேட்டை உயர்தர பாடசாலை ஆசிரியர் திரு M. சண்முகசுந்தர முதலியார் M.A. L.T., "சமூக சீர்திருத்தம்" எனும் பொருள்பற்றி விரிவுரை நிகழ்த்துகையில் மற்றக் குலத்தார்களைக் காட்டிலும் இக்குலம் கல்வியில் பின்னடைந்திருக்கிறதென்றும் இக்குலத்தினர்க்கு அறிவுக் கல்வி (Adult education) யூட்டி மேம்படுத்த வேண்டுமென்றும் இன்னோரன்ன பல குறைகளை எடுத்துக் கூறி அவைகளை இயன்ற வரையில் தீர்த்தல் வேண்டுமென்று கல்வி மந்திரியாரை வேண்டிக் கொண்டனர்.

அவைத் தலைவர், தமது முடிப்புரையில், ஒட்டக்கூத்தர்மீது யாதாமொரு பூசல் காரணமாக இடையே யிருந்த புலவர்கள் இழுக்கொளி மிகுந்த கவிகளைப்பாடி அவரே பாடினரென்று கூறி அவர் மீது பற்பல அநீதியான கதைகளைக் கட்டிவிட்டனரென்று முதற்சொற் பொழிவாளரின் கூற்றை ஆதரித்தனர்.

மாலை 6 மணிக்கு மாலை மரியாதையுடன் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டமினிது கலைந்தது.

ஒட்டக்கூத்தரியற்றிய "ஈட்டியெழுபது" எனும் குலநூலிலுள்ள குறிப்பிடப்பட்டுள்ள சில பாட்டுக்களை மனனஞ்செய்து ஒப்பித்தவர்களில் பிழையின்றி நன்கு ஒப்பித்தமைக்காக திருவாளர்செல்வி இந்திராணி அம்மாளுக்கு முதற் பரிசாக சில புத்தகங்கள் வழங்கப்பட்டது.

---

## செங்கல்பட்டு ஜில்லா

நாயக்கன் பேட்டை உப சுப்பிரமணியர் சங்கம் சென்ற 25-1-31 மாலை 4 மணிக்குமேல் தமிழ்ப் புலவர் திரு. N. K. சுந்தர முதலியார் அவர்கள் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடந்தது. அவ்வமயம் ஸ்ரீலஸ்ரீ தணிகாசல சுவாமியார் அவர்களால் கடவுள் வணக்கம் இன்னிசையாக பாடப்பட்டது.

பிறகு N. S. முருகசாமி அவர்கள் சூது செய்யாமை என்பதைப்பற்றியும் N. S. தணிகைமலை அவர்கள் 'சோம்பல் விரும்பாமை' என்பதைப் பற்றியும் உபன்னியாசித்தார்கள். அதற்குமேல் N. C. இராஜ மாணிக்கம் அவர்கள் முக்கண் என்பதைப் பற்றி விவரித்தார். பிறகு தமிழ்ப் புலவர் அவர்கள் மேலே சொன்னவர்களின் சீர் திருத்தங்களையும் உபசரித்தார் பிறகு N. C. இராஜமாணிக்கம் அவர்களால் வந்தனோபசாரங் கூறப்பட்டு கூட்டம் இனிது கலைந்தது.

நாயக்கன் பேட்டை கிரும வாசிகளை இச்சங்கம் கேழ்க்கும் விஞ்ஞாபனம்:—அறிவிற் சிறந்த அன்புடையீர்களே! போர்டு ஸ்கூல் ஹெட்மாஸ்டர் சிங்காரவேலு முதலியார் அவர்களை இச்சங்கத்தின் அங்கத்தினர் அனுபிமாதத்தில் ஓர் ஞாயிற்றுக்கிழமை தினம் கொஞ்சநேரம் சங்கம் சேர இடம் கேட்டதற்கு அவர் எங்கள் உபாத்தியாயர்களில் யாரையாவது மெம்பராக சேர்த்துக் கொண்டால் இடம் விடுவதற்கு தடையில்லை என்றார். அதற்காக அங்கத்தினர்கள் ஒவ்வொரு உபாத்தியாயரிடமும் சென்று கேட்டதற்கு அவர்கள் உபசார வசனங்கள் கூறி அனுப்பிவிட்டார்கள். பிறகு ஏழைச் செங்குந்த மாணவர்கள் போர்டு பாடசாலையின் கண் சங்கம் கூடினதில் ஹெட்மாஸ்டர் அவர்கள் அதிருப்தியடைந்து இருப்பது போல் தெரிகிறது. அவர் செங்குந்த மாணவர் என்று கேழ்வியுற்றால் விஷம் சாப்பிட்டவர்போல் தோன்றுகிறது. பரோபகாரிகளே அவரால் எங்களை மன்னிக்கப்பட்டும் சங்கம் கூட இடம் ஏற்பாடு செய்யும் படிக்கும் இச்சங்கம் வணக்கமாய் கேட்கிறது.



மாணவன்

N. C. இராஜமாணிக்கம்.

---

### அரக்கோணம் தாலூகா.

### குருவராஜ பேட்டை

### ஷண்முகாநந்த போதுஜன சங்கம்.

2-2-31ல் திங்கள் கிழமை மாலை சுமார் 6 மணிக்கு ஷை யூர் மாணிக்க வாசக சுவாமிகள் மடாலயத்தில் திரு. P. M. நாகரத்தின முதலியார் திரு. K. கன்னியப்ப முதலியார் அவர்களால் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஷை கூட்டத்திற்கு திரு. குட்டி. நடேச முதலியார் அக்கிராசனம் வகித்தார். கடவுள் வணக்கம் திரு. T நாராயணசாமி முதலியார் அவர்களால் ஓதப் பெற்றபின் ஷை கூட்டத்திற்கு "ஷண்முகாநந்த போதுஜன சங்கம்" என்று எல்லோராலும் ஏக மனதாக நாமதேய மிட்டார்கள். பிறகு சங்கத்தின் நோக்கம் என்னும் விஷயத்தைப் பற்றி திரு. K. கன்னியப்ப முதலியார் அவர்களால் ஒரு உபந்யாசம் நடைபெற்றது.

பிறகு சங்கத்தின் நிர்வாக மெம்பர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். திரு. குட்டி நடேச முதலியார் தலைவராகவும், திரு. கா. பி. சுப்ரமணிய முதலியார் உபதலைவராகவும், திரு. P. M. நாகரத்தின முதலியார் காரியதரிசியாகவும், திரு. ச. மு. வரதப்ப முதலியார் உப காரியதரிசியாகவும், திரு. ம. முத்தப்ப முதலியார் பொக்கிஷதாரராகவும், திரு. T. K. முருகப்ப முதலியார், உப பொக்கிஷதாரராகவும் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள். பிறகு ஷை சங்கமானது ஒவ்வொரு மாதங்களிலும் அமாவாசை யன்றைக்கு மாலை சுமார் 2 மணிக்கு மேலும் பௌர்ணமி தினத்தில் மாலை சுமார் 6 மணிக்கு மேலும் மாதத்திற்கு இருமுறையாக ஷை மடாலயத்தில் ஒரு இலவச வாசக சாலையும் ஷை சங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்டது. ஒவ்வொரு தேர்தலுக்கும் தீர்மானத்திற்கும் கரகோஷம் செய்தார்கள். பிறகு தலைவரால் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் இனிது கலைந்தது. மறு சங்கம் வரும் அமாவாசை யன்றைக்கு ஷை சங்கத்தைக் கூட்ட முயன்ற திருவாளர்கள் P. M. நாகரத்தின முதலியார் K. கன்னியப்ப முதலியார் அவர்களுக்கு இச்சங்கம் நன்றி பாராட்டக் கடமைபட்டிருக்கிறது. சுபம். சுபம்.

இப்படிக்கு

ஷண்முகாநந்த போதுஜன சங்கம்

P. M. Nagarathinam

Secratry.

---

## வட ஆற்காடு ஜில்லா

### செங்கம் தாலூக்கா காஞ்சி

### செங்குந்தர் அபிவிருத்தி சங்க வாசக சபை

### இரண்டாவது கூட்டம்

1. தலைவர் R. கோவிந்தசாமி முதலியார் 7-12-30 மாலை 4-மணிக்கு ஸ்ரீ செல்வவிநாயகர் மடாலயத்தில் இச்சங்கத்தின் 2-வது கூட்டம் நிறைவேறின தலைவரால் கடவுள் வாழ்த்து கூறப்பட்டது.

மேற்படி தலைவர் :—K. T. மாணிக்க முதலியார் அவர்களால் குடியால் விளையும் கேடுகளைப் பற்றியும் கீழ்கண்ட அங்கத்தினர்கள் கி. வெ. தனக்கோட்டி முதலியாா அவர்கள் நமது கைத்தொழில் விஷயமாகவும் :—கா. சி. நடேச முதலியார் அவர்கள் பெண் கல்வியைபற்றியும் :— ராமலிங்க முதலியார் அவர்கள் ராமாயண விஷயமாகவும் பு. வெ. அழகேச முதலியார் அவர்கள் செல்வச் செறுக்கு என்னும் வியாசத்தைப்பற்றியும் :—பு. மா. நீலகண்ட முதலியார் அவர்கள் கல்வியைப்பற்றியும் :—கொ. கோ. நடேச முதலியார் அவர்கள் சுகாதாரப்பகுதி காற்று விஷயமாகவும் விரிவுரை செய்தார். பின்பு யாவராலும் கடவுள் வாழ்த்து கூறப்பட்டது. தவிர ஸ்ரீ செல்வவிநாயகருக்கு ஆராதனையுடன் இரவு 7-மணிக்கு இனிது கூட்டம் நிறைவேறியது.

செங்குந்தர் அபிவிருத்தி சங்க வாசகசாலை:—

R. கோவிந்தசாமி முதலியார், தலைவர்.

---

## கோயமுத்தூர் ஜில்லா

### பொள்ளாச்சித்தாலூக்கா வடசித்தூர்

### செக்குந்தர் சங்கம் 11-வது கூட்டம்

28-12-1930-ல் மாலை சுமார் 3-மணிக்கு திரு. கப்பல் குப்பண்ண முதலியார் அவர்கள் முற்றத்தில் சொ. சொக்கப்ப முதலியார் அவர்கள் தலைவர் முன்னுரையில் கடவுள் வணக்கம் முடிந்ததும் 17-8-30-ல் நல்லனுரில் ஸ்ரீகாமாக்ஷியம்மன் கோவில் வேலை துவங்குவதென்று தீர்மானித்தவர்கள் நாளதுவரை வேலை துவங்காமலும் கூட்டத்திற்கு சரிவர வந்து சேராததாலும் ரொம்பவும்

கண்டித்துப்பேசினார். பின் மங்கிலிய விஷயமாய் தேசங்கள்தோறும் பாஷைகள் வேறு என்னும் பழமொழியை சுட்டிக்காட்டினார். நம்மவரில் ஒற்றுமை ரொம்பவும்வேண்டும் என்றும் நமது சங்கத்திற்கு சரியான தலைவர் ஒருவரை தேர்ந்தெடுக்கவேண்டும் என்றும் நாம் அதற்குமேல் நமது ஜில்லா செங்குந்தர் வாலிபர் சங்கத்தார் உதவியைக்கொண்டு ஸ்ரீ காமாக்ஷியம்மன் பொது பண்டு பணத்திற்கு வரிதேடிக்கொள்ளலாம் என்றும் நமது சங்கக் காரியதரிசி அவர்கள் பொதுநன்மையைக்குறித்தும் ரொம்பவும் பாடுபட்டு வருகின்றார் என்பது யாவரும் அறிந்தவிஷயம். தவிர காரியதரிசி அவர்கள் மகன் இராமசாமி முதலியார் தேசத்தொண்டுபுரிந்து தேசீயக் கைதியாயிருக்கிறார், என்பதும் அறிந்தவிஷயம் அவர்களுக்கு இச்சங்கம் மிகவும்நன்றிபாராட்டுகின்றது. பின் திரு. T. மயிலானந்தம் பிள்ளை உபாத்தியாயர் பிரமோதூத வருஷம் மார்கழி மாதத்திய செங்குந்த மித்திரன் வாசித்து நன்கு விளக்கிக்காட்டினர். தலைவர் முடிவுரையில் மதுவை விலக்கினவர்களுக்கே நன்றி பாராட்டவேண்டும் என்றும் நமது கிராமத்தில் போஸ்ட்டாபீஸ் ஏற்படுத்த ம-ள-ள-ஸ்ரீ நீலகிரி டிவிஷன் போஸ்ட்டாபீஸ் சூப்ரின்டென்டெண்ட் துரை அவர்கள் சமுகத்திற்கு நமது தலைச்சங்கத்தார் மூலமாக சிபார்சு செய்ய வேண்டுமென்றும் அடுத்தமாதக்கூட்டத்தில் புதுவருஷத்திய உத்தியோகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கவேண்டுமென்றும் அடுத்தகூட்டம் ஸ்ரீ காமாக்ஷியம்மன் மேடையில் கூடுவதென்றும் சந்தாத்தொகைபாக்கியுள்ளவர்களும் மித்திரன் சந்தாத்தொகையுள்ளவர்களும் அடுத்த கூட்டத்தில் செலுத்திவிடவேண்டும் என்றுகூறி வந்தனோபசாரத்துடன் சபை இனிது கலைந்தது.

5-1-1930<br>பொ.தா. வடசித்தூர் } உபாத்தியாயர் கே. கி. சா. பழனியப்ப முதலியார்<br>காரியதரிசி

## செங்குந்தர் மஹாஜன சங்கம்

### சித்தோடு

20-12-1930 மாலை 5-மணிக்கு மேற்படி சபை ஹாலில் சங்கத்தலைவர் திரு ல. சுப்பராய முதலியார் அவர்கள் தலைமையின்கீழ் மஹா சபை கூட்டப்பட்டு கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்த மஹா சபை சித்தோடு கிராமப் பஞ்சாயத்து கோர்ட்டுடன் பேரோடு, தயிர்பாளையம், வேட்டப்பறையான் பாளையம், கொச்சிபாளையம் கிராமங்களைச்சேர்த்திருப்பதினால் நம் ஜன சமூகத்துக்குப் பல இடஞ்சல்களும், அவமானங்களும் ஏற்படுவதைக்குறித்து நாம் மிகவும் துக்கப்படுவதுடன் மேற்படி விதம் கோர்ட்டு இருப்பது நமக்குபெருத்த சங்கடத்தை விளைவிப்பதினால் மேற்படி கோர்ட்டைப்பிரித்து சித்தோடு கிராமத்திற்குத் தனியாக பஞ்சாயத்துகோர்ட்டு ஏற்படுத்திக் கொடுக்குமாறு நமது காருண்ய சர்க்காரை வற்புறுத்திக் கேட்கவும் அதற்குத் தகுந்தபடி ஏற்பாடு செய்யவும் வேண்டுமென ஏகமனதாகத் தீர்மானிக்கிறது.

பிரேரேபித்தவர் ம-ள-ள-ஸ்ரீ K. முத்துசாமி முதலியார் அவர்கள் ஆமோதித்தவர் ம-ள-ள-ஸ்ரீ S. S. ராமசாமி முதலியார் அவர்கள்.

(2) மேற்படி தீர்மானத்தின்பேரில் சரியான நடவடிக்கை நடத்தவும் ம-ள-ள-ஸ்ரீ கோயமுத்தூர் ஜில்லா கலெக்டர் துரை அவர்களை நேரில்பார்த்து தமக்கேற்பட்டிருக்கும் இடஞ்சல் வகையறுக்களை எடுத்துச்சொல்லவும் நமது ஜனசமூகத்திலிருந்து மகஜர் தயாரித்து ம-ள-ள-ஸ்ரீ கலெக்டர் துரை அவர்களிடமும் ஈரோடு டிவிஷனல் ஆபீஸர் அவர்களிடமும் கொடுக்கும்படியாக நம்மளில்

திருவாளர்கள் ல. சுப்பராய முதலியார், செ. செ. ராமசாமி முதலியார், மா. சு. பெரியசாமி முதலியார், க. முத்துசாமி முதலியார், ரா. சின்னப்ப முதலியார், கொ. நல்லப்ப முதலியார், மா. ஆ. பழனியப்ப முதலியார், நா. ஆ. ராமசாமி முதலியார், வீ. நாச்சிமுத்து முதலியார், முதலியவர்கள் அடங்கிய ஒரு சப் கமிட்டி ஏற்படுத்தி டெப்யூடேஷன் வகையாா நடத்திக் கொள்ளும்படியாக அதிகாரம் கொடுக்க இந்த மஹா சபை ஏகமனதாகத் தீர்மானித்திருக்கிறது. பிரேரேபித்தவர் திரு. மா. சு. பெரியசாமி முதலியார் அவர்கள் ஆமோதித்தவர் திரு. ரா. சின்னப்ப முதலியார் அவர்கள் இவ்விரண்டு தீர்மானங்களையும் ம-ள-ள-ஸ்ரீ ஜில்லா கலெக்டர் துரை அவர்களுக்கும் ஈரோடு ம-ள-ள-ஸ்ரீ டிவிஷனல் ஆபீஸர் அவர்களுக்கும் அனுப்பிக் கொடுக்கும்படிக்கும் இந்த மஹா சபை ஏகமனதாகத் தீர்மானிக்கிறது. பிரேரேபித்தவர் ம-ள-ள-ஸ்ரீ மா. ஆ. பழனியப்ப முதலியார் அவர்கள் ஆமோதித்தவர் மா ள-ஸ்ரீ K. நல்லப்ப முதலியார் அவர்கள்.

சித்தோடு<br>20-12-30 } (Sd.) ல. சுப்பராய முதலியார்<br>பிரசிடெண்டு,<br>சித்தோடு செங்குந்தர்<br>மஹா சபை சித்தோடு.

---

## இராமநாதபுரம் ஜில்லா

## செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்

### சங்கர நயினார் கோவில்

(26-1-1930-ம் வருஷத்தில் ஸ்தாபிக்கப்பெற்றது)

முதலாவது ஆண்டு நிறைவுவிழா

1106ஹு தைமீ 12உ ஞாயிற்றுக்கிழமை (25-1-31-ல்) செங்குந்தர் தருமர் கோவில் தெருவிநாயகர் ஆலயத்தின் முன் அமைக்கப்பெற்றிருந்த பந்தலில் வீரவ நல்லூர் செங்குந்தர் அபிவிருத்தி சங்கத் தலைவரும் திருநெல்வேலி வக்கீலுமான ஸ்ரீமான் V. S. சங்கரசுப்பிரமணிய முதலியார் B.A. B.L.



அவர்கள் தலைமையில் வெகு சிறப்பாகவும் விமரிசையாகவும் நடந்தேறியது.

மாலை 3-மணியளவிற் ஸ்ரீமான் தலைவர் அவர்களை மேளவாத்தியம் முழங்க ஜவுளி வியாபாரி திரு வெ. சங்கரசுப்பு முதலியார் அவர்கள் இல்லத்திலிருந்து பந்தலுக்கு அழைத்துவரப்பெற்று முருகப்பெருமான் திரு உருவப்படத்தை எழுந்தருளச்செய்து ஸ்ரீமான் தலைவர் அவர்களை ஊர்வலமாக அழைக்கப்பட்டது.

கடவுள் வணக்கம் ஸ்ரீமான் தி.ப. சு. அருணகிரி முதலியார் அவர்கள் பஜனைக்கோஷ்டியாரால் இனிமையாகப் பாடப்பெற்ற பின் ஸ்ரீமான் மிட்டாதார் தி மு. தி. முத்தையா முதலியார் அவர்கள் திறப்புரை நிகழ்த்தி சபைத் திறப்புசெய்து வைத்தார்கள். பின்னர், சபையோர்கள் ஸ்ரீமான் தலைவர் அவர்களை ஆசனத்தில் அமரும்படி வேண்டிக்கொள்ளப்பெற்று, ஸ்ரீமான் தலைவர் அவர்கள் தமதாசனத்தில் அமர்ந்தவுடன் சரிகை மாலைகள் சூட்டப்பெற்று சங்கத்தின் சார்பாக ஸ்ரீமான் உபதலைவர் திருவுடையா முதலியார் அவர்களால் வசனத்திலும் தலைவர் ஸ்ரீமான் A. முத்தையா முதலியார் அவர்களால் சங்கீதத்திலும் இரண்டு உபசார பத்திரிகைகள் வாசித்து கொடுக்கப்பெற்றது ஸ்ரீமான் தலைவர் அவர்கள் மிகுந்த கரகோஷத்தினிடையே எழுந்து நம்மவர்களின் இப்போதைய நிலைமையைப் பற்றியும் இனி நாம் முன்னேறுவதற்கு செய்யவேண்டிய காரியங்களைப் பற்றியும், தலைச்சங்கம், மித்திரன், கல்விநிதி, இன்னும் முன்னேற்றத்திற்குரிய அனேக வழிகளை எடுத்துக்காட்டி மிகவும் தெளிவாக சொற்பெருக்கிட்டார்கள்.

பின்னர் வருஷாந்திர அறிக்கை வாசிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளபட்டது.

சங்கத்தலைவர் ஸ்ரீமான் A. முத்தையா முதலியார் அவர்கள் சமுதாய முன்னேற்றம் என்பதுபற்றியும்.

உபதலைவர் M. திருவுடையா முதலியார் அவர்கள் சீர்திருத்தம் தலைச் சங்கம் மித்திரன் கல்விநிதி முன்னேற்றத்திற்குரிய அனேக வழிகளையும் குறித்து சொற்பெருக்கிட்டார்.

திருவாளர்கள் ஆறுமுக முதலியார் அவர்கள் S. பழனியாண்டி முதலியார் அவர்கள் முறையே குலப்பெருமை சுகாதாரம் என்பதுபற்றியும் பேசினார்கள். கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேறப்பட்டன. புது வருஷத்து உத்தியோகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வேலைத்திட்டமும் ஒப்புக்கொள்ளப்பட்டது. முடிவுரையில் ஸ்ரீமான் தலைவர் அவர்கள் விழாவின் பெருமையும் மித்திரனைக்குறித்தும் சில பேசியபின் வந்தனோபசாரம்கூறி சந்தனதாம்பூலம் வழங்கப்பெற்று மணி 1-க்கு கூட்டம் இனிது கலைந்தது.

### 1931 வருஷத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட உத்தியோகஸதர்கள்

ஸ்ரீமான் A. முத்தையா முதலியார் அவர்கள் உபதலைவர், M. திருவுடையா முதலியார் அவர்கள் தலைவர், T. M. T, சங்கரபாண்டிய முதலியார் அவர்கள் காரியதரிசி S. P. சங்கரகுற்றால முதலியார் அவர்கள் உபகாரியதரிசி

பொக்கிஷதாரர்கள்

R .A. வேலாயுத முதலியார் அவர்கள்

V. S. P' சங்கரசுப்பு முதலியார் அவர்கள்

நிர்வாக சபை மெம்பர்கள்

திருவாளர்கள்

S. T. சங்கர நமசிவாய முதலியார் அவர்கள்<br>M. M. வயிரவ முதலியார் அவர்கள்<br>P' A. பழனியாண்டி முதலியார் அவர்கள்<br>A. S. முத்துசாமி முதலியார் அவர்கள்<br>T. P. S. அருணகிரி முதலியார் அவர்கள்<br>A. P. முத்தையா முதலியார் அவர்கள்

ஆயிரம் ஜனங்களுக்கு அதிகமாக கூடியிருந்த கூட்டத்தில் யேகமனதாய் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேறப்பட்டன.

1. செங்குந்த உலகமும், சென்னை மகாஜன சங்கமும், கிளைச்சங்கங்களும், மித்திரனும், கல்வி நிதியும் மென்மேலும் சிறந்தோங்குமாறு இக்கூட்டம் கடவுளை மனதார வணங்குகிறது.

2. சென்னை தென்னிந்திய மகாஜன சங்கத்திற்கு இச்சங்கத்தை கிளைச்சங்கமாக அமைத்துப் பிரதி ஆண்டுதோறும் ரூ 5, கட்டணமாக செலுத்த தீர்மானிக்கிறது.

3. காஞ்சீபுரத்தில் கடந்த தைமீ கூட்ட வேண்டிய தென்னிந்திய செங்குந்தர் இரண்டாவது மகா நாட்டை இதுகாறும் கூட்டாத அசிரத்தையை முன்னிட்டு இக்கூட்டம் வருந்துவதுடன் அதை அதிவிரையில் கூட்டுவதற்கு ஏற்பாடுகளைச் செய்யும்படி தலைச்சங்கத்தை இக்கூட்டம் மன்றாடிக் கேட்டுக்கொள்ளுகிறது.

4. நமது குலமாணவர்கள் கல்வியில் முன்னேறும்பொருட்டு நம்குலாபிமானிகளால் சென்னையில் ஏற்படுத்தி இருக்கும் கல்விநிதிக்கி நம்மால் இயன்ற உதவிசெய்ய வேண்டுமென்று இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

5. நம்மரபினர்கள் சொற்ப வரும்படியை முன்னிட்டு தங்கள் பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்பாமல் இருப்பதற்கு வருந்துவதோடு இனிமேலாவது ஆண்பிள்ளைகளையும் பெண் பிள்ளைகளையும் முறையே 12-14-வயது வரையிலாவது பாட சாலைக்கு அனுப்பும்படிக்கு மிகவும் இக்கூட்டம் மன்றாடி கேட்டுக் கொள்ளுகிறது.

6. நமது முன்னோர்களால் கட்டப்பட்டிருந்த மடங்களையும் சாவடிகளையும் அவர்கள் காலத்தில் ஏற்பட்டிருந்த உற்சவங்களையும் பிறர் கைப்பற்றிவிட்டதை பட்டா பாத்தியங்களைக் காட்டி நமது

158875

அனுபவத்திற்கு கொண்டுவர வேண்டுமென இக் கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது.

7. நம்மூரிலுள்ள சிறுவர்களும் சிறுமிகளும் இலவசமாக கட்டாயக் கல்வி போதிப்பவர்க்கு நம் ஊருக்கென பிரத்தியேகமான ஒரு கல்வி நிதியை ஏற்படுத்த வேண்டுமென்று இக் கூட்டம் நமது சமுதாயத்தாரைக் கேட்டுக் கொள்கிறது.

8. தெய்வத்தின் பேரில் பலி இடுதலும் மதுமாமிசம் உண்ணுதலும் நம் குலத்திற்கு இழிவைத் தருகின்றபடியால் அப்பழக்கங்களை அறவே ஒழிக்க வேண்டும் என்று இக் கூட்டம் தீர்மானிக்கிறது.

9. பொது ஜனங்கள் அதிகமாக பழகி வரும் கடை வீதிகளில் ஆடுகளைக் கொல்லுதலும் ஆட்டிரைச்சியை விற்பதுமான செய்கைகள் பஹிரங்கமாக நடந்து வருவது சுகாதார முறைகளுக்கு மாறுபட்டதாக இருக்கிறபடியால் அதை இனிமேலாவது யூனியன் போர்டார் முதலிய ஸ்தல அதிகாரிகள் கவனித்து ஊருக்கு வெளிப்புரத்தில் இக்கடைகளை நியமிக்க ஏற்பாடு செய்ய இக் கூட்டம் கேட்டுக் கொள்ளுகிறது.

1. நம்மூரில் இப்பொழுது காத்திகை தினம் தோரும் விமரிசையாக நடந்தேரும் குரு பூசையை முன்னிட்டும் நமது குருசுவாமி அவர்கள் கார்த்திகை தினங்களை ஒய்வு நாளாக அனுசரிக்க வேண்டுமென்ற சொல்லிய உத்திரவை முன்னிட்டும் நம் மரபினர் யாவரும் கார்த்திகைத் தினங்களில் தொழில் நிருத்தல் செய்து ஷை குருபூசை விழாவிற்கு வந்து சிறப்புவிக்க வேண்டுமென்று இக் கூட்டம் தீர்மானிக்கிறது.

தீ. மு. ச. தீ. சங்கரபாண்டி முதலியார்,
காரியதரிசி.

---

## மலபார் ஜில்லா

### பாலப்புரம் செங்குந்தர் அபிவிருத்தி சங்கம்

1931 வருஷம் ஜனவரி மாசம் 4-ந்தேதி கூடின சபையின் ரிப்போர்ட்டு.

இச்சங்கத்தின் ஸ்தாபகரும் நம்குலம் முன்னேற்றத்திற்காக ஐக்கிய நாணய சங்கம் ஏற்படுத்தினவரும் மதவிலக்கு சுகாதாரம், முதலியவற்றிற்காக சங்கங்கள் நிருவியவரும், மதுபானத்தை ஒழிக்க மகா விரதம்கொண்ட வைராக்கிய புருஷருமாகிய குலதிலகர் திரு. பி. யன். மந்திரி முதலியார் அவர்கள் தமது அகால மரணகாலத்தில் சங்கத்தாராகிய எங்களுக்கு கட்டளை யிட்டபடி அவருக்கு எங்களூரில் 1928 வருஷம் டிஸம்பர் மாஸத்தில் ஒரு சமாதி கட்டிவைத்தோம்.

அங்கு சமீபத்தில் நடத்திய இரண்டாவது குரு பூஜை சமயத்தில் இச்சங்கத்தின் கூட்டம் ஒன்று கூட்டப்பட்டது. அப்போது, செண்டவாத்திவம், பஜனை பாடல், புராணம் வாசித்தல் முதலான கோஷங்கள் நடத்தப்பட்டன.

தெய்வீகமடைந்த மேற்படியாரது தம்பியாகிய எ. மந்திரி முதலியார் அவர்களும் பொருள் காப்பாளர் T. கருப்பசாமி முதலியார் அவர்களும் குலதிலகர் மந்திரி முதலியார் எடுத்துவந்த விரதத்தை வருஷத்திற்கு ஒரு நாளாவது நிறைவேற்ற வேண்டுமென்று தீர்மானித்து முன் வருஷம் போலவே அன்று பிடி பச்சரிசி சாதமும் இரண்டு பழமும் சாப்பிட்டு பூஜை நிறைவேற்றினர்.

கூட்டத்திற்கு ம-ா-ா-ஸ்ரீ, ஸ்கூல் மாஸ்டர் A. ராமன் எழுலேச்சன் அவர்கள் தலைமை வகித்தனர். தலைவர் பொதுகூட்டத்தின் நோக்கத்தைப் பற்றியும் செங்குந்தர்களின் நடவடிக்கையும் பற்றி தெளிவாகப் பேசினர்.

சங்கத்தலைவர் M. ராமன் முதலியார் அவர்களும் காரியதரிசி A. அங்கப்பன் முதலியார் உபகாரியதரிசி A. மந்திரி முதலியார் அவர்களும் பொருள்காப்பாளர் T. கருப்பசாமி முதலியார் அவர்களும்கூடி நம் குலம் முன்னேற்றத்திற்காக தலைச்சங்கம் செய்துவரும் வேலையைப்பற்றியும், அதற்காக நாம் எடுத்துவரக்கூடிய விஷயங்கள் என்னவென்றும் மற்று கல்வியை உண்டாக்கும் படிக்கு எல்லா ஆண் குழந்தைகளையும் பெண் குழந்தைகளையும் இஸ்கூலுக்கு அனுப்பவேணுமென்றும் தெளிவாகப் பேசினர்கள்.

அதன் பிறகு தமிழ் புலவர்களாகிய கெ. அங்கப்பன் முதலியாரும் கெ. வேலாயுத முதலியாரும்கூடி கல்வியை வளர்க்கவேண்டிய முறைகளைப்பற்றியும் கல்வி இல்லாததினால் வந்துகூடு கிரதோஷங்களைப்பற்றியும் புராண விஷயமாக பேசினர்கள்.

பின் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பெற்றன.

(1) சங்கம் நடத்தின முன் வருஷத்திலுள்ள உத்தியோகஸ்தர்களே தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

(2) இச்சங்கத்தின் அபேட்சைபிரகாரம் யம். அருணசலமுதலியாருக்கு உபகாரச்சம்பளம் அளித்ததிற்காக இச்சங்கம் தலைச்சங்க நிர்வாகிகளுக்கு நன்றிபாராட்டுகின்றது.

(3) மேலும் இவ்வூரிலுள்ள சாது குழந்தைகளுக்கு உபகாரச்சம்பளம் அளித்து ஏழைகளை ஆதரிக்குமாறு தலைச்சங்க நிர்வாகிகளை கேட்டுக் கொள்ளுகிறது.

(4) சென்னை சட்ட சபை நியமனம் செய்ததில் நம்மவரில் ஒருவருக்காகிலும் பிரதிநிதித்துவம் கிடைக்காததில் இச்சங்கம் ரொம்பவும் பரிதாபகரமான நிலைமை அடைகிறது. மேலும் கவர்ன்மெண்டார் அவர்கள் நம்மவருக்கு உதவி அளிக்குமாறு மறுபடியும் கேட்டுக்கொள்ளுகிறது.

(5) மலையாளத்தில் நம்மினத்தவர் வசிக்கும் சுமார் 25 கிராமங்களில் 20000-க்குமேல் ஜனத்தொகையும் வசித்து வருகின்றன. இத்தனை ஜனங்கள் இருந்தும் இதுகான் வரையிலும் தாலூக்கா போர்டு மெம்பராவது கிராம அதிகாரிகளாவது இருந்ததிலையாது. இப்போது பாலப்புறத்தில்



கவர்ன்மெண்டார்களின் தயவினால் யம். ராமன் முதலியார் அவர்களை இவ்வூருக்கு கிராம அதிகாரியாக நிச்சயித்து இப்போது ஒரு வருஷத்திற்கு மேல் ஆகின்றன. இவ்வூர் முன் அதிகாரிக்கு மெத்தவும் வயதானபடியாலும் அவருக்கு வேறு அவகாசிகள் இல்லாமையாலும் யம். ராமன் முதலியார் அவர்களையே திரம் அதிகாரியாக நிச்சயிக்குமாறு தலைச்சங்கத்தார் கவர்ன்மெண்டாருக்கு சிபார்சுசெய்து மேற்படி வேலை யம். ராமன் முதலியார் அவர்களையே ஸ்திரப்படுத்தும்படியாக இச்சங்கம் தலைச்சங்கத்தை கேட்டுக்கொள்ளுகிறது.

(6) இந்த கிராமத்தில் Training கழிந்த மாஸ்டர்மார் இல்லாதபடியால் இவ்வூர் இஸ்கூல் மாஸ்டர் டி. கருப்பசாமி முதலியார் அவர்களை Training படிக்க அனுப்புவதற்கு அவர் மிகவும் சாது குடும்பத்தில்தோன்றினவரானபடியால் அவருக்கு சிலவுக்குமட்டும் வேண்டிவரும் பணத்தை தலைச்சங்கத்தார் கொடுத்துதவுமாறு இச்சங்கம் தீர்சங்கம் மாணிக்கிறது.

(7) காஞ்சீபுரத்தில் நடத்தப்போகிற இரண்டாவது மகா நாட்டுக்கு வேண்டிய பணம் முதலிய காரியத்தில் இச்சங்கமும் வேண்டிய முயற்சிகள் செய்ய வேண்டுமென்றும் அதற்காக செங்குந்த மகா ஜனங்கள் உதவிபுரிய வேண்டுமென்றும் இச்சங்கம் தீர்மானிக்கிறது.

பிறகு சபையில் கூடியவர்கெல்லாருக்கும் தேங்காய்ப்பழம் முதலானது வழங்கப்பட்டு கூட்டம் சுமார் ராத்திரி 11-மணிக்கு வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

A. மந்திரி முதலியார்

பாலப்புரம் 1—1—31 } பாலப்புரம் செங்குந்தர் அபிவிருத்தி சங்கம் காரியதரிசி.

---

## எச்சரிக்கை

சென்ற கார்த்திகை மாத மித்திரனில் கல்லாலம்பூண்டியைச் சேர்ந்த ஒரு சாமியாரின் சரித்திரத்தையும், அதனை நெடுநாள் பிரசுரிக்காமல் வைத்திருந்ததற்காக வந்த ஒரு கண்டனக் கடிதத்தையும், அவற்றின் கீழ்த் தாமதம் ஏற்பட்டதன் காரணத்தை விளக்கி ஒரு குறிப்பையும் வெளியிட்டிருந்தோம். இவ்விஷயத்தில் சந்தேகம் தோன்றியதாலேயே கண்டனக் கடிதத்தையும் பிரசுரித்தோம். யாம் சந்தேகித்தவாறே எல்லாம் மோசமென இப்பொழுது விளங்குகிறது. சாமியார் தன் சரித்திரத்தை வெளியிட வேண்டுமென்று தாமே தம் நண்பர் சிலரை வற்புறுத்தியதாகவும், ஐந்தாறு பேர் கையொப்ப மிட்டதாக எமக்கு அனுப்பிய கண்டனக் கடிதத்தையும் தாமோ தமது மற்ற சிஷ்யர்களோ எழுதி அனுப்பியுள்ளதாகவும் அக் கடிதத்தில் கையொப்ப மிட்டதாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் இரண்டொருவர் தமக்கு அக்கண்டனக் கடிதத்தைப் பற்றி யாதொரு தகவலும் தெரியாதென்றும், அவ்வித சந்தாக்களையும் நிறுத்திவிடுவோ மென்று பயமுறுத்தியது சாமியார் மீட்டலே என்றும், அம்மீட்டில் கடிதம் கல்லாலம்பூண்டி வாசிகளைப் பற்றி மற்றையோர் தப்பபிப்பிராயங் கொள்ளும்படி வைத்ததற்காகத் தாம் பெரிதும் வருந்துவதாகவும், இவ்விஷயத்தில் தாங்கள் நிரபராதிகள் என்பதை எமக்குத் தெரிவித்துக் கொள்ளப் பெரிதும் விரும்புவதாகவும் எமக்கு எழுதி யுள்ளனர். சாமியார் சாலங்களைக் கண்டு அன்பர்கள் மயங்காதிருக்குமாறு எச்சரிக்கை செய்கிறோம்.

---

## செங்குந்த மித்திரன் மூன்றாவது போட்டிப் பரிக்ஷை

நமது மித்திரனில் அச்சிட்டால் மூன்று பக்கங்களுக்கு வரும்படி மார்ச்சுமாதம் 20-தேதிக்குள் கீழ்க்காணும் விஷயத்தைப்பற்றித் தமிழில் எழுதி வரும் முதல் தரமான வியாசத்துக்கு பத்து ரூபாய் பரிசு அளிக்கத் தீர்மானித்துள்ளோம்.

### விஷயம்

செங்குந்தர்டையே உள்ள கட்சிகளும் அவற்றால் வரும் கேடுகளும் அவற்றை யொழிக்கும் வழிகளும்.

வியாசங்களைச் "செங்குந்த மித்திரன் பத்திரிகாசிரியர், கீழ்ப்பாக்கம், சென்னை" என்னும் விலாசத்துக்கு அனுப்பவேண்டும்.

---

## குறிப்பு.

நமது மித்திரன் சந்தா பாக்கிகளை வசூல் செய்வதற்கு நமது பிரசாரகர் திரு. க. திருநாவுக்கரசு முதலியார் அவர்கள் தற்போது தஞ்சை திரிசிராப்பள்ளி ஜில்லாக்களில் சுற்றுப் பிரயாணஞ் செய்துகொண்டிருக்கின்றனர். அவரிடம் சந்தா தொகைகளைப் பாக்கி வைத்துக் கொள்ளாமல் கொடுத்துவிடும்படி அன்பர்களை வேண்டிக் கொள்ளுகிறோம்.

ம. சண்முகசுந்தரம்,
ஆசிரியர்.

# இரண்டாவது மகா நாட்டுக்கு வரவு விவரங்களின்

## முதல் ஜாபிதா

காஞ்சீபுரம் தரிவரி வசூல்

| | |
|---|---|
| **கிருஷ்ணராயர் தெரு** | |
| முனிகாளத்தி முதலியார் மூலம் | 14—0—0 |
| தாண்டவராய முதலியார் மூலம் | 8—0—0 |
| கச்சபாலய முதலியார் மூலம் | 16—8—0 |
| மு. பரமானந்த முதலியார் மூலம் | 7—8—0 |
| முத்து காளத்தி முதலியார் மூலம் | 13—0—0 |
| அப்பாயி முதலியார் மூலம் | 5—8—0 |
| **திருமேற்றளித் தெரு** | |
| பு. ஆறுமுக முதலியார் மூலம் | 39—0—0 |
| சரவண முதலியார் மூலம் | 16—8—0 |
| **சோளீஸ்வரன் கோவில் தெரு** | |
| வை. வினைதீர்த்தான் முதலியார் மூலம் | 27—8—0 |
| கச்சியப்பப்பன் தெரு | 22—0—0 |
| வடவண்டை ஒற்றவாடை | 6—0—0 |
| திருவேகம்பன் தெரு | 36—0—0 |
| புதுத்தெரு | 24—0—0 |
| **திருமல்ராஜா தெரு** | |
| தா. வேலாயுத முதலியார் மூலம் | 16—0—0 |
| வே. மு. முனிசாமி முதலியார் மூலம் | 10—8—0 |
| மாதனம்பாளையத்தெரு வசூல் | 52—8—0 |
| **அக்கணம்பாளையத் தெரு** | |
| தணிகைமலை முதலியார் மூலம் | 31—8—0 |
| முனிசாமி முதலியார் மூலம் | 28—0—0 |
| **ஆலடிப் பிள்ளையார் கோவில் தெரு** | |
| தி. தேவராய முதலியார் மூலம் | 37—0—0 |
| ம. சு. கந்தசாமி முதலியார் மூலம் | 21—0—0 |
| **வளத்தீஸ்வரன் கோவில் தெரு** | |
| மு. காளத்தி முதலியார் மூலம் | 33—8—0 |
| **கருக்கினிலமர்ந்தவள் தெரு** | |
| அருணாசல முதலியார் மூலம் | 13—0—0 |
| ராஜகோபால் முதலியார் மூலம் | 1—8—0 |
| கச்சபாலய முதலியார் மூலம் | 2—8—0 |
| திருப்புலிவனம் வசூல் | 10—0—0 |
| தண்டரை கிராம வசூல் | 4—0—0 |

### நன் கொடை கையொப்பம்

### காஞ்சீபுரம்

| | |
|---|---|
| சித்தி விநாயகர் | 1—0—0 |
| தி. நா. சபாபதி முதலியார் | 25—0—0 |
| **ஆடிசன் பேட்டை** | |
| ஜவுளி. ம. கெங்காதர முதலியார் | 100—0—0 |
| ,, கா. ஆ. பழனிசாமி முதலியார் | 50—0—0 |
| ,, வெ. மு. கந்தசாமி முதலியார் | 25—0—0 |
| ,, மா. க. சோமசுந்தர முதலியார் | 25—0—0 |
| ஜவுளி ,, பி. செ. சம்பந்த முதலியார் | 15—0—0 |
| ,, வே. முனிசாமி முதலியார் | 10—0—0 |
| ,, சீ. முனியப்ப முதலியார் | 10—0—0 |
| ,, வ. வெங்கடாசல முதலியார் | 5—0—0 |
| **ஆலடிப் பிள்ளையார் கோவில் தெரு** | |
| நா. அருணகிரி முதலியார் | 10—0—0 |
| கு. பச்சையப்ப முதலியார் | 5—0—0 |
| த. மு. ஆறுமுக முதலியார் | 5—0—0 |
| **நாராயணம்பாளையத் தெரு** | |
| வெ. மு. முருகேச முதலியார் | 20—0—0 |
| வீ. ரத்தின முதலியார் | 10—0—0 |
| அ. மார்க்க சகாய முதலியார் | 10—0—0 |
| **தோப்புத் தெரு** | |
| க. ச. கன்னியப்ப முதலியார் | 15—0—0 |
| **விளக்கொளிக் கோவில் தெரு** | |
| அ. பச்சையப்ப முதலியார் | 15—0—0 |
| மு. பச்சையப்ப முதலியார் | 10—0—0 |
| **கருக்கினிலமர்ந்தவள் தெரு** | |
| மு. கச்சபாலய முதலியார் | 10—0—0 |
| லோ. சுப்பிரமணிய முதலியார் | 5—0—0 |
| ஆநந்த முதலியார் | 5—0—0 |
| **அக்கணம் பாளையத் தெரு** | |
| ம. த. சாமிநாத முதலியார் | 25—0—0 |
| **புதுப்பாளையத் தெரு** | |
| S. K. சின்னகுழந்தை முதலியார் | 20—0—0 |
| **மண்டபத் தெரு** | |
| விஜயரங்க முதலியார் | 10—0—0 |
| தீ. தா. சண்முக முதலியார் | 5—0—0 |
| **ஒற்றைவாடை** | |
| ச. சிவஸ்வாமி தேசிகர் | 10—0—0 |
| **அய்யங்கார் பாளையத் தெரு** | |
| கச்சி. ஏகாம்பர முதலியார் | 25—0—0 |
| கு. ச. கதிர்வேலு முதலியார் | 5—0—0 |
| மா. அன்னப்ப முவலியார் | 5—0—0 |
| ரா. குப்புசாமி முதலியார் | 5—0—0 |
| **திருப்புலிவனம் கிராமம்** | |
| வே. சு. வையாபுரி முதலியார் | 10—0—0 |
| அருணாசல முதலியார் | 5—0—0 |
| செம்பாக்கம் தி. சித்தம்பல முதலியார் | 5—0—0 |
| ...தன் முதலியார் | 10—0—0 |
| **சென்னை திருவல்லிக்கேணி.** | |
| ஜவுளி சி. மாணிக்க முதலியார் | 5—0—0 |
| **சென்னை எழும்பூர்** | |
| A. சரவண முதலியார், B. A. | 5—0—0 |
| எழும்பூர் | 3—0—0 |

...விளம்பர சபையினர்.

158695

ஐயா, ராசிப்பாளையம் கிராமம்

மின்சார ரசம் வாங்கி 4½-வருஷமாக இருந்த விப்புருதி 10-நாட்களுக்குள் புண் ஆறிப் போனபடியால் தயவு செய்து இன்னும் ஒரு புட்டி அனுப்புங்கள்.

த. அ. அங்கப்ப தேவர், சூலூர் போஸ்டு.

12-9-29 செம்மணப்பட்டி.

ஐயா, ** மின்சார ரசத்தை எருமை வெண்ணெயில் கலந்து சாப்பிட்டதில் வெள்ளை, வெட்டை சவுகியமாய் விட்டது. தயவு செய்து 3-புட்டி அனுப்புங்கள்.

தொந்தி செட்டியார், வாடிபட்டி போஸ்டு.

# மின்சார ரசம்

சகல ரோகங்களுக்கும் தேவர்மிர்தம் போன்றதென ஜகப்பிரசித்திப் பெற்றது.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாத பொக்கிஷம்.

புட்டி 1-க்கு ரூ. 2. தபால் சார்ஜ் வேறு

விலாசம்:— கேட்லாக் இனும்.

மின்சார ரசம் கம்பெனி (லிட்) சேலம்

ஐயா, ஆரணி 21-5-29

** 6-மேலோ மின்சார ரசம் மருந்தில் கால் விழுந்து கிடந்த நோய் தீர்ந்தது இன்னும் 2-பாட்டல் அனுப்புங்கள்

M. A. அளவந்தார் பாகவதர், பிந்சல் தெரு.

ஐயா Champion Reefs, 27-1-30

என் மனைவிக்கு 7 வருஷ காலமாக என்னால் இயன்ற வரை ஏராளமான பணத்தைச் செலவு செய்து தீராமலிருந்த வியாதி தங்கள் மின்சார ரசத்தினால் சௌக்கியமாய் விட்டது இன்னும் ஒரு பாட்டல் அனுப்புங்கள்.

R. V. Kattamari ,G. Block, 53rd Line

### மதன சுந்தரி மாத்திரைகள்

இம்மாத்திரையை உட்கொண்டவர்களுக்கு சிற்றின்பம் இன்னதெனப் பூர்த்தியாய் விளங்கும். இந்திரபோகத்தைத் தரும். ஆண் தன்மை அன்றியவர்களுக்கும் சக்தி இல்லாதவர்களுக்கும் இதுசஞ்சீவிபோன்றது. தேக வலிமை நரம்புகளுக்குச் சக்தியும் உண்டாக்குவதன்றி இருபாலார்க்கும் இன்பத்தை யுண்டாக்கும். ஒரு தடவை இம்மாத்திரைகளை உண்டு அனுபவித்தவர்களுக்கு நாங்கள் மறுபடியும் சொல்ல வேண்டுவது இல்லை. இதுவே தேவாமிர்தம்.

இதன் விலை டப்பி 1-க்கு ரூ. 1—0—0

தபால் செலவு பிரத்தியேகம்

ரூபிஸ் பெஸிபிக் ஔஷதாலயம்,


நெ. 30, நம்மாழ்வார் தெரு, மதராஸ்.

### நமது தலைவர்களின் அழகிய போட்டோ படங்கள்

| தபாற்செலவு உள்பட விலை | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| ஒட்டக்கூத்தர் ... | 1 | 4 | 0 |
| தலைச்சங்க நிர்வாக சபை அங்கத்தினர் (22-பேர் கொண்ட படம்) .... | 2 | 8 | 0 |
| ம. சண்முக சுந்தர முதலியார், எம். ஏ., எல். டி., (செங்குந்த மித்திரன் ஆசிரியர்) ... | 1 | 8 | 0 |
| தலைச்சங்கப்பிரசாரகர்கள் .... | 1 | 8 | 0 |

மானேஜர், செங்குந்த மித்திரன் ஆபீஸ், சிந்தாதிரிப்பேட்டை... கிடைப்பாககம், சென்னை.

ஒவ்வொருவருக்கும் ...யுள்ளது:




வியாபாரிகளுக்கு நல்ல லாபம் தரக்கூடியது நமது

# தேவரசம்

(புட்டி 1-க்கு ரூ. 1—4) (புட்டி 1-க்கு ரூ. 1—4)

எல்லாவிதமான ஜுரங்கள் க்ஷயம், காசம், இருமல், மூச்சுத் திணருதல், ஜலதோஷம், தலைவலி, மடை இடி, ஒத்தத் தலைவலி, கை கால் குடைச்சல், இடுப்பு வலி, நெஞ்சு வலி, வாய்வு சம்பந்த வ்திகள், வாத ரோகம், பிளேக்கு, காலரா, அஜீரணம். வயிற்றுப் போக்கு, வயிற்று வலி, பல்வலி ...ற்றம், வாய்புண், வாந்தி, அசதி, ஜன்னி, சூதக ஜன்னி முதலிய திடீரென்று ஏற்படும் ...ாவித வியாதிகளுக்கும் உடனே உபயோகப்படுத்தலாம். ஒரு தரம் பரீக்ஷை பாருங்கள். உங்கள் ...ல் வியாபாரிகளிடம் கேழ்க்கவும். கிடைக்காவிட்டால், உடனே எங்களுக்கு எழுதிப் பெற்றுக் ...ாள்ளவும்.

விலை புட்டி, ரூ. 1—4—0 V. P. வேறு




## தேவாமிர்தம்.

குடலைப்பற்றிய எல்லா வியாதிகளையும் போக்கும். அன்றாடம் மலப்பிரவர்த்தியை கிரமமாகச் செய்யும். குன்மம் மூலாதார உஷ்ணம், மூலமுளை, மூலத்தில் ரத்தம் வருதல், மலச்சிக்கல் முதலிய வியாதிகளைப் போக்கும். விவரம் கேட்டாக் பார்க்கவும். 1 சேர் டின் ரூ. 2—0—0.

## மதனசிந்தாமணி லேகியம்

அபாரமான தாதுபுஷ்டியையும், கீடித்த போக சக்தியையையும், இழந்த ஆண்மையும் பரமானந்த சந்தோஷத்தையும் கொடுக்கும்.

ஒரு சேர் டின் 1-க்கு ரூ. 2—8—0 V. P. வேறு.




## டாக்டர் எஸ். பி. வைத்தியசாலை.

### தபால் பெட்டி நெ. 169, 149, பிராட்வே, மதராஸ்.

குறிப்பு:—நமது செங்குந்த மரபினரான, டாக்டர் S. பழனியப்ப முதலியாரால் தயார் செய்யப்படும் மருந்துகள் மிகவும் மேலான குணத்தைக் கொடுப்பதால் எல்லோரையும் உபயோகிக்குமாறு சிபார்சு செய்கிறேன். ஆசிரியர் ம. ஷண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி., மதராஸ்

This Journal is published by T. N. Sabapathi Mudaliar for the South Indian Senguntha Mahajana Sangam, Madras, at 31, Armenian St., Madras, and is printed by A. Rangaswamy, at The Progressive Printers, 2-17, Coral Merchant St., Madras.

தமிழ்நாடு ஆவணக்காப்பக நூலகம்,
எழும்பூர், சென்னை-600 008.

தவணைத்தாள்.

சே எண் : ப. எண் :

| வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) | வழங்கிய நாள். (1) | திரும்பிய நாள். (2) |
|---|---|---|---|
| | | | |

S.F. 259A-6—1,00,000—30-1-84.